# வியாதியா?! மரணமா!?



**Rev.Dr.A.சேவியர்**
B.Sc.M.A.(Theo).D.D.
( சுவிஷேசகர்,போதகர்,எழுத்தாளர் )

# வியாதியா?! மரணமா!?

ஆசிரியர்

**Rev. Dr. A. சேவியர்** B.Sc., M.A, (Theology), D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)

**2015**

**மறு**

**வெளியீடு**

**"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"**

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrust

www.endtimedeliverance.com; e-mail:-info@deliverance.com

# வியாதியா?! மரணமா?!

First Edition : 2001
Second Edition : 2008
Third Edition : 2015
Total Copies : 1000
Book Serial No : 04/09

காணிக்கை : ₹ 40/-

**Copy right :**

End Time Deliverance Ministry Trust

**Sponsored by :**

**Pastor. John Ramesh**

No. 4, Selvam Nagar,
Lakshmipuram, Kolathur,
Chennai - 600 099.
Cell : 98844 27472

Printed by :

**Sathyam Achaham**

No. 109, M.T.H. Road, Villivakkam,
Chennai - 600 049. Ph: 044 31004200
Email : sathyamachaham@gmail.com

# முன்னுரை

## விசுவாசம் வெற்றியைத் தரும்

"பிரியமானவனே! உன் ஆத்மா வாழ்கிறது போல, நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்."

"நீடித்த நாட்களால் அவனை திருப்தியாக்கி என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்."

"வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை."

(3 யோ. 2; சங். 91:16; ஏசா. 33:24)

*வாசியுங்கள் ! விசுவாசியுங்கள் !*

*ஆசீர்வாதம் பெறுங்கள் !*

*இயேசு சீக்கிரம் வருகிறார் !*

*ஆயத்தமாவோம் !! ஆயத்தமாக்குவோம் !!!*

சென்னை

நவம்பர் 2015

**- ஆசிரியர்**

**குறிப்பு :**

இது குறித்து எந்த சந்தேகமோ, கேள்வியோ இருந்தால், தயவுசெய்து ஆசிரியரிடம் எப்போதும் கேட்கலாம்; அவர் நடத்தும் கூட்டங்களில் கேள்விகளோடு வரலாம்; மாத இதழுக்கும் எழுதி அனுப்பலாம்.

# பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1) | இரட்சிக்கப்பட்டவர்களுக்கு பரம்பரை வியாதிகள் தொடருமா? | 79 |
| 2) | உங்களுக்குத் தெரியுமா? | 20 |
| 3) | உடல் ஊனமோ, வியாதியோ, வறுமையோ வருவது தேவநாமம் மகிமைப்படவா? | 30 |
| 4) | எல்லா நோய்களையும் நீக்குவேன் என்றவர் எலிசா போன்றோரின் வியாதியை ஏன் நீக்கவில்லை? | 48 |
| 5) | கிறிஸ்தவனே! வியாதி ஏன் உன்னை விட்டு விலகவில்லை? | 74 |
| 6) | குருடர்களை செவிடர்களை தேவன் படைக்கிறாரா? | 32 |
| 7) | சரீர மரணத்தைப் பற்றி | 57 |
| 8) | தீராத வியாதியும் உண்டோ? | 24 |
| 9) | தெய்வீக சுகம் என்றால் என்ன? | 84 |
| 10) | தேவனின் சிட்சை யாருக்கு? எப்படி? | 22 |
| 11) | தேவன் தரும் சிட்சை பொல்லாங்கானதா? | 18 |
| 12) | தேவன் தரும் வியாதியும் உண்டோ? | 27 |
| 13) | தேவன் நம்மைப் புடமிடுகிறாரா? | 53 |
| 14) | பவுலின் கண்ணைக் குருடாக்கியது தேவனா? | 42 |
| 15) | பவுலுக்கு மாம்சத்திலே முள் | 19 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 16) | பரிசுத்தமானவர்களுக்கு அகால மரணம் ஏன்? ....... | 72 |
| 17) | பாவத்தின் சம்பளம் மரணமா? ........................ | 55 |
| 18) | பெலவீனமும் நோயும் ஒன்றா? ........................ | 77 |
| 19) | மரணத்திற்குப் பின்னும் வாழ்வா? .................... | 70 |
| 20) | மரணம் சாபமா? அது சிலுவையில் ஒழிந்ததா? ...... | 64 |
| 21) | மரணம் நேரிடுவது தெரியுமா? ........................ | 69 |
| 22) | மரணம் வருவது பிசாசினாலா? ........................ | 67 |
| 23) | விசுவாசமே வியாதிக்கு மருந்து ........................ | 37 |
| 24) | விசுவாசியே! உனக்குமா இந்த வியாதி? ............ | 81 |
| 25) | வியாதியும் மரணமும் தேவனின் மகிமையா? ......... | 21 |
| 26) | வியாதியைப் பற்றி இன்னும் விளக்கம் ................ | 49 |
| 27) | வியாதியைப் பற்றிய சந்தேகம்! ........................ | 16 |
| 28) | வியாதி ஏன் விலக மறுக்கிறது? ........................ | 44 |
| 29) | வியாதி தேவனின் சிட்சையா? ........................ | 7 |
| 30) | வியாதி பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் ... | 26 |
| 31) | ஜெபித்தாலும் வியாதி நீங்கவில்லையே ஏன்? ........ | 35 |
| 32) | **Heart Attack and Heart Failure** (மாரடைப்பும், இருதயம் நின்று போதலும்) .......... | 87 |
| 33) | வியாதி வரக் காரணமென்ன? I ........................ | 90 |
| | வியாதி வரக் காரணமென்ன? II ........................ | 93 |

# இந்த மாத “விசுவாச முழக்கம்” வாசித்தீர்களா?

## நமது ஊழியங்கள்

1. “விசுவாச முழக்கம்” பத்திரிக்கை ஊழியம்
2. “விடுதலை கிறிஸ்துவின் சபைகள்”
3. “சேவியர் இறையியல் பயிலகம்” - பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும் (காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை)
6. வெப்சைட், சி.டி. ஆராய்ச்சி புத்தகங்கள், Facebook, you tube, Whatsapp ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

# 1. வியாதி தேவனின் சிட்சையா?

தேவனுடைய பிள்ளைகளைத் திருத்த, பரிசுத்தப்படுத்த, புத்தி புகட்ட தேவன் வியாதியைக் கொடுக்கிறார் என்று பலர் எண்ணுகின்றனர்.

1 யோ. 3:8 சொல்கிறது :- "பிசாசினுடைய கிரியை அழிக்கும் படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்." (பார்க்க யோ. 10:10)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அழித்தவை ஒழித்தவை எல்லாம் பிசாசினுடைய கிரியைகள் என்று விளங்குகின்றது. அவற்றில் சில.

1. "நம்முடைய பலவீனங்களை ஏற்றுக் கொண்டு நம்முடைய நோய்களை சுமந்தார்" - மத். 8:13

2. "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை (KHOLEE வியாதிகள்) ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களை (நோவு) சுமந்தார்" - ஏசா. 53:4.

3. "நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" - பேதுரு 2:24; சங். 103:3.

ஆக, பாவங்களையும், அவைகளோடு கூடிய வியாதிகளையும் தேவன் சிலுவையில் சுமந்து தீர்த்தார்; தம்முடைய தழும்புகளால் தெய்வீக சுகம் தந்தார் என அறிகிறோம்.

"சாராயம் குடிக்கக் கூடாது; குடிப்பது தவறு" என்று தன் மகனிடம் கண்டித்து உணர்த்தும் ஒரு தகப்பன், தன் மகனுக்கு புத்தி புகட்ட வேண்டும் என்பதற்காய் சாராயம் குடிக்கச் சொல்லி, அதன் வேதனையை அனுபவித்து உணரச் சொல்லி, சோதனை நடத்துவாரா? சிட்சிப்பாரா? எந்த ஒரு தகப்பனும் அப்படிச் செய்வதில்லை. மாமிசப் பிரகாரமான தகப்பனே தன்னால் தவறு என்று உணர்ந்ததை மறுபடியும் கொடுத்து சிட்சியாத போது, ஆவிக்குரிய அப்பாவாகிய நம்முடைய தேவன் சிலுவையில் இரத்தம் சிந்தி ஒழித்ததை மீண்டும் தருவாரா? அப்படித் தந்தால் அவர் சிலுவையில் ஒழித்தது வீணாயிற்றே!

அப்படியே, உன்னை ஸ்திரப்படுத்த, தேவனே வியாதியை தந்தால் நீ அதற்கு எதிர்த்து நிற்கக் கூடாது அல்லவா! பின்பு ஏன் வியாதி வந்ததும் டாக்டரிடம் போய் சுகப்படுத்தி கொள்கிறாய்? அல்லது அதற்கேற்ற கஷாயங்களை உணவு வகைகளை சாப்பிட்டுக் குணப்படுத்திக் கொள்கிறாய்? அல்லது தேவனிடம் ஜெபிக்கிறாய்?

கர்த்தர் கற்பித்த ஜெபத்தில் "உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல் பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று உள்ளதே, நாம் போகப் போகும் பரலோகத்தில் சோதனை உண்டா? வியாதிகள் உண்டா? வேதனைகள் உண்டா? இல்லையே! (வெளி. 7:16, 17; 21:4 ஏசா. 25:8) அப்படித்தானே பூலோகத்திலுள்ள தம்முடைய ராஜ்யத்துக்குட்பட்ட பிள்ளைகளுக்கும் செய்ய அவர் சித்தம் கொண்டுள்ளார். அப்படியிருக்க, தேவன் தன் சித்தத்திற்கு மாறாக வியாதியைத் தருவாரா?

அப்படியென்றால் தேவனுடைய பிள்ளைகளுக்கு வியாதி ஏன் வருகிறது? **தேவன் தாமே அனுமதிக்கிறாரா?** இது கேள்வி. தேவன் மனிதனின் பாவத்தை சிலுவையில் அழித்து அவனை இரட்சித்தாரே, அவன் மீண்டும் ஏன் பாவம் செய்கிறான்? (1 யோ. : 8-10) தேவன் பாவம் செய்ய அனுமதி கொடுத்தாரா? இல்லையே!.... மனிதனே செய்கிறான்; தன் சுயதீனத்தின் படியே செய்கிறான். Man allows: God allows. அவ்வளவு தான்.

மனிதனை நரகத்திலிருந்து மீட்கவே தேவன் உலகத்தில் வந்தார் (யோ 3:16) ஆனாலும் கோடிக் கணக்கானோர் நரகத்தின் வாசலில் இருக்கிறார்களே, தேவன் அப்படி இருக்கச் சொன்னாரா? அல்லது அனுமதித்தாரா? மனிதனே செய்கிறான் தனக்குள்ள சுதந்திரத்தின்படி. Man allows; God allows; அவ்வளவுதான். அப்படித்தான் வியாதியும். தேவன் கொடுப்பதுமில்லை அனுமதிப்பதுமில்லை. மனிதனே தன் இஷ்டப்படி பெற்றுக் கொள்கிறான். ஆதாம் பாவம் செய்தான்; கடவுளின் அனுமதியோடா, இஷ்டத்தோடா பாவம் செய்தான்? இல்லையே... அப்படி அவன் செய்து இருந்தால் உலகில் சாபமே வராது; பாவத்தையும் சாபத்தையும், நோய்களையும் நீக்க கிறிஸ்து இயேசு உலகில் பிறக்கவே தேவையிருக்காது. உதாரணமாய் ஒன்று சொல்கிறேன்:- ஒரு பேங்கில் கொள்ளை நடக்கிறது என்றால் கொள்ளை நடக்க அனுமதிப்பவன் மானேஜரா? இல்லையே.... காவலாளியின் ஒரு துளி கவனக் குறைவால் தானே கொள்ளையர்கள் பேங்கில் நுழைகிறார்கள். காவலாளி ஒழுங்காய் கடமை செய்ய வேண்டு மென்று புத்தி புகட்ட, மேனேஜரே கொள்ளையர்களை அனுப்பி

கொள்ளையடித்துப் போகச் செய்வாரா? இல்லையே! புத்திபுகட்டல் நிச்சயமாய் இப்படி இராதே!

"தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல; ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல (Temptation) அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" - யாக். 1 :13-14. நன்மையான ஈவுதான் தேவன் கொடுப்பது. யாக். 1:17; 2 கொரி. 11:3; 1 பேதுரு 5:8; 2 கொரி. 2:11; வெளி. 2:9; 20:8; யோ. 10 : 10 மற்றும் பல வேதவசனங்களின்படி, மனிதனை சோதனைக்குட்படுத்துகிறவன் பிசாசு; மோசம் போக்குகிறவன் பிசாசு; வியாதியைக் கொடுத்து அழிக்கிறவன் பிசாசு.

அந்த பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் (1 பேதுரு 5:9; யாக். 4:7) தேவனின் சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள் (எபே. 6:11) பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள் (எபே. 4:27) நீங்கள் பிசாசின் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் (மத். 26 : 4) விசுவாசத்தில் நிலைத்திருங்கள்; புருஷராயிருங்கள்; திடன் கொள்ளுங்கள் (1 கொரி. 16:13)

தூங்குகிற நீ மரித்தோரைவிட்டு எழுந்திரு (எபே. 5:14)

உன்னதமானவரின் மறைவிலிரு (சங். 91)

தேவனுக்கு நேராய் ஏறிட்டிரு (சங். 21);

அப்பொழுது வியாதி இல்லை; வேதனை இல்லை; சோதனை இல்லை; வெற்றியே உண்டு.

"சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக" (யாக். 1 : 13) என்று வேதம் சொல்லுகிறது. தேவன் பரீட்சை தான் பார்ப்பார். அந்தப் பரீட்சை பொல்லாங்கினால் இருக்கவே இருக்காது; அதைத்தான் அவர் சிலுவையில் ஒழித்தாரே! லாசருவின் கல்லறையின் முன் நின்று விசுவாசத்தை அவர் சோதனை செய்யவில்லை; கல்லைப் புரட்டுங்கள் என்று பரீட்சை பார்த்தார். கல்லைப் புரட்டாமலே லாசரை அவரால் எழுப்ப முடியுமே! "ஆபிரகாமை தேவன் சோதித்தார்" (ஆதி. 22 :1) என்று வேதம் சொல்கிறதே என்று சொல்வோரும் உண்டு. மூலபாஷையில் பார்த்தால் தெரியும். "God proclaimed Abraham" என்று உள்ளது. அதாவது தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை பிரகடனப்படுத்தினார்: பிரசித்திப்படுத்தினார். பொல்லாங்கினால் இதை செய்யவில்லையே! ஈசாக்கை சாகடித்து செய்யவில்லையே! பொல்லாங்காகிய மரணம் ஈசாக்குக்கு வரும்போது தடுத்தவர் நம்தேவன் அன்றோ? (ஆதி. 22:15).

"யோபுவை சோதிக்க தேவன் அனுமதி கொடுத்தாரே அது போல தேவன் பிசாசுக்கு அனுமதி கொடுப்பார்" என்று சொல்வோரும் உண்டு. யோபு 1:12; 2:6 வசனங்களை வைத்துக் கொண்டு தேவன் அனுமதி கொடுத்தார் என்கின்றனர். மொத்தத்தில் பிசாசுக்கு முழு அதிகாரமும் இந்த உலகில் இருக்கும்போது, அனுமதி பிரத்தியேகமாக ஏன் கொடுக்க வேண்டும்? **சோதிக்க அனுமதியும் கொடுத்துவிட்டு, சோதனையில் மனிதன் வேதனைப்படும் போது வந்து இரட்சிப்பும் கொடுத்தாரானால்; தேவன் செய்கிற வேலை நாரதர் வேலை போல இல்லையா?** பிள்ளையையும் கிள்ளி விட்டு, தொட்டிலையும் ஆட்டி விடுவது போல் இல்லையா? தேவன் சொன்னதை மறுபடியும் பாருங்கள்:- "இதோ அவனுக்கு உண்டானவை எல்லாம் உன் கையிலிருக்கிறது" (யோபு 1:12) "இதோ அவன் உன் கையிலிருக்கிறான்" (யோபு 2:6) யோபுவின் அனைத்து சம்பத்தும், ஏன் யோபுவின் சரீரம்கூட பிசாசின் கையில் தான் இருக்கிறது. இந்த உலகத்துக்கு அதிபதியே பிசாசுதானே. இயேசுவிடம் பிசாசு லூக். 4 :6ல் சொன்னதும் இது தானே.

இரட்சிக்கப்பட்டவர்களாகிய நமது உடமையும், நாமும் தப்பித் தவறியும் பிசாசின் கையில் இருந்தால், தேவனிடமிருந்து நமக்கும் உலகப் பிரகாரமான பாதுகாப்பே இராது; பிசாசு யோபுவைச் செய்ததுபோல செய்வான், யோபு இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளை என்பதால் மாத்திரமே, அவன் ஜீவனின் மேல் தேவன் அக்கறையாய் இருந்தார். இப்படித்தான் இரட்சிக்கப்பட்ட எல்லா பிள்ளைகளின் ஜீவன் மேலும் தேவன் மிகவும் கவனமாய் இருக்கிறார்.

**யோபு, பிசாசின் கையில் இருந்தான் என்று உணர வெளிக் காட்டும் வசனங்களில் சில:-**

1. "விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாய் இருக்க நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்; இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்ற மத். 12:34ன் படி இருதயத்தின் நிறைவினால் தவறான அறிக்கை யோபு செய்தான். அதில் ஒன்று: "கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்; கர்த்தருக்கு தோத்திரம் (யோபு 1:21). "நம் தேவன் கொடுத்துக் கொடுத்து சிவந்த கரத்தாரே ஒழிய எடுத்து சிவந்தவர் அல்ல." "இஸ்ரவேலை ஆசிர்வதிப்பதே அவருக்கு பிரியமான காரியம்" சாபத்தை கூட்டி கொள்வது நீ! "நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது" (யோபு 3:25) "நான் நீதிமானாயிருந்தாலும் அவரோடே வழக்காடாமல் என் நியாதிபதியினிடத்தில் இரக்கத்துக்கு கெஞ்சுவேன்"

(யோபு 9:15). "முகாந்திரமில்லாமல் அநேகம் காயங்களை எனக்கு உண்டாக்குகிறார்" (யோபு 9:17) "நீர் என்னைக் கர்ப்பத்திலிருந்து புறப்படப் பண்ணினது என்ன? ஒரு கண்ணும் என்னை காணாதப்படி நான் அப்பொழுதே ஜீவித்து போனால் நலமாமே" (யோபு 10:18). நான் சற்று இளைப்பாறும் படி நீர் என்னை விட்டு ஓய்ந்திரும். (யோபு 10:22). "என்னிலிருந்து என் மகிமையை அவர் உரிந்து கொண்டு என் சிரசின் கிரீடத்தை எடுத்துப் போட்டார்; அவர் என்னை நான்கு புறத்திலும் நாசமாக்கினார். என் நம்பிக்கையை ஒரு செடியைப் போல பிடுங்கிப் போட்டார்;" (யோபு 19: 9, 10) இப்படி ஏராளமான தவறான அறிக்கைகளை யோபு வெளியிட்டான் : காரணம்,

அவனுக்குள் இருந்த தவறான விசுவாசம். அவன் விசுவாசத்தின் படியே அவனுக்கு ஆயிற்று.

2. உலகத்திலிருக்கிறவனிலும் எனக்குள் இருக்கிறவர் பெரியவர் (யோபு 4:4) என்று சொல்லாமல், பிசாசை "Mighty" என்கிறார் யோபு. தேவன் ஒருவரே Mighty God. (Redeem me from the hand of the mighty - யோபு 6:23) இந்த வசனத்தின்படி அவன் பிசாசின் கைக்குள் இருக்கிறேன் என்று அறிக்கையிடுகிறான். அல்லேலூயா! (Refer யோபு 1:12; 2:6)

3. தன் பிள்ளைகள் செய்யும் பாவங்களுக்கு தானே பலி செலுத்துகிறான். அடுத்தவர்கள், அதுவும் வயதுக்கு வந்தவர்கள் செய்யும் பாவங்களுக்கு நாம் மன்னிப்பு கேட்க கூடாதே! இது புற ஜாதியார் வழக்கமாயிற்றே! (யோபு 1:5)

4. யோபு தனக்கு தெரியாததையும் தன்புத்திக்கு எட்டாததையும் தான் அறியாததையும் அலப்பினான். இதை அவனே ஒத்துக் கொண்டு தேவனிடம் வேண்டுகின்றான். (யோபு 42:3)

5. தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்: நீர் செய்ய நினைத்தது தடை படாது என்பதை அறிந்திருக்கிறேன் (யோபு 42:2) என்று அவன் சொன்னான். தேவன் அவனின் மனஸ்தாபத்தை உணர்ந்து விசுவாசக் குறைவினால் **"பிசாசின் கைக்குள் இருந்த யோபுவின் சிறையிருப்பை"** (யோபு 42:10) மாற்றி தான் செய்ய நினைத்தபடி இரட்டத்தனையாய் பொருளாதாரத்தில் மட்டும் (in prosperity only) ஆசீர்வதித்தார்.

6. பிசாசு சாட்டுகின்ற குற்றம் தொடர்ந்து நடந்தாலும், தேவன் மன்னிக்கிறவராயிருந்து, "என் மகன் ஆபிரகாமின் சந்ததி; சோதனைக்குப் பயப்படான்" என்றல்லவா சொல்வார். சோதிக்க வேண்டாமென்றோ, சோதிக்க

வழிவகைகளை உண்டாக்குகின்றேன் என்றோ, சோதிப்பேன் என்றோ ஒரு நாளும் சொல்ல மாட்டார். (வெளி. 12:10)

“பேதுருவை சோதிக்க தேவனிடத்தில் பிசாசு உத்திரவு கேட்டான். தேவன் கொடுத்தார்” என்று பலர் சொல்வர். என் தேவன் என்றைக்குமே நம் எதிரியான சாத்தானுக்கு உடந்தையாக மாட்டார். பதிலாக, சாத்தானின் கண்ணி வெடியிலிருந்து தப்ப நமக்காய் பரிந்து பேசுவார் (லூக். 22: 31, 32 in English) ஆதியிலேயே பிசாசுக்கு சோதிக்க அதிகாரம் கிடைத்து விட்டதால், ஒவ்வொருமுறையும் ஒவ்வொருவருக்காகவும் தேவன் அனுமதி அதிகாரம் கொடுப்பதில்லை. ஆவியிலே மறு பிறப்படைந்திருக்கிறோம். (யோ. 3: 3, 5) ஆத்மாவிலே தினந்தோறும் மறுரூபமாகிக் கொண்டு வருகின்றோம். (ரோ. 12:1,2) ஆனால் நம் சரீரமோ மறுரூபமாக காத்திருக்கிறது (ரோ. 8:23) எனவே தான்இந்த அழிந்து போகும் சரீரத்தை மாத்திரம் வியாதியினால் சாத்தான் தொடுவான் (மத். 10:28). அப்போது “இயேசு தாமே சோதிக்கப்பட்டு (பிசாசினாலே), பாடு பட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராக இருக்கிறார்” (எபி. 2:18) எனவே உன் சிறையிருப்பாகிய வியாதியை மாற்றுவார். பேதுரு பிசாசினால் சோதிக்கப்பட்ட போது இயேசு அவனுக்காய் ஜெபித்து, தப்பிக்க வைத்தது போல (KJV of லூக். 22:31) உனக்கும் சோதனையைத் தாங்க பலனும், சோதனை யினின்று விடுதலையும் அளிப்பார் (1 கொரி. 11:13; 1 பேதுரு 2:24)

“பவுலுக்கு மாம்சத்திலே முள் கொடுக்கப்படவில்லையா? அந்த முள் தேவன் கொடுத்த வியாதி தானே” என்று 2 கொரி. 12:7-11 ஐ வைத்து வாதிடுவோரும் உண்டு. உங்கள் அறிக்கையின்படி ஆகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். 2 கொரி. 11 : 30, 12:9, 10 போன்ற வசனங்களின்படி பவுல் பலவீனமாய் இருக்கிறான். இந்த பலவீனம் எதனால் வந்தது? கிறிஸ்துவின் ஊழியத்தின் நிமித்தம். இதனால்தான் இதைக்குறித்து மேன்மை பாராட்டுகிறான் (2 கொரி. 12:11). பவுலுக்கு கண் தெரியாமல் போனது தான் பலவீனம் என்கிறார்கள். அப்படியென்றால் இந்த பலவீனம் ஊழியத்தின் நிமித்தமாகவா வந்தது? இல்லை. ஊழிய அழைப்பின் ஆரம்ப நிமிஷத்திலல்லவா அப்படி ஆயிற்று. தேவனும் வல்லமையும் கிருபையும் கொடுத்து அவனின் பலவீனத்திலே தேவனின் பலம் பூரணமாய் விளங்கும் என்கிறாரே (2 கொரி. 12:9). அப்படி என்றால் பவுலின், கண் தெரியா பலவீனத்தில் தேவனின் பலம் பூரணப்பட்டதால் அவனுக்கு கண் முழுமையாய் தெரிந்திருக்க வேண்டுமே!

பவுலுக்கு முள் ஏன் கொடுக்கப்பட்டது? அவனக்கு வெளிப்படுத்தப்பட்ட வைகளைக் குறித்து மேன்மை பாராட்டி உயர்த்தாதபடிக்கு. பவுலுக்கு

கொடுக்கப்பட்ட வெளிப்பாடுகள், இரகசியங்கள் ஏராளம்; ஏராளம். பரதீசே போய்விட்டு வந்ததால் மிகவும் மேன்மை பாராட்டுகிறான். இப்படி மேன்மை பாராட்டி புத்தியீனனாய் மாறுவதற்கு அடிப்படை காரணம் அவனது சபையாரே! (2 கொரி. 12:11) இக்காலத்தில் இப்படித்தான் தேவ ஊழியர்களை சபையார்கள் புகழ, புகழ ஊழியர்களுக்கு மேட்டிமை வருகின்றது.

இதனால் பல உலகப் பிரகாரமான எதிர்ப்புகளை சந்திக்க வேண்டி வருகின்றது. பொறாமையின் ஆவிகளாலும், கோபத்தின் ஆவிகளாலும், வஞ்சனையின் ஆவிகளாலும் வரும் எதிர்ப்புகள். இதை சந்திக்க, ஜெயிக்க தேவனிடம் ஜெபிக்க வேண்டியிருக்கிறது. சபையார் மூலமாய் வந்த மேட்டிமையை குறைத்தாலே போதும். ஆனால் தேவனிடத்தில் ஜெபித்தால் தேவன் கிருபையைத் தந்து தாங்குகின்றார். பவுலுக்கும் அப்படியே, இந்த எதிர்ப்புகள் தான் முள் என்று சொல்லப்பட்டு உள்ளது. இந்த முள் ஆவிக்கு அல்ல; ஆத்மாவுக்கு அல்ல; சரீரத்திற்கு. கொடுப்பது யார்? தேவனல்ல. "என்னை நான் உயர்த்தாதபடிக்கு அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாய் இருக்கிறது." (11 கொரி. 12:7). பேரும் புகழோடு உயர்ந்து, சபையை வளர்க்கக் கூடாது என்பதற்காய் சாத்தான் கொடுக்கும் முள் இது. இதன் மூலமாய் அவன் குட்டப் பட்டு ஒடுங்கட்டும்; அவன் சபை ஒழியட்டும் என்ற சாத்தானின் திட்டம் இது. பவுல் மிகவும் வளர்ந்த பிரமிக்கத்தக்க பிரசங்கியராய் இருந்த போது சாத்தான் கொடுத்த முள் இது. எனவே ஆதியிலேயே பவுலுக்கு இருந்த கண் பிரச்சனை அல்ல இது என்று அறியலாம். இயேசுவுக்கும் இப்படி பலவீனம் இருந்ததே! (2 கொரி. 13:4). அது வியாதியா? சிந்தியுங்கள்.

உலகப்பிரகாரமான மனித எதிர்ப்புகள்; சரீர பகைமைகள் தான் இந்த முள் என்று திட்டந் தெளிவுமாய் எண். 33 : 55; யோசு. 23 : 13; எசே. 28 : 24 போன்ற வசனங்களின் மூலம் அறியலாம். ஒரு வசனத்தை மட்டும் பார்ப்போம்:- "நீங்கள் தேசத்தின் குடிகளை உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடாமலிருப்பீர்களானால், அப்பொழுது அவர்களில் நீங்கள் மீதியாக வைக்கிறவர்கள் உங்கள் கண்களில் முள்ளுகளும், உங்கள் விலாக்களிலே கூர்களுமாயிருந்து நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே உங்களை உபத்திரவப் படுத்துவார்கள்" (எண். 33:55) இந்த மாமிசத்திலே வந்த முள்ளினால் வரும் உபத்திரவத்திலிருந்து தனிமனிதன் பலவீனனாய் இருக்கிறான். தேவ கிருபை வரும் போது தனி மனித பலவீனத்தில் தேவபலன் தாங்குகிறது; வெற்றி நிச்சயம்; தேவகிருபை உனக்குப் போதும். அல்லேலூயா!

எபி. 12:5-11 வசனங்களை வைத்துக் கொண்டு "கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் எண்ணாதீர்கள்; நேசிக்கிறவனை சிட்சிக்கிறார்; வியாதியின் மூலம் சிட்சிக்கிறார்" என்று வாதிடுவோர் உண்டு. அவர்களின் மனக்கண் திறக்கட்டும். அல்லேலூயா!.....

தேவனின் சிட்சை வியாதி என்றால், வியாதியை அற்பமாய் எண்ணாமல் கனம் பண்ண வேண்டுமா? வியாதியைக் கனம் பண்ணினால் உன்னை அறியாமலே அதற்குக் காரண கர்த்தாவான பிசாசை கனம் பண்ணுகிறாயே! வியாதியை கனம் பண்ணுபவன் கிறிஸ்தவனா? அம்மை நோய் போன்ற வியாதிகள் வந்தால் கனம் பண்ணுபவன் யார்? பாகாலின் மக்களல்லவா! ......

இந்த சிட்சையை கொடுப்பது யார்? தேவன் யாருக்குக் கொடுக்கிறார்? தன்னுடைய பிள்ளைக்கு (V.6.) சிட்சை என்பதற்கு ஆங்கிலத்திலே Chastening என்று போடப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் to reprimand. அதாவது severe rebuke; to criticise someone severely (He was officially reprimanded for his bad behaviour) வியாதி போன்ற காரியங்களை கொடுப்பது அல்ல. இப்படிப்பட்ட உள்ளத்தின் ஆழத்திலே படும்படியான Chastening வேசிப்பிள்ளைகளுக்கு அல்ல; வியாதி Chastening என்றால் அந்த வியாதி வேசிப் பிள்ளைகளுக்கு இல்லையா? இருக்கிறதே! தேவனுடைய பிள்ளைகள் நாம், என்றால் வியாதி என்கிற Chastening வேண்டுமா?......' இந்த சிட்சை எங்கே கொடுக்கப்படுகின்றது? சரீரத்தின் தகப்பன்மார் சரீரத்தில் கொடுப்பார்கள். ஆவியின் தகப்பனாம் இயேசு, தன்னுடைய பிள்ளையின் ஆவியில் தான் கொடுப்பார். (V.9) எதன் மூலம் கொடுக்க முடியும்? தேவ வசனத்தின் மூலம் தான். ஏன் வேதவசனத்தால் கொடுக்கப்படுகின்றது? பரிசுத்தமாகும்படிதான், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" (யோ. 15:2-3)" உம்முடைய சத்தியத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்" (யோ. 17:17) வசனத்தாலே தான் தேவன் பரிசுத்தமாக்குகிறார்; வியாதியினாலல்ல. தேவன் வெள்ளியைப் புடமிடுகிறது போல புடமிடுகிறார். எப்படி? "கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது" (சங். 105:19; 66:10; 107:20). வியாதியினால் அல்ல; நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் வியாதியினால் பரிசுத்தம் ஆவதில்லை, வியாதி நேரத்தில் ஒருவேளை பரிசுத்தப் பாதை உணர்த்தப்படலாம். (சங். 119: 71) இப்படிப்பட்ட தேவனின் ஆவிக்குரிய வசன சிட்சையினால் பலன் என்ன? நீதி கிடைக்கும்.

(வச. 11) (2 தீமோ. 3:16-17). எப்போது கிடைக்கும்? உடனடியாக அல்ல; (வச. 11) ஒரு காலத்தில் பலன் வரும். தேவனுடைய வசனம் வீணாய்த் திரும்பாது. எதுவரைக்கும் சிட்சை? பரிபூரணம் அடையும் வரை (V.10) 1 தெச. 4:3 ஐ வாசியுங்கள்.

இப்படிப்பட்ட தேவனின் சிட்சையை அற்பமாய் எண்ணாமல் "நெகிழ்ந்த கைகளையும், தளர்ந்த முழுங்கால்களையும், நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செம்மைப் படுத்துங்கள்."

வியாதி வராது; வேதனை வராது; சோதனை வராது: வந்தாலும் நம்மை மேற்கொள்ளாது; கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? பிசாசுகளை துரத்தி, வியாதிகளை நீக்கிய (அப். 10:38) அதே இயேசுவின் வல்லமை நம்மிடம் உண்டு; அவரின் ஆவியின் பட்டயம் நம்மிடம் உண்டு. வென்றிடுவோம்: வெற்றி சிறந்திடுவோம்; சிறந்து விளங்கிடுவோம் அவர் நாமத்தால்.

"Beloved I wish above all things that thy mayest prosper and BE IN HEALTH even as thy soul prospereth" (3 யோ. 2; ரோ. 12 : 2).

**"End Time Deliverence Ministry Trust"**

Savings Bank Account no : 10372388517

State Bank of India, Chennai - 600 054.

(IFS Code : SBIN0004675)

(வங்கியில் அனுப்பிய உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள்)

# 2. வியாதியைப் பற்றிய சந்தேகம்!

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் வியாதி; தீராத வியாதி; நிம்மதியில்லை; சந்தோசமில்லை; கணவன் மனைவி உறவு பாதிக்கும் நிலை. எதிர்காலமே இருக்காதா என்ற ஏக்கப் பெருமூச்சு! இந்த வியாதி ஆசீர்வாதமா? இல்லை, இது சாபம் (உபா. 28:15). இந்த சாபமான வியாதியினின்று இயேசு நம் எல்லோருக்கும் விடுதலை கொடுத்திருக்கிறார் (கலா. 3:13) பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் சுற்றித் திரிந்த அதே இயேசு இன்றும் ஜீவிக்கிறார் (அப் 10 : 38). இந்த வியாதியை பிசாசு தருகிறான் (உதாரணம் லூக். 13:16) இயேசு தழும்புகளினால் சுகமாக்குகிறார் (1 பேதுரு 2:24) பிசாசின் வேலை திருடுவதும் கொல்லுவதும் அழிப்பதுமே (யோ. 10:10) அவன் வேலையை கிரமமாய்ச் செய்கிறான். இயேசுவே அந்த பிசாசு தரும் நோய்களை சுமந்து தீர்த்தார் (மத். 8:17) இப்படியிருக்க வியாதி தேவனின் சித்தமென்று சொல்வானேன்? மாறாக இயேசு ஏன் சுகமாக்க வேண்டும்? **யோ. 9:3-ல் சொல்லப்பட்ட தேவனின் கிரியை என்ன?** சுகமாக்கியதே தேவனின் கிரியை. யாருமே வியாதியாய் இருக்க வேண்டும் என்பது தேவனின் விருப்பம் அல்ல. யோ. 11:4ல் கூட தேவ மகிமை விளங்க வேண்டும் என்று இயேசு சொல்கிறாரே புரிகிறதா. (See V 40) துன்மார்க்கரின் மரணத்தைக் கூட நம் தேவன் விரும்ப மாட்டாரே!

சிட்சை என்பது வியாதியா? (இது குறித்த விடுதலை முழக்க கருத்தரங்கு செய்தி கேசட்டுகளையும் வாங்கி தெரிந்து கொள்ளுங்கள்) எபி. 12: 5-11 வசனங்களை வாசியுங்கள். சிட்சை நமக்கு இல்லை என்றால் நாம் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளையாயிருப்போமே! (வச. 8) அப்படி என்றால் இரட்சிக்கப்படாத வேசிப் பிள்ளைகளுக்கு தேவனின் சிட்சை கிடைப்பதில்லை. வியாதி அவர்களுக்கு வருகிறதே! அதனால் வியாதி சிட்சையல்ல. சிட்சையினாலே பரிசுத்தமாகிறோம்; யோ. 8:9 ல் உள்ள சிட்சை என்ன? II கொரி. 7:8,9 ல் உள்ள சிட்சை என்ன? அப். 2:37ல் உள்ள சிட்சை என்ன? தேவன் பரிசுத்தத்திற்கென்று நம்மைப் புடமிடுகிறார் (சங். 105 : 19; 66 : 10; 107 : 20; யோ. 5:3)

**வியாதியை தேவன் கொடுப்பதில்லை என்றால் அனுமதிக்கிறாரா?** அவராலே சிலுவையிலே சுமந்து தீர்க்கப்பட்ட பிசாசின் காரியத்தை அனுமதிப்பாரென்றால் அவர் சுமந்தது வீண். அவர் பிசாசுக்கு மறைமுக ஆதரவு தருவதாக அர்த்தம். தவறு என்று தெரிந்த ஒன்றை மனிதனே அனுமதிக்காத போது தேவன் அனுமதிப்பாரா? ஆதாம் - ஏவாள் பாவம் செய்ய

விரும்பினார்கள்; தேவனும் விட்டுவிட்டார் Man allows; God allows. யோபுக்கு அனுமதிக்கவில்லையா? இது கேள்வி. யோபுவின் விசுவாசத்தின்படி அவனுக்கு வியாதி வந்தது; Job allows; God allows. இதை அவனே சொல்கிறான்! "நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது" (யோ. 3 : 25). தேவன் யோபுவின் உடலுக்கு பாதுகாப்பாய் இருந்தாரே! யோபுவுக்கு உண்டானதெல்லாம் சாத்தானின் கையில் அல்லவா! உலகமேசாத்தான் கையில் தானே (யோபு 1;12) இதிலே அனுமதி கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. யோபு 1:21ல் உள்ள அவனின் அவிசுவாச வார்த்தையைப் பாருங்கள். கொடுத்த தேவன் ஒரு நாளும் எடுக்க மாட்டார்; அவர் கொடை வள்ளல். விசுவாசக் குறைவினாலே உடலுக்கு இருந்த பாதுகாப்பும் போயிற்று. (யோபு 2:5) ஆனாலும் அன்புள்ள தேவன் அவன் உயிரைக் காக்கிறார். யோபு எப்படிப்பட்ட - மரணத்துக்கு ஏதுவல்லாத (1 யோ. 5:16) பாவத்தை செய்தவன் என்று அவன் நண்பன் எலிகூ சொல்வதைப் படித்து அறிந்து கொள்ளுங்கள்.

வியாதியை தேவன் சுமந்து தீர்த்து தழும்பினால் சுகம் தருகிறார் என்றால் (1 பேதுரு 2:24; மத். 8:17) பின்பு ஏன் டாக்டரிடம் போக வேண்டும்? இது கேள்வி? டாக்டரிடம் போக வேண்டாம் என்று வீட்டிலிருக்கிற நீ ஏன் வெந்நீர் போட்டுக் குடிக்கிறாய்? தண்ணீர் சாப்பிட வேண்டியது தானே! ஏன் சுக்குக் காபி? ஏன் மூக்குக் கண்ணாடி?... சுகம் கிடைப்பது தேவனால் தான். இந்த விசுவாசத்தோடு தேவன் நமக்காய்ப் படைத்தவைகளை ஞானமாய்ச் சாப்பிடு; உபயோகி (1 தீமோ. 5 23; 4:3-5) தவறே இல்லை. டாக்டருக்கு அறிவைக் கொடுப்பதே தேவன் (யாக். 1:17; 7-5). அந்த அறிவினாலே தேவன் படைத்தவைகளைக் கொண்டு நமக்கு மருந்துகளை செய்கிறான். இப்படிப்பட்ட உலக டாக்டர்களால் கைவிடப்பட்ட பின்னும் அற்புத சுகம் அளிப்பவர் தான் இயேசு; அவர் செயலே தெய்வீக சுகம் (ரோ. 8:11).

பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் வியாதியை தேவன் அனுப்பினார் என்று போட்டிருக்கிறதே! தேவனால் கொல்லவும் முடியும். உயிர்ப்பிக்கவும் முடியும். பழைய ஏற்பாட்டில் இப்படி வியாதியைப் பற்றி சொல்லப் படுவதெல்லாம் தேவனின் நியாயப்பிரமாண சாபம். இது சிலுவையில் ஒழிந்தது என்பதை விசுவாசிக்கும் நமக்கு வியாதிகள் இல்லவே இல்லை; கிருபையின் காலம் நமக்கு வந்து விட்டது.

# 3. தேவன் தரும் சிட்சை பொல்லாங்கானதா?

எபி. 12:5-11 வசனங்களை வைத்து, "தேவன் தம்மை நேசிக்கிறவர்களை வியாதி, வறுமை, மரணம், தோல்வி போன்ற காரியங்களினால் சிட்சிக்கிறார்" என்று விளக்கம் தந்து தேவனுடைய சத்தியத்தைப் பலர் கருகலாக்கி விட்டனர். தேவன் இன்று விளக்குவாராக!

பிசாசின் கிரியைகளை அழிக்கவே இயேசு வந்தார்; வியாதியை ஒழித்தார் (மத். 8:17); வறுமையை ஒழித்தார் (II கொரி. 8:9) மரணத்தை ஒழித்தார்; தோல்வி வாழ்க்கையை ஒழித்தார் (1 யோ. 5:5,6) சமாதானமின்மையை ஒழித்தார். இவைகள் எல்லாம் பிசாசின் கிரியைகள், இந்த பொல்லாங்கான கிரியையை தேவன் கொடுப்பதில்லை; பிசாசு தான் கொடுக்கிறான் (யாக். 1:13-17); தான் சிலுவையில் அழித்த பொல்லாங்கானதை தேவன் மறுபடியும் தன் பிள்ளைகளுக்கு அவராகவே அனுமதித்தால் அவர் சிலுவையில் அழித்தது வீண். அவர் அனுமதிக்கிறவரல்ல. மனிதன் தான் தன்னுடைய கிரியையினாலோ அல்லது பிசாசன் சோதனையினாலோ தனக்கு தானே அறிந்தோ, அறியாமலோ அனுமதித்துக் கொள்கிறான்; அதைக் கண்டு தேவனும் ஒன்றும் செய்வதில்லை. கற்பனைகளை மீறினால் சாபம் கொடுக்கப்பட்ட காலம் போய் கிருபையின் காலம் வந்திருக்கிறதே! தேவன் அன்று வைத்திருந்த சாபமெல்லாம் சிலுவையிலே தீர்த்துவிட்டாரே இனி சாபம் கொடுக்கவோ, அனுமதிக்கவோ அவர் மாட்டாரே! நீயே தேடிக் கொள்கிறாயா? அப்படியானால் எபி. 12ல் சொல்லப்பட்ட சிட்சை என்ன? இங்கே சிட்சிக்கிறவர் யார்? தேவன். யாருக்கு சிட்சை? தேவனுடைய பிள்ளைக்கு (வச.6) இப்படிப்பட்டதான சிட்சை இல்லை என்றால் நாம் வேசிப்பிள்ளைகள்; வேசிப்பிள்ளைகளுக்கு அதாவது இரட்சிக்கப்படாத உலகப் பிள்ளைகளுக்கு இந்த சிட்சை இல்லை (வச.8) அல்லேலூயா! ஏன் நம்மை சிட்சிக்கிறார்? நாம் பரிசுத்தமாகும் பொருட்டு (வச.10) எவ்வளவு காலம் சிட்சை? நீதியாகிய பலனைத் தரும் வரை. (வச.11) வியாதி, வறுமை இவையெல்லாம் சிட்சையென்றால் அது வேசிப் பிள்ளைகளுக்கு வரக் கூடாதே! இந்த சிட்சை எங்கே கொடுக்கப்படும்? சரீரத் தகப்பன் தங்கள் பிள்ளைகளை சரீரத்தில் சிட்சிப்பார் (நீதி. 3: 11, 12); ஆவியின் தகப்பனான தேவன் தம் ஆவிக்குரிய பிள்ளைகளை ஆவியிலும், ஆத்மாவிலும் தான் சிட்சிப்பார் (வச.9) அப்படியென்றால் எதன் மூலம் சிட்சிப்பார்?

தம்முடைய வேத வசனத்தின் மூலம் பரிசுத்தமாகும்படி, நீதியைப் படிப்பிக்கும்படி சீர்திருந்தும்படி உபதேசித்து கடிந்து கொள்வார். (2 தீமோ. 3:16, 17; யோ. 15:3; 17:17); பொல்லாங்கினால் அல்ல பெந்தகொஸ்தே நாளிலேதேவ வசனத்தாலே தான் இஸ்ரவேலர்கள் இருதயத்திலே குத்தப்பட்டு பரிசுத்தவான்களானார்கள் (அப். 2:37). பொருளாதார இச்சையுடைய ஐஸ்வரியவான் இயேசுவின் வசனத்தினாலே தான் கடிந்து கொள்ளப்பட்டு பின் வாங்கினான் (மத். 19:22). 2 கொரி 5ல் பயங்கர விபச்சாரத்தை பவுல் கண்டித்ததினாலே தான் 2 கொரி. 7 : 8, 9 - ல் பவுல் சொன்னபடி கொரிந்தியர் திருந்தினார்கள்; வியாதியினாலோ, வறுமையினாலோ ஒருவனும் பரிசுத்தமாக முடியாது. அல்லேலூயா அப்படியானால் தேவ வசனம் தேவையில்லையே! (யோ. 15:2; 17:17)

# 4. பவுலுக்கு மாம்சத்திலே முள்

II கொரி. 12:7-9 வசனங்களை வைத்துக் கொண்டு “பவுலுக்கு மாமிசத்திலே முள் என்பது வியாதி (கண் வியாதி); இதற்காய் அவன் ஜெபித்தும் தேவன் வியாதி இருக்கட்டும் என்று அனுமதிக்கிறார். இப்படியாய் நமக்கும் தேவன் வியாதியை அனுமதிக்கிறார்; அதனால்நாம் சாகும் வரை கஷ்டப்படுவது நமக்கு மகிமை” என்று பிரசங்கம் பண்ணும் மக்கள் உண்டு; இவர்கள் செழிப்பான சத்தியத்தை கருகலாக்குகின்றனர். தேவன் விளக்குவாராக! பவுலுக்கு மாமிசத்திலே முள் இருக்கிறது.. அது சாத்தானுடைய தூதனாயிருக்கிறது; தேவனுடையதல்ல. எதற்காய் கொடுக்கப்பட்டது? பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளைக் குறித்து அவன் மேன்மை பாராட்டி உயர்த்தாதபடிக்கு, இதற்கு வியாதி கொடுக்கப்படுமா? (இது குறித்து முன்பகுதிகளில் விளக்கியிருக்கிறேன்.)

பெந்தகொஸ்தே ஊழியர்கள் பெரிதாய் மதித்து படிப்பது “DAKES” பைபிள் தான். அதிலே விளக்கமாய் எழுதப்பட்டிருக்கிறது:- இந்த முள் சரீர வியாதி அல்ல என்று. அப்படியிருந்தும் அதை வியாதியாகிய முள் என்று பெந்தகொஸ்தே ஊழியர்களே போதிப்பது ஆச்சரியமாய் இருக்கிறது. அந்த முள் வியாதி என்றால் தேவனால் தீர்க்க முடியாத வியாதியும் உண்டா? விசுவாச வீரன் பவுல் ஜெபித்தும் போகாமல் இருக்குமா? வாசகர்களே! உங்களுக்குத் தெரிய வேண்டியவை இவை; தேவ ஆவியானவர் இன்னும் அதிகமதிகமாய், உங்களோடு பேசுவாராக!

# 5. உங்களுக்குத் தெரியுமா?

சாபம் என்பதும், தண்டனை என்பதும் ஒன்றல்ல. சாபம் வேறு தண்டனை என்பது வேறு, இவை இரண்டையுமே தேவன் தாமாகவே கொடுப்பதில்லை. சாபம் என்பது நாமே சுதந்தரித்துக் கொள்வது; ஆனால் தண்டனையோ தேவன் பாவத்தின் உச்சக்கட்டத்தில் கொடுப்பது. உதாரணமாக, "சாலையில் இடது பக்கம் தான் போக வேண்டும்; வலதுபுறம் போகக் கூடாது; மீறிப் போனால் விபத்துக்குள்ளாகி மரிக்க வேண்டி வரும்" என்று போலீஸ் அதிகாரி சொல்கிறார். இதையும் மீறி ஒருவன் போய் விபத்துக்குள்ளானால் இந்த முடிவை போலீஸ் ஆபிசரா கொடுத்தார்? இல்லை. மனிதன் தன் சொந்த கிரியைகளினாலே தேடிக் கொண்டது இது, இது தான் சாபத்தைப் போன்றது. ஆனால் போலீஸ் அதிகாரியின் வார்த்தையை மீறிப் போனவரை பிடித்து அவருக்கு அபராதமோ, சிறைத் தண்டனையோ விதித்தால் அதைச் செய்தவர் போலீஸ் அதிகாரி, இது தான் தேவனின் தண்டனையைப் போன்றது. தேவன் நன்மையைக் காட்டுகிறார்; இதைவிட்டு விட்டால் தீமையே உன்னைச் சூழும் என்கிறார். இது தான் சாபம். சாபம் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினாலே விசுவாசிகளுக்கு நீக்கப் பட்டது. ஆனால் தேவன் மனிதகுலத்திற்கோ, தனி மனிதனுக்கோதண்டனை கொடுத்திருந்தால் அது மாறாது; தேவன் மாற்றினால்தான் உண்டு. மீரியாமுக்கு குஷ்டரோகம் வந்தது; யெரோபெயாமின் கை அப்படியே நின்றது (ராஜா); சகரியா வாய் ஊமையானது போன்றவைகள் எல்லாம் சாபம். மனிதன் சாவது; பெண் கர்ப்ப வேதனைபடுவது; சப்பிராள் மரணம் போன்றவைகள் எல்லாம் தேவனின் தண்டணை. ஏசா ஆசீர்வாதத்தை இழந்தான்; காயீன் ஆசீர்வாதத்தை இழந்தான்; கானானின் பரம்பரையே இல்லை. இவைகளெல்லாம் சாபம்.

சாபங்கள் உங்கள் வாழ்வில் இருந்தால் சிலுவையை நோக்கி பாருங்கள்! இன்றே மாறிப் போகும். தேவனின் தண்டனை இருந்தால் அதன் முடிவோ மரணம்தான்.

# 6. வியாதியும் மரணமும் தேவனின் மகிமையா?

பல கிறிஸ்துவர்கள் வியாதியினாலும், மரணத்தினாலும் தேவனுடைய நாமம் மகிமைப்படுகின்றது என்ற தவறான விசுவாசம் வைத்து இருக்கின்றனர். இதனால் தவறாய் அறிக்கையிடுகின்றனர். காரியங்கள் தவறாய் நடக்கின்றன. யோ. 9:3ல் "அது இவன் செய்த பாவமுமல்ல; இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல; தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" என்று இயேசு சொன்னார். தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு குருடனாய் பிறந்தான்என்று சொன்னாரே தவிர, தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாய், அவன் குருடனாய் தேவனால் பிறப்பிக்கப்பட்டான் என்று சொல்லவில்லை. பிறந்தவன் அவனே! அவன் குருடனாய் இருந்தபோது தேவநாமம் மகிமைப்பட்டால் அவனை ஏன் இயேசு சுகமாக்க வேண்டும். "நீ குருடனாகவே இருந்து தேவனை மகிமைப்படுத்திக் கொண்டிரு" என்று சொல்லி விட்டு இயேசு அவனை சுகப்படுத்தியிருக்கக் கூடாதே. அவன் குருடனாய் இருந்தபோது தேவ நாமம் மகிமைப்பட்டதா அல்லது இயேசு குணமாக்கின போது மகிமைப்பட்டதா? சுகமாக்கப்பட்டபோது தான் அவர் நாமம் மகிமைப்பட்டது; அவரின் குணமாக்கும் கிரியைகள் வெளிப்பட்டது. "இப்படிப் பிறந்தான்" என்றால் என்ன பொருள்? எப்படி குருடனாய்ப் பிறந்தான்? குருடனாய், முடவனாய், செவிடனாய், வியாதிக்காரனாய் பிறக்க வைப்பது தேவனா? அப்படி தேவனே இப்படிப்பட்ட வாதைகளை கொடுப்பாரென்றால், தான் கொடுத்ததையே சிலுவையில் ஏன் அழிக்க வேண்டும் (மத். 8:13)? அப்படி அழிக்க ஏன் இரத்தம் சிந்தி உயிர் விட வேண்டும்? தான் ஆரம்பித்ததை தானே ஒரே நொடியில் நிறுத்த முடியாதா? சிந்தியுங்கள். இவைகளெல்லாம் பிசாசினால் பிறப்பது. பிசாசினால் வந்த இந்த பொல்லாங்கான காரியத்தால், தேவனுடைய மகிமையான கிரியைகள் வெளிப்படுகிறது. தேவனுடைய கிரியைகள் வெளிப்படக் கூடாது என்றுதான் இப்படியாய் வியாதி, வேதனை, வறுமை, தோல்வி, இவைகளில் உள்ள மக்களை அப்படியே பிசாசு, வைக்க நினைக்கிறான்; அதுவே தன் பணியாகத் தொடர்கிறான்; (யோ. 10:10); அதற்காய் மனக் கண்களை குருடாக்குகிறான். (2 கொரி. 4:4) விசுவாசிக்கிறவனோ தேவனுடைய மகிமையை காண்கிறான்.

# 7. தேவனின் சிட்சை யாருக்கு? எப்படி?

இன்றைக்குப் பலர் தேவனின் சிட்சை தான் வியாதி, வறுமை, தோல்வி மரணம் போன்ற பொல்லாங்கான காரியங்கள் என்று விசுவாசிக்கின்றனர். தேவன், தான் சிலுவையிலே சுமந்து தீர்த்த நமது வியாதி வறுமை போன்றவைகளை மறுபடியும் மனிதனுக்கு அனுப்பி சிட்சிக்கிறார் என்றால் அவர் சிலுவையிலே இவைகளை சுமந்து தீர்க்கவில்லையா? தீர்த்தாயிற்று என்று விசுவாசிக்கிற ஒருவனுக்கு எப்படி மறுபடியும் அதுவே சிட்சையாகக் கொடுக்கப்படும்? "உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக் கடவது" என்ற தேவனுடைய வசனம் இன்றும் ஜீவனாய் இருக்கிறதே! எனவே, பிசாசின் கிரியைகளான பொல்லாங்கானவைகளை அழித்து விட்டார் என்று சொல்லும் போது, அந்த விசுவாச அறிக்கையினாலே நமக்கும் இந்த வியாதி, வறுமை தோல்வி போன்றவை அழிந்து விட்டது என்று பொருள். எபி. 12:5ஐ வைத்துக் கொண்டு கர்த்தரின் சிட்சையான இந்த காரியங்களை அற்பமாய் எண்ணக்கூடாது என்று போதிக்கிறார்கள். அப்படியானால் தேவன் சிலுவையில் ஒழித்தவைகளை அற்பமாய் எண்ணாமல் மதித்து மகிமைப்படுத்த வேண்டுமா? பிசாசின் கிரியைகளை அற்பமாய் எண்ணக் கூடாதா? அப்படியானால் எபி. 12:5, நீதி. 3:11 போன்ற வசனங்களில் சொல்லப்பட்ட தேவனின் சிட்சை என்ன?

தேவனின் எந்த சிட்சையும் பிற்காலத்தில் சந்தோசமாய்த் தோன்றுமாம் (எபி 12:11) வறுமை வியாதி போன்றவை சிட்சை என்றால் அது யாருக்கு சந்தோசமாய் தோன்றும்? - கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சிக்கிறார் என்பதால் (எபி. 12:6) யோ. 3:16ன் படி அன்பு கூர்ந்து நம்மை தன்னுடைய பிள்ளையாய் மாற்றிக் கொண்ட தேவன், அவனை சிட்சிப்பார் என்பது உறுதி. அன்பு கூறுகிறவர்களை தேவன் பொல்லாங்கால் சிட்சிப்பதே இல்லை. பொல்லாங்காலும் தேவனால் சிட்சிக்க முடியும்: சிட்சித்தும் இருக்கிறார். யாரை? அவரிடத்தில் அன்பு கூராதிருப்பவர்களையே! (1 யோ. 5:3) எகிப்திலே 10 வாதைகள் வந்ததே யாருக்கு? தான் அன்பு கூருகிற இஸ்ரவேலருக்கா? இல்லை... இல்லை... தேவனை ஏற்றுக் கொள்ளாத எகிப்தியர்களுக்கு அல்லவோ! தேவனால் பாசம் காட்டப்படும் மக்கள் தான் தங்களுக்கு வியாதி, வறுமை, தோல்வி வரும்போது யோபுவைப்போல தேவன் சிட்சிக்கிறார்;

தீமை செய்கிறார்; எடுத்துப் போடுகிறார் என்று தவறான அறிக்கையிடுகிறார்கள் (யோபு 5:17; 2:10; 1:21). இந்த தவறான அறிக்கை தேவனைப் பற்றிய தவறான சிந்தனையால் வருகிறது. நம் சிந்தனை நன்றாயிருக்க வேண்டுமென்றால் நம்மனம் தினந்தோறும் மறுரூபமாக வேண்டும். (ரோ. 12:2) நம் தேவன் சொன்னார்:- "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை கைவிடுவதுமில்லை; நான் நிழல் போல் உன்னோடு இருப்பேன்!" இருளிலே நீ இருக்கும் போது நிழல் தெரிகிறதா? நிழல் தெரியவில்லை என்பதால் நிழல் நம்மை விட்டு மறைந்து விட்டது என்று அறிக்கையிடலாமா? அல்லது தான் மறைந்து கொண்டு நம்மை இருளுக்குள் அது ஆழ்த்தியது என்று சொல்லலாமா? இல்லை... இல்லை. நாமே சோதனைக்குள் பிரவேசிக்கிறோம் (யாக். 1:14) தேவன் நம்மை அதற்குள் செலுத்துவது அல்ல... அவர் நம்மோடே இருக்கிறார். அவர் நம்மோடு மட்டும் இல்லை என்றால் நீ நினைக்கிற இந்த சோதனையாகிய சிட்சையிலிருந்து உனக்கு விடுதலையே கிடைக்காது. தாவீது ராஜா நன்றாயச் சொன்னான்:- "உபத்திரவங்களினால் தேவனுடைய பிரமாணத்தைக் கற்றுக் கொண்டேன்." ஆக பிசாசு சோதனை தருகிறான்; தேவன் சோதனை தருவதில்லை; பரிசோதனை செய்கிறார்; சிட்சிக்கிறார். தேவன் நியாயத் தீர்ப்பை ஒரேயடியாய்த் தான் செய்வாரே ஒழிய திருந்துவதற்காய் தண்டனை தரமாட்டார். அவர் கொடுக்கும் நியாயத்தீர்ப்பு நிரந்தரமானது. அது நித்திய நியாயத்தீர்ப்பாயும் இருக்கலாம்; சரித்திர நியாயத்தீர்ப்பாயும் இருக்கலாம். சரித்திர நியாயத்தீர்ப்பு மற்றவர்களுக்கு எச்சரிப்பாய் திருஷ்டாந்தமாய் இருக்கும் (2 பேதுரு 2:4-6) தேவன் வருவிக்கும் தண்டனை நிரந்தரமானது; சீர்திருத்த அல்ல. அப்படியானால் சிட்சை தண்டனையாக இருக்க முடியாதே!

"தேவனே, எங்களை சோதித்தீர் (Tested; not tempted); வெள்ளியைப் புடமிடுகிறது போல எங்களை புடமிட்டீர்" (சங். 66:10) என்று தாவீது சொல்லும் புடமிடுதல் எது? வியாதி, வறுமை, தோல்வியா? யோசேப்பை தேவன் புடமிட்டார் எப்படி? அவனை அடிமையாய் விற்க வைத்தா? ராஜாவால் விலங்கு போடவைத்தா? இல்லை.... அவருடைய வசனமே அவனைப் புடமிட்டது. (சங்.105 : 19). ஆக, தேவனுடைய வசனமே ஒருவனை புடமிடுகிறது; சிட்சிக்கிறது. வார்த்தையினாலேதான் சிட்சை என்று சங் 50:17 மற்றும் நெகே. 9:26 சொல்வதை வாசியுங்கள். பெந்தகோஸ்தே நாளில் பேதுருவின் வார்த்தையைக் கேட்டவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாய் இரட்சிப்புக்கு ஒப்புக் கொடுத்தார்களே இது தான் வார்த்தையினாலே வந்த சிட்சை (அப். 2:37) இப்படிப்பட்ட சிட்சையைத்தான்

இயேசு தமது மூன்றரை ஆண்டு ஊழியத்தில் செய்தாரே அல்லாமல் வியாதி, வறுமை, தோல்வி போன்ற சிட்சையை கொடுத்து அவர்களுக்கு புத்தி புகட்ட வில்லை. பவுல் கூறுவதைக் கவனியுங்கள்:- கொரிந்தியர் துக்கப்படும் படியாய் வார்த்தையினாலே 1 கொரி. 5:1-5 வசனங்களிலே சிட்சித்ததால், அவர்கள் துக்கப்பட்டு மனந்திரும்பி இருக்கிறார்கள் (2 கொரி. 7:9,10). மனுஷீக தகப்பன்மார் மனுஷிகமாய் மாம்சத்திலே சிட்சிப்பர். ஆனால் ஆவிக்குரிய அப்பாவாகிய தேவன் நம் ஆவியிலே சிட்சிப்பார்; ஆவியிலே தண்டிக்க அவருடைய வசனமே ஆவியின் பட்டயமாய் நம்மை அழவைக்கும். அதனாலே நமக்கு வெற்றி உண்டு; தோல்வி இல்லை; தேவனுடைய வசனம், மறுதலித்த பேதுருவை சிட்சித்ததால் தான் மனங் கசந்து அழுதான்; மன்னிப்பு பெற்றான்; புது ஊக்கம் கொண்டான் (லூக். 22:61, 62). ஆக தேவனுடைய சிட்சை தன்னுடைய பிள்ளைகளின் மேலே வசனத்தால் தானே ஒழிய பொல்லாங்கான கிரியைகளினால் அல்ல என அறிகிறோம்.

# 8. தீராத வியாதியும் உண்டோ?

ஒரு பெரிய தமிழக ஊழியக்காரர் இப்படி எழுதியிருக்கிறார்:- "குணமாக்க முடியாத நோய்கள் பக்தியுள்ளோரை தாக்குகின்றது". இதைப் படிக்கும் போது என் உள்ளம் வேதனை அடைந்தது. பெரிய ஊழியர் என்று சொல்பவர்களே இப்படியா என்று எண்ணினேன். தங்கள் வாழ்வில் இப்படி அனுபவம் வந்தது என்பதினாலே அது தான் வேதக் கருத்து என்றாகிவிடுமா? "நான் வியாதியிலே கிடந்து மரிக்கப் போகிறேன் என்பதால் தெய்வீக சுகம் என்ற தேவனின் திட்டம் ஒரு நாளும் பொய்க்காது" என்று மறைந்த போதகர் ஜஸ்டின் பிரபாகரன் சொன்னார். சாலமோன் கடைசி நாட்களில் தவறான வழியில் போனான் என்பதால், அவன் சொன்ன நீதிமொழிகள், பிரசங்கி எல்லாம் பொய்யாகிவிடுமா? துதி சங்கர், அகஸ்டின் கோமஸ் போன்றோர் ஆக்சிடெண்டில் மரித்தார்கள் என்பதால் "நீதிமானின் எலும்புகள் முறிக்கப்படுவதில்லை; பொல்லாப்பு அதாவது விபத்து உனக்கு நேரிடாது" போன்ற வசனங்கள் பொய்யாகுமா? எபி. 12:1 ன்படி திரளான சாட்சிகளை பாராமல் இயேசுவை நோக்கியே, அவரின் வார்த்தையை நோக்கியே ஓடுவோம். யாக். 5:16; மத். 8:17; 1 பேதுரு 2:24; 2 கொரி. 12:9; ரோ. 8 : 11

போன்ற வசனங்கள் ஒரு நாளும் பொய்யாகாது. அப். 10 : 38ன்படி அவர் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கினாரே! அதே தேவன் இன்றும் ஜீவிக்கிறாரே? அல்லேலூயா! பிசாசின் கிரியைகள் அனைத்தையும் அழிக்கவே, இயேசு வந்தார் (1 யோ. 3:8). இதை விசுவாசிப்பவனே உண்மைக் கிறிஸ்தவன். வியாதி பிசாசின் கிரியை; அதை தேவன் சிலுவையிலே சுமந்து தீர்த்தார். சகல நோய்களையும் தீர்த்தார். தேவனால் தீர்க்க முடியாத நோய்களே இல்லை; இதை விசுவாசித்தால் விடுதலை உண்டு. அவர் பரிபூரண சுகத்தை 2000 ஆண்டுகளுக்கு முன்பே சிலுவையிலே கொடுத்து விட்டுப் போய்விட்டார். அல்லேலூயா! "தனது சுகவீனத்திலிருந்து பவுலுக்கு விடுதலை கிடைக்கவில்லையாம் (2 கொரி. 12 : 7-10) தீமோத்தேயுவின் வயிற்றுப் பெலவீனம் நீங்கவில்லையாம் (1 தீமோ. 5:23); துரோப்பீமு என்ற ஊழியன் மீது பவுலின் குணமாக்கும் வரம் செயல் பட முடியவில்லையாம். (2 தீமோ. 4:20); எலிசா வியாதியில் மரித்தானாம் (2 ராஜா. 13:14)" என்றெல்லாம் அந்த ஊழியர் எழுதி, தேவன் தீர்க்க முடியாத வியாதிகள் விசுவாசிகளை தாக்குகிறது என்று அந்த பெரிய ஊழியக்காரர் முடிக்கிறார். பவுலுக்கோ, தீமோத்தேயுவுக்கோ, எலிசாவுக்கோ வியாதி தீரவில்லை என்பதால், தேவன் சிலுவையிலே சகல நோய்களையும் சுமந்து தீர்த்தார் என்பது பொய்யாகுமா? **ஆட்களைப் பார்த்து விசுவாசம் வைக்காதீர்! ஆண்டவனின் வார்த்தையைப் பார்த்து, அவரையே பார்த்து விசுவாசம் வையுங்கள்.** உன் விசுவாசப்படியே உனக்கு ஆகக் கடவது என்று தேவன் சொல்லவில்லையா? பிரியமானவனே! உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும் படி வேண்டுகின்றேன் (2 யோ. 2). தெய்வீக சுகமில்லையேல் உன் ஆத்மா நன்றாய் வாழ வில்லை என்று பொருள். யாக். 1:21ன் படி உன் ஆத்மா மறுரூபமாக தேவ வசனத்தை மட்டுமே சாந்தமாய் ஏற்றுக்கொள். அப்போது தான் உன் ஆத்துமா மறுரூபமாகும் (ரோ. 12:1,12). எல்லா நோய்களும் தீரும்; ஒரு நாளில் வியாதியே உன் கூடாரத்தை அணுகாத நிலை வரும். அல்லேலூயா!

# 9. வியாதி பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும்

பத்து கற்பனை தந்த சீனாய் மலை தொடங்கி இயேசு கிறிஸ்துவின் மரணம் வரைக்கும் உள்ள காலம் பழைய ஏற்பாடு. உயிர்தெழுந்த நாள் முதல் புதிய ஏற்பாட்டுக் காலம் ஆரம்பம். இந்த அறிவோடு வியாதியைப் பற்றி ஆராய்வோம். பழைய ஏற்பாட்டில் வியாதி, வியாதியிலிருந்து விடுதலை என்ற உடனே, எல்லா பிரசங்கிமாரும் சொல்லுகின்ற காரியம் எசேக்கியா ராஜா பற்றித்தான். (2 ராஜா. 20). அந்த ராஜா பிழைக்கமாட்டான் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன உடனே, சுவர்ப்புறமாகத் திரும்பி கர்த்தரை நோக்கி அழுதான். கர்த்தர் விண்ணப்பத்தை கேட்டார். கண்ணீரைக் கண்டார். அவனை குணமாக்கி 15 வருஷம் ஆயுளைக் கூட்டிக் கொடுத்தார். தீர்க்கதரிசன வார்த்தைகளை கேட்ட பிறகும் கூட, தான் சுகமாவதற்கு அடையாளம் என்று என்று ராஜா கேட்டான். தேவனும் அடையாளம் தந்தார். பிளவையின் மேல் அத்திபழத்து அடையை பற்றுப் போட்ட போது அவன் பிழைத்தான். இது பழைய ஏற்பாடு. புதிய ஏற்பாட்டிலோ தேவன் உன்னையும் என்னையும் ராஜாக்களும் ஆசாரியர்களுமாய், ஆக்கியிருக்கிறார் (1 பேதுரு 2:9; வெளி. 1:6). ஆளப் பிறந்த நாம், யோ. 1;12 ன்படி புத்திர சுவீகாரம் பெற்றிருக்கும் நாம், ஏன் எசேக்கியாவைப் போல சுவர்ப்புறம் திரும்பி அழ வேண்டும்? எருசலேமில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த தேவன், புதிய ஏற்பாட்டில் நமக்குள்ளே தங்கி நம்முடைய சரீரத்தை ஆலயமாய் வைத்திருக்கிறாரே (1 கொரி. 6:19) இந்த ஆலயத்துக்கு தீங்கு வரும் போது அவரே பார்த்துக் கொள்வேன் (1 கொரி. 3:17) என்று சொல்லியிருக்கிறாரே. கண்ணீர் தேவையா? 3 யோ. 2ன் படி உன் ஆத்மா வாழ்வதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருப்பாயாமே! உனக்கு எப்படி வியாதி வரும்? வாதைஉன் கூடாரத்தை அணுகாதே (சங். 91:9). கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எல்லா வியாதிகளையும் சிலுவையிலே சுமந்து தீர்த்து விட்டாரே! (மத். 8:17) அப்படியே வியாதி வந்தாலும் அவர் தழும்புகளால் சுகம் கொடுத்து விட்டாரே! (1 பேதுரு 2:24) அல்லேலூயா! எசேக்கியா ராஜாவைப் போல அழவேண்டிய காலமா இது? எசேக்கியாவைப் போல அடையாளம் கேட்கும் நேரமா இது? எசேக்கியாவைப் போல அத்திப் பழ அடைதேட வேண்டிய காலமா இது? கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவினால் வந்த காலமிது (யோ. 1:17). சிலுவை மரணத்தின் மூலம் எண்ணிலடங்கா ஆசீர்

வாதங்களை பெறும் காலம் இது; வசன மழையில் நனையும் காலமிது; பழைய ஏற்பாட்டு மக்களுக்கு மேசியா வருவார் என்று தெரியும். ஆனால் அவர் மூலமாய் என்னென்னவெல்லாம் இலவசமாய்க் கிடைக்கப் போகிறது என்று தீர்க்கதரிசனமாய் சில காரியங்கள் சொல்லப்பட்டிருந்தும் முழுமையாய் அறியாமல் இருந்தனர். இன்றோ வசனத்தை விசுவாசித்து சுகமாக வேண்டியகாலம். அல்லேலூயா! இன்னும் எசேக்கியாவின் நிலை வேண்டுமா? யோபுவுக்கு வியாதியைக் கொடுத்த பிசாசின் அதிகாரத்தை உரிந்து போட்ட தேவன் உனக்குள்ளே இருகிகிறார். (கொலோ. 2 : 13, 14). பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய்ப் பிறந்த இயேசுவை விசுவாசிக்கும்பொழுது வியாதி அணுகுமா? (அப். 10:38). பழைய ஏற்பாட்டு காலமக்கள் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும் வாக்குத் தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார் (எபி. 11:39, 40). இப்படியிருக்க இனி எந்த வியாதி வந்தாலும் பழைய ஏற்பாட்டு மக்களின் முறைமையை கைக் கொள்ளாதே! புதிதும் ஜீவனுமான மார்க்கம் உனக்கிருக்கும் போது பழையவைகள் உனக்கில்லையே! எல்லாம் புதியதாயிற்றே! அல்லேலூயா!

## 10. தேவன் தரும் வியாதியும் உண்டோ?

"வியாதியை பிசாசுதான் தருகிறான்; தேவன் வியாதியைக் கொடுப்பதும் இல்லை; அனுமதிப்பதும் இல்லை;" என்று இது வரை ஆவியானவரால் அறியப்பட்டோம். அது பற்றி இன்னும் ஆவியானவர் விளக்குவாராக! வியாதி பொல்லாங்கனின் கிரியை. அதை தேவன் அழித்தார் (1 யோ. 3:8); அதனால் அவரை விசுவாசிக்கிறவர்களை அவர்சோதிக்க மாட்டார் என்று முந்தி அறிய வேண்டும் (யாக். 1:13) வியாதியை பிசாசு எல்லாருக்கும் தருகிறான். (யோ. 10:10). ஆனால் தேவனோ தன்னை விசுவாசிக்கும் தன்னுடைய பிள்ளைகளுக்கு (யோ 1:12) நிச்சயமாய் கொடுப்பதும் இல்லை; அனுமதிப்பதும் இல்லை. அப்படியானால் மற்றவர்களுக்கு கொடுப்பாரா? இதை அறியுமுன்னே, பொதுவாக வியாதி எதனால் வருகிறது என்று முதலில் பார்ப்போம்.

**மனிதன் செய்யும் சரீரப் பாவத்தினால் வியாதி வரலாம்.** உதாரணமாய் மத். 9:2ல் திமிர்வாதக்காரனைப் பார்த்து தேவன் இயேசு சொன்னதைப் பாருங்கள். பாவத்தை செய்யத் தூண்டியது பிசாசு என்றாலும், செய்தவன் மனிதன் தானே! பிசாசு தூண்டியும் பாவம் செய்யாதிருந்தால் வியாதி வரவாய்ப்பில்லையே! **அடுத்ததாய் சாபத்திலே பல உண்டு;** அவைகளிலே ஒன்று வியாதி. அப்படியானால் வியாதி சாபத்தாலும் வரலாம். எண். 12ஐப் பாருங்கள். தேவனுடைய மனுஷனாகிய மோசேயைப் பற்றிய மிரியாமின் தவறான வார்த்தையினால் அவள் வெண்குஷ்டமானாள். (எண் 12:10). இது பிசாசு கொடுத்ததல்ல; தேவன் கொடுத்ததுமல்ல; அனுமதித்ததும் அல்ல. உபா. 28:15; லேவி. 26: 14-16 போன்றவற்றில் சொன்னபடி, தேவனுடைய வார்த்தைகளை மீறிப்போனால் சாபம் வரலாம். எல்லா சாபத்தையும் இயேசு சிலுவையிலே தீர்த்து விட்டார். (கலா. 3:11). இதை விசுவாசித்து அறிக்கை செய்பவனுக்கு சாபமில்லை. சாபத்தினால் வரும் வியாதியுமில்லை. யாத். 20:5ன் படி இந்த சாபம் பரம்பரை பரம்பரையாய் வரும் சாபமாயும் இருக்கலாம்; அல்லது உன் மூலமாய் வரும் சாபமாயும் இருக்கலாம். உதாரணமாய் சாலையிலே இடது பக்கம் போங்கள்; வலது பக்கம் போனால் ஆக்சிடெண்ட் வரும் என்று போலீஸ்காரர் சொல்லியும் கேட்காமல், வலது பக்கம் ஒருவர் போய் ஆக்சிடெண்ட ஆகிவிட்டது என்று வைத்துக் கொள்வோம். இந்த ஆக்சிடெண்டை போலீஸ்காரரா கொடுத்தார்? இல்லை. அது போல தேவனுடைய வார்த்தைகளுக்கு மீறி நடக்கும் போது நாமே சாபங்களை தேடிக் கொள்கிறோம். அந்த சாபங்களில் ஒன்று தான் வியாதி. ஆக பாவம் செய்வதாலும் வியாதி வரலாம்; சாபத்தினாலும் வியாதி வரலாம். பாவத்தையும் சாபத்தையும் இயேசு சிலுவையிலே தீர்த்தார் என்று விசுவாசிக்கும் போது இவைகள் நீங்கிப் போகும்.

**மூன்றாவதாய் பிசாசினாலும் வியாதிகள் வரலாம்.** அவன் வேலையே அதுதான் (யோ. 10:10). யோபுக்கு வியாதியை கொடுத்தவன் பிசாசு தானே! அப். 10:38 ஐ வாசியுங்கள். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் இயேசு சுற்றி திரிந்தார். அல்லேலூயா! இரட்சிக்கப்பட்டவர்களின் ஆவியோடு பரிசுத்த ஆவியானவர் இருப்பதால் சாத்தானின் ஆவி நமது ஆவிக்குள் கிரியை செய்ய முடியாது. **அதனால்தான் இரட்சிக்கப்பட்டவனை பிசாசு பிடிக்காது என்கிறேன்.** அறிவாகிய ஆத்மா (ரோ. 12:1, 2) நாளுக்கு நாள் மறுரூபமாகக் கொண்டே இருப்பதால் அதை பிசாசு தொட வாய்ப்புண்டு. அதனால்தான் கள்ள உபதேசங்கள்

பெருகுகின்றன. மனிதனுக்குள்ள மூன்றாவதான சரீரத்தை அவன் தொட வாய்ப்புண்டு. அதில் தான் வியாதியை கொடுப்பான். இதைத் தான் நாம் இயேசுவின் நாமத்தில் விரட்ட முடியும். பாவத்தினால் வந்த வியாதியா? மன்னிப்பு கேட்டு ஒப்புரவாகு. (யாக். 5) சாபத்தினால் வந்த வியாதியா? விசுவாசித்து விடுதலையாகு. (கலா. 3:13) பிசாசினால் வந்த வியாதியா? இயேசுவின் நாமத்தில் விரட்டு. (மாற். 16:17) இந்த சரீரம் தேவனால் விலைக்குக் கொள்ளப்பட்ட தேவனுடைய ஆலயம். இதை பிசாசு கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார். விசுவாச இரத்தம் எனக்குள் ஓடுகிறது. வாதை என் கூடாரத்தை அணுகாது. சிலுவையிலே இயேசு எல்லா வியாதிகளையும் சுமந்து தீர்த்து விட்டார் என்று விசுவாசி. வெற்றி உனதே! 25 வருடங்களாய் வியாதி எனக்கில்லை. அல்லேலூயா! **தேவனும் வியாதியை கொடுக்கிறார்.** யாருக்கு? இரட்சிக்கப்பட்ட மனுஷனுக்கு Sonship (புத்திர சுவீகாரம்) Fellowship (தேவ ஐக்கியம்) ஆகிய இரண்டு உண்டு. அவன் தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய் போகப் போக தேவ ஐக்கியத்தை இழந்து போகிறான். இதனால் பாவமும் சாபமும் மேற் கொள்ளலாம்; பிசாசின் கிரியைகள் தலை தூக்கலாம். வியாதி வரலாம்; விடுதலை நிச்சயம்உண்டு. எது வரைக்கும் இந்த நிச்சயம் உண்டு தெரியுமா? நீ தேவனுடைய பிள்ளை என்கிற புத்திரசுவீகாரம் உன்னிடத்தில் இருக்கும் வரை தான். Sonship ஆகிய புத்திர சுவிகாரம் உன்னிடத்தில் இல்லாத நிலைக்கு நீ மாறிவிட்டால் உன்னால் கிறிஸ்துவின் சபைக்கே கேடு என்ற நிலைவரும் போது தேவன் வியாதியைக் கொடுக்கிறார். அவரிடத்தில் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு; அன்பும் உண்டு; பட்சிக்கிற அக்கினியும் உண்டு. சங்கார தூதனுமுண்டு; சமாதான தூதனுமுண்டு; அல்லேலூயா! இந்த வியாதியிலிருந்து விடுதலையே இல்லை. முடிவு மரணம் தான். இந்த நிலையில் வியாதிப்பட்ட மனுஷன் விடுதலையின் எல்லைக்குள் வருவதே இல்லையே! வியாதி மட்டுமல்ல; வேறு தீய காரியங்களும் கூட சம்பவிக்கலாம். 2 நாளா. 21:14, 15, 18, 19 வசனங்களை வாசியுங்கள். யோராம் என்ற ராஜாவுக்கு தேவன் கொடுத்த வியாதி, தண்டனை. இவன் இஸ்ரவேலன் தான். ஆனால் இவன் தன்னுடைய Sonship ஐ புத்திர சுவிகாரம் என்ற நிலையை இழக்கும் அளவிற்கு தேவனுக்கு விரோதமாய் விக்கிரக ஆராதனைகளை நடப்பித்தான். தன்னோடு மற்றவரையும் சோரம் போக வைத்தான். முடிவு - சகாயமின்றி சடிதியிலே மரித்தான். 2 ராஜா. 1ம் அதிகாரம் வாசியுங்கள். அகசியா ராஜா வியாதிப்பட்டபோது சுகம் பெற பாகாலைத் தேடுகின்றான். இதனால் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொன்னபடியே ஆயிற்று. தாவீதுக்கு

பத்சேபாள் பெற்ற முதல் மகனை தேவன் அடித்தாரே ஏன்? (1 சாமு. 12:15). தவறான வழியிலே பிறந்த மகன். தேவன் சொன்னபடி தாவீதின் மகனான இவன் தேவாலயம் கட்டினால், மோசேயைப் பார்த்தே முறுமுறுத்த ஜனங்கள், "இந்த தவறான வழியிலே பிறந்தவன் கட்டிய தேவாலயத்தில் மகிமையிருக்காது. இங்கே நாங்கள் வருவதே சாபக் கேடு" என்று சொல்லி அநேக இஸ்ரவேலர்கள் விலகிப் போக வாய்ப்புண்டே; இதனால் தேவன் திட்டமிட்டிருந்த ஒரு கூட்ட ஜன ஆதாயக் காரியம் நின்றுப் போகுமே! எனவே இவன் வாழாதிருப்பது நலமென்று எண்ணி அவனை அடித்தார். இது தாவீதின் பாவத்தாலோ சாபத்தாலோ அல்ல; ஏனெனில் தாவீது தான் மன்னிப்பு கேட்டு விட்டானே! அதற்காய் ஒரு சங்கீதமே பாடிவிட்டானே! இன்னும் இப்படி எத்தனையோ வேதத்தில் உண்டு. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே 3 யோ. 2ன் படி தெய்வீக ஆரோக்கியத்தோடு வாழு. வாதை உன் கூடாரத்தை அணுகாமல் போகட்டும்! பாவம், சாபம், பிசாசின் கிரியைகள் ஒன்றும் உன்னைத் தொடாதபடி தேவ ஐக்கியத்தை காத்துக் கொள். புறஜாதியாரை தேவன் அழிக்கும் போது உனக்கும் வியாதியினால் தேவ அழிவு வராதபடி Sonship ஐ காத்துக் கொள். ஆவியானவர் துணை புரிவார்.

# 11. உடல் ஊனமோ, வியாதியோ, வறுமையோ வருவது தேவ நாமம் மகிமைப்படவா?

பல கிறிஸ்தவர்கள் பிரசங்கிப்பதும் விசுவாசிப்பதும் என்னவென்றால் "தேவனுடைய நாமம் மகிமைப்படும்படிக்கே மனிதனுக்கு வியாதியோ வறுமையோ உடல் ஊனமோ வருகிறது" என்பதாகும். ஒருவனுக்கு வியாதி வந்தால் தேவனுடைய நாமம் மகிமைப்படும் என்றால், இயேசு கிறிஸ்து சிலுவையில் வியாதியை ஏன் ஒழிக்க வேண்டும்? (மத். 8:14; 1 பேதுரு 2:27) வறுமையை ஏன் தீர்க்க வேண்டும்? (2 கொரி. 8:9) அப்படியானால் தேவனுடைய நாமம் மகிமைப்படக் கூடாதென்பது இயேசுவின் சித்தமா? சற்று சிந்தியுங்கள். யோ. 9: 1-3ஐ வாசியுங்கள். இதை வைத்துக் கொண்டு பிறவியிலே இவன் குருடனாய் பிறந்தது தேவ சித்தம் என்கின்றனர். 3ஆம் வசனத்தை வாசியுங்கள். தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில்

வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான். தேவனுடைய கிரியைகள் எப்போது இவனிடத்தில் வெளிப்பட்டது? இவன் சுகமாகும்போது தானே! வச 8 முதல் 41 வரை வாசித்தால் தேவனின் கிரியைகள் எப்படியாய் வெளிப்பட்டது என அறியலாம். தேவனுடைய கிரியைகள் எப்போதும் பிசாசின் கிரியைகளை அழிப்பது தான் (1 யோ. 3:8). வறுமை, வியாதி, தோல்வி, மமரணம் எல்லாமே பிசாசின் கிரியைகள். அல்லேலூயா!

தேவனுடைய கிரியைகள் நன்மை செய்வது தான் (எபே. 2:10) எனவே தான் மனிதனாய்ப் பிறந்த இயேசு நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார் (அப். 10:38). ஆக உடல் ஊனமோ, வியாதியோ, வறுமையோ மரணமோ தேவனுடைய கிரியை அல்ல; ஏனெனில் அவைகள் நன்மை யானவை அல்ல அல்லவா! நன்மையான கிரியைகள் நம்மில் நடக்கும் போது தான் தேவ நாமம் மகிமைப்படும். தீமையான காரியங்கள் நடக்கும் போது தேவ நாமம் மகிமைப்படாது. அதனால் தான் உலகமெங்கும் தேவனுக்கு சாட்சியாய் இருக்க வேண்டுமென்று நமக்கு கட்டளையிட்டார் (அப். 1:8)

யோ. 9 : 3 ஐ மறுபடியும் படியுங்கள். குருடன், தான் தானாய்ப் பெற்றோரால் பிறந்தான்; தேவன் அவனை குருடனாய்ப் பிறப்பிக்க வில்லை. குருடனாய்ப் பிறந்த இவனிடத்தில் தேவனின் கிரியை வெளிப்பட அவரே சித்தம் கொள்கிறார். அப்படித்தான் வியாதி, வறுமை, மரணம் எல்லாமும். தேவ பிள்ளைகளுக்கு எப்போதும் தேவன் நன்மை செய்யவே சித்தமாயிருக்கிறார் (யாக். 1:17). யோ. 11: 4ஐ வாசித்தால் கூட லாசருக்கு வந்த வியாதி தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது என்று கணித்துப் பிரசங்கிப்போரும் உண்டு. அதை மறுபடியும் வாசியுங்கள். லாசருக்கு வந்த வியாதி நிச்சயம் மரணத்தைத் தந்தாலும் அந்த மரணத்தினின்று அவன் உயிர்தெழும் போது தேவனுடைய மகிமை வெளிப்பட்டது. அல்லேலூயா! யோ. 11:40ல் சொல்லப்பட்டது இது தானே! விசுவாசிக்கும் போது தான் தேவ மகிமை வெளிப்படும். மற்றபடி வியாதியிலோ மரணத்திலோ நிச்சயம் வெளிப்படாது. பிசாசின் கிரியைகள் தான் வெளிப்படும்.

# 12. குருடர்களை செவிடர்களை தேவன் படைக்கிறாரா?

மோசேயிடம் தேவன் சொன்ன யாத். 4:11 ஐ வைத்துக் கொண்டு பலர், ஊமையன், செவிடன் குருடன், ஆகிய எல்லாரையுமே தேவன் உண்டாக்குகிறார் என்று விசுவாசிக்கின்றனர். அப்படியானால் "இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம்?" என்று சீஷர்கள் கேட்டபோது, "யாருடைய பாவத்தாலுமல்ல; தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" என்று இயேசு சொன்னதால் (யோ. 9:2, 3) பாவத்தின் விளைவாலும் மனுஷன் உடல் ஊனமுற்றவனாய்ப் பிறக்கிறான் என்று அறிகிறோம். அந்த குறிப்பிட்ட குருடனின் மூலமாய் தேவனுடைய கிரியைகள் - அதாவது நன்மையான, குணமாக்கும் கிரியைகள் வெளிப்படும் பொருட்டும் அவன் பிறந்தான் என அறிகிறோம். ஆக தேவன் பிறப்பிக்கவில்லை; மனுஷனே அப்படிப் பிறக்கிறான். அப்படிப் பிறக்கும் ஒரு சில உடல் ஊனமுற்றோரை தேவன் தெரிந்து கொண்டு தன்னுடைய நாமத்தை வெளிப்படுத்திக் கொள்கிறார். அப்படியானால் மோசேயிடம் சொன்னதன் கருத்து என்ன? **நான் விசுவாசித்ததை வெளிப்படுத்துகிறேன்.** தேவனின் சிருஷ்டிப்புப் பணி, முதல் 6 நாளிலேயே முடிந்து விட்டது. அவர் படைத்தது ஆதாம் - ஏவாள் ஆகிய இருவரை மட்டும் தான். அதற்குப் பின் தேவன் மனிதரைப் படைக்கவே இல்லை. தேவன் ஒருவனைப் படைத்தார்; அவன் மூலமாய் பக்தியுள்ள சந்ததி வரும்படிக்கே! (மல். 2:15). தன்னுடைய உருவாக்கும் பணியை தன்னுடைய சாயலின்படியும் ரூபத்தின்படியும் படைக்கப்பட்ட மனிதனிடமே ஒப்புவித்தார்! இனி மனிதர்களை உருவாக்குவது தேவனல்ல; மனிதனே பல்கிப் பெருகி பூமியை நிரப்ப வேண்டும். (ஆதி. 1:28) உருவாக்க வேண்டியவன் மனுஷன்; ஆனால் அதற்கு உறுதுணையாய் தேவன் இருக்கும்போது நல்ல படியாய் உருவாக வழியுண்டு. பரிசுத்தவான்களோடு தேவன் இருந்து செயல்படுவதால், பரிசுத்தவான்கள் உருவாக்கும் பிள்ளைகள் பரிசுத்த மாயிருக்கும் என்று வேதம் சொல்கின்றது (1 கொரி. 7:14) கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா என்ற சங். 127 : 1 ஐ தியானியுங்கள். கர்த்தரின் உதவியில்லாமலும் சுயமாயும் பிள்ளைகளை உருவாக்க முடியும். அடிமைப் பெண் ஆகாரால் வீடு கட்டப்படட்டும் என்று முயற்சி செய்து மனுஷனை உருவாக்கிய சாராளை நினையுங்கள். (ஆதி. 16:2) கர்த்தரின் உதவியை நாடாத போது

குழந்தைகளை உருவாக்கும் காரியத்தில் பிசாசானவன் உதவி செய்ய வரக்கூடும். அவனின் எண்ணமெல்லாம் சந்ததியே வரக்கூடாது; அப்படியே வந்தாலும் பக்தியுள்ள சந்ததி வரக்கூடாது என்பதுதான். இதனாலே கர்த்தரால் கட்டப்படாத வீடுகளில் பிசாசின் ஈடுபாடுகள் நிறைந்து சில வேளைகளில் குருடும், செவிடும் ஊமையுமாய் பிள்ளைகள் பிறக்கின்றன. அன்புள்ள தேவன் இவர்களையும் குணமாக்க ஆசைபடுகிறார். விசுவாசித்து வந்து குணப்படுவோரும் உண்டு; தேவனே தன்னுடைய அநாதி தீர்மானத்தின்படி அவனுக்காய் தேடிப் போனதும் உண்டு. மோசேயைப் போல் தாம் குணமாகப் போவதை விசுவாசிக்காதவர்கள் அப்படியே பழைய நிலையிலேயே இருப்பதும் உண்டு; விசுவாசித்தோர் குணமாவதும் உண்டு. இதனால் தேவனின் நாமம் மகிமைப்பட்டதும் உண்டு; அதற்காகவே அவன் பிறந்தான் என்று தேவன் அறிந்திருக்கிறார். அல்லேலூயா!

மனிதனுக்கு ஆதி. 1:28ல் தேவன் கொடுத்த 5 அதிகாரத்தில் இரண்டை பிசாசிடம் மனிதன் ஒப்புவித்ததால் ஆதி. 9:1, 2 மற்றும் லூக். 4:6 ன் படி பலுகிப் பெருகி பூமியை நிரப்பும் அதிகாரம் இன்னும் மனிதனிடமே உள்ளது. பிறக்கும் பிள்ளைகளின் உடல்வாகு, நிறம் குணாதிசயங்கள் எல்லாமே மனிதனின் மூலம் தான் வருகின்றன என்று விஞ்ஞானமே சாட்சியிடுகின்றது. மனிதன் இல்லாமல் தேவன் தானாகவே இதுவரைக்கும் எந்தமனிதனையும் ஆதாம் ஏவாளுக்குப் பின் படைத்ததே இல்லை இயேசு கிறிஸ்துவைத் தவிர, ஏனென்றால் அவர் கொடுத்த அதிகாரத்தை எடுக்கவே மாட்டார். அவர் தந்த அதிகாரத்தின்படியே மனிதன் செயல்படுகின்றான். அரசாங்கம் தந்த அதிகாரத்தின் படி மாவட்டகலெக்டர் ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கினாலும் அதை மக்களில் பலர் அரசாங்கம் தந்தது என்று தான் சொல்கின்றனர். அது போல தேவனின் சாயலிலும் ரூபத்திலும் படைக்கப்பட்ட மனிதன் அவரின் அதிகாரப்படி உருவாக்கினார் என்று நாம் சொல்லக்கேட்கிறோம். கர்ப்பத்திலே கனியிருந்தாலும் காய் இருந்தாலும் எல்லாமே அவரின் ஈவு என்று சொல்ல ஆரம்பிக்கிறோம். ஏவாள் கூட காயினை கர்த்தர் கொடுத்தார் என்கிறாள். (ஆதி. 4:1) ஆனால் 1 யோ. 3 : 12 சொல்கின்றது 'அவன் பொல்லாங்கனால் உண்டானவன்' என்று. இந்த அடிப்படைக் கருத்தில் தான் கர்த்தர் உண்டாக்கினார் என்று யாத். 4:11ல் சொல்லப்பட்டுள்ளது. ஆக உண்டாக்குபவன் மனிதன்; அதிகாரம் கொடுத்தவர் தேவன், பக்தியுள்ள சந்ததியைப் பெற வேண்டுமே என்ற எண்ணத்தில் எந்த ஒரு ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளும்போது, தேவன் அந்த வீட்டைக் கட்டுகிறார். குறைகள், ஏதுமின்றி பிறக்க வழி செய்கிறார். மற்ற படி மாம்சீக இச்சையினாலோ, ஒருவருக்கொருவர் உடன்படாதபடி

இணைவதாலோ, விபச்சாரம் வேசித்தனம் போன்றவற்றில் ஈடுபடும்போதோ மனிதனுக்குள்ள அதிகாரத்தால் குழந்தைகள் உருவாகும் போது ஒரு சந்ததி வருகிறதே என்ற எண்ணத்தில், அந்த சந்ததியாவது பக்திக்குள் வந்து ஒரு கூட்டம் உருவாகட்டுமே என்ற எண்ணத்தில் தேவன் உதவி செய்ய வருகிறார். அப்போது சாத்தானின் ஆதிக்கம் மனிதனால் ஏற்பட்டால், கர்த்தர் விலகி விடுகிறார்; சாத்தான் தன் இஷ்டப்படி பிள்ளைகளைப் பெற வழி வகுக்கிறான். அவைகள் எப்படியிருக்குமென்று நாம் அறிவோம். ஒரு வேளை சாத்தானின் ஆளுகை குறைவாகவோ, இல்லாமலோ இருந்தால் அப்போதும் தேவன் குழந்தைகளை உருவாக்கத் துணைபுரிகிறார். அப்போதும்அதிகாரம் படைத்த மனிதனின் (ஆண் - பெண்) எண்ணம், செயல், பாரம்பரியம், உடல் நிலை போன்ற காரியங்களை வைத்தே குறைவுகளோ நிறைவுகளோ சரீரப்பிரகாரமாய் அமைகின்றன. ஆக தேவன் எவ்வளவு நன்மையான ஈவுகளைச் செய்யத் துடிக்கிறார் என்று யோசித்துப் பாருங்கள் (யாக். 1:17).

எந்தக் குழந்தை எந்த சூழ்நிலையில் எந்த மனிதனால் உருவானாலும் எல்லாவற்றுக்கும் சுவாசத்தைக் கொடுத்து ஜீவனைக் கொடுக்கிறவர் கர்த்தரே என்று முந்தி அறிய வேண்டும். (யோபு 33 : 4; ஆதி. 2:7) தேவனின் அன்பு எவ்வளவு பெரியது பார்த்தீர்களா? இப்படியாய் தேவன் பட்சபாதமின்றி உயிர் கொடுத்தாலும் அதை கொல்லுகிறவன் பிசாசானவன் (மத். 10:28; யோ. 10:10; எபி. 2:14). இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! கர்த்தர் உடல் ஊனமற்றவர்களை உருவாக்குவதில்லை; உருவாக்கும் அதிகாரத்தை மனிதனே வைத்திருக்கிறான். அதன் மூலமாய் மனிதனுக்கு மாமிச இச்சைகள், சிந்தைகள் வளரட்டும் என்று பிசாசு விரும்பித்தான் இந்த அதிகாரத்தை மனிதனிடமிருந்து பறிக்க வில்லை. ஏசா. 35: 5,6 வாசியுங்கள். பரலோகிலே குருடனுமில்லை; செவிடனுமில்லை; முடவனுமில்லை; ஊமையனுமில்லை. அல்லேலூயா! தேவனின் சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்பட விரும்புகிற தேவன் நம் தேவன் அல்லவா! (மத். 6:10)

# 13. ஜெபித்தாலும் வியாதி நீங்கவில்லையே ஏன்?

இரட்சிக்கப் பட்டதேவபிள்ளைகள் வியாதியினின்று விடுதலையாக ஜெபித்து விடுதலையாகவில்லையே என்று வருந்தி அறிக்கையிடுவதைப் பார்க்கிறோம். பெரும்பாலான பிரசங்கிமார் "வியாதியிலிருந்து விடுதலை யாவது தேவனுக்கு சித்தமில்லை" என்று சொல்லி சுகமாகாதவர்களை சமாதானப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட பிரசங்கிமார் இன்னும் மத். 8ல் வருகிற குஷ்டரோகியைப் போல கர்த்தருடைய சித்தமறியாமல் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். "எனக்கு சுத்தமாக சித்தமுண்டு" என்று இயேசு சொன்ன உடனே புரிந்து கொண்டான் குஷ்டரோகி. இவர்களோ தாங்களும் புரியாமல் மற்றவர்களையும் புரிய விடாமல் ஆக்குகின்றனர். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீ குணமாக வேண்டுமென்பது தேசித்தம். எனவே தேவசித்தத்திற்கு விரோதமாய், "ஜெபித்தும் சுகமாகவில்லையே" என்று அவிசுவாச வார்த்தைகளை Negative Confession ஆக சொல்லாதே! நீ சொல்லுகிறபடியே உனக்கு ஆகிவிடும். நீ பல நாள் ஜெபித்தும் வியாதி சரீரத்தில் இருந்தபோதும் நீ சொல்லவேண்டிய வார்த்தை "இயேசுவின் தழும்புகளால் சுகமானேன்" (1 பேதுரு 2: 24) என்பதுதான். பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளது" தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசா. 53:5) என்று. நாமோ எபி. 11:39, 40ன் படி அவர்களை விட உயர்ந்தவர்களாய் மணவாட்டிகளாய் இருப்பதால் எதிர்காலத்தில் நடக்கப் போகிற சுகத்தையே விசுவாசித்து அறிக்கை இடுகிறோம். இதுவே தேவனோடு பண்ணுகிற ஜெபமாய் இருக்க வேண்டும். இப்படிப் பண்ண வியாதியின் மத்தியில் இயலாவிட்டால் ரோ. 8 : 26ன் படி ஆவியானவரின் உந்துதலால் நீ அறிக்கையிட முடியும். எனவே தான் நீ ஆவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறோம். அந்த ஆவியினாலே உன் சரீரம் தேவனுடைய ஆலயமாகிறது (1 கொரி. 6: 19) பிசாசு ஆலயமாகிய உன் சரீரத்தை கெடுத்தால் தேவன் அதைக் கெடுப்பார்; உனக்கு வியாதியினின்று விடுதலை உண்டு.

தானியேல் ஜெபித்து பதில் வர 21 நாட்கள் ஆனபடியால் உனக்குள்ளும் குணமாக்கும் வல்லமை இறங்கி வர தடைகள் உண்டா என்று உன்னையே நீ ஆராய்ந்துபார்: அறிந்தோ அறியாமலோ நீ செய்த பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றுக் கொள். பாரம்பரிய சாபமா

என்று ஆவியானவரின் ஒத்தாசையோடு ஆராய்ந்து பார். உன் சாபங்களெல்லாம் சிலுவையிலே தீர்த்தாயிற்று என்று விசுவாசி. விசுவாசித்தால் மட்டுமே உன்னில் தேவ மகிமை வெளிப்படும். எந்த ஒரு தேவ பிள்ளையும் வியாதியோடு மரிக்க வேண்டுமென்பது தேவசித்தமல்ல, "எத்தனையோ ஊழியக்காரர்கள் வியாதியோடு மரித்திருக்கிறார்கள்" என்று நீங்கள் சொல்வது புரிகிறது. சூழ்நிலைகளை வைத்து தேவ சித்தத்தை எடை போட வேண்டாம். உங்களைச் சுற்றியுள்ள ஊழியக்காரர்கள் சாட்சிகளாயிருந்தாலும் அவர்களை நோக்கியே நடவாமல் இயேசுவை நோக்கி ஓடக் கடவோம் (எபி. 12; 1). எந்த சாட்சிகளும் வசனத்துக்கு ஒத்து வருகிறதா என்று பார்த்து தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மத். 24:34ஐப் பாருங்கள். அவர் தொட்ட உடனே குருடன் சுகமானான். மாற் 8:23-25 லே கொஞ்சம் கொஞ்சமாய் பார்வை தெரிந்தது; குஷ்டரோகி ஒருவனை தேவன் தொட்ட உடனே சுகமாக்கினார், இன்னும் 10 பேரை ஆசாரியனிடத்தில் காட்டு என்றார். போகிற வழியிலே சுகமானார்கள். இன்னும் பாருங்கள்:- அப்பொழுது தான் மரித்த சிறுமியை தொட்டு உயிர்ப்பிக்கிறார், பாடையில் வருபவனைத் தொடாமல் பாடையைத் தொட்டே உயிர்ப்பிக்கிறார். ஆனால் நாலு நாளாகி அழுகிய நிலையில் கல்லறையில் இருந்தவனை, தொடாமலே வார்த்தையினாலேயே சுகமாக்கினார். எனவே சுகமாகுவதற்கு இலக்கண வரைமுறை எல்லாம் இல்லை. ஒன்றே ஒன்று மட்டும் நிச்சயம்:- அவர் நமக்கு சுகமளிக்க சித்தமாயிருக்கிறார். எப்படி? எங்கே எப்பொழுது? இதல்ல நமது கேள்வி, அவர் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது (யோ. 42:2). அதற்குத் தேவை நமது விசுவாசம். உடனே சுகம் கிடைக்குமா?

இயேசு கிறிஸ்து போகும்போது வழியிலே உள்ள அத்திமரம் கனி கொடாதிருந்ததால் அதை சபித்தார் (மாற். 11:13, 14) சீஷர்கள் அவர் வார்த்தையை கேட்டார்கள். ஆனால் அந்த மரம் பட்டுப் போனதை அறியவில்லை. மறு நாள் காலையில் அந்த வழியில் வரும் போது அது பட்டுப் போனதைக் கண்டு இயேசுவிடம் சொன்னார்கள். அதற்கு இயேசு சொன்ன மாற். 11:22-24 ஐ வாசியுங்கள், தேவ வார்த்தையின் மேல் விசுவாசத்தோடு எதைக் கேட்டாலும் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள் நிச்சயமாய் கிடைக்கும். பட்டுப்போக, தேவன் சபித்த அந்த வார்த்தையை முதல் நாளே அவர்கள் விசுவாசித்திருந்தால் மறுநாள் நேரில் கண்டு சொல்லும் நிலை வந்திருக்காது. மத். 21:19ன் படி அந்த மரம் அப்பொழுதே பட்டுப் போயிற்றாம்; உண்மையும் அது தான். ஆனால் சீஷர்களுக்கு தெரிந்ததோ மறுநாள் தான்.

இப்படித்தான் வியாதிக்காக இயேசுவின் தழும்புகளால் சுகமானேன் என்று எப்போது ஜெபித்தீர்களோ அப்போதே சுகமானது என்று விசுவாசியுங்கள். ஒரு வேளை வெளிப்படையாய் சுகம் தெரிவது மறுநாளோ வேறு நாட்களோ இருக்கலாம். ஆனால் தேவ வார்த்தையை விசுவாசித்து அறிக்கையிடுகின்ற அன்றே சுகமானது என்று எண்ணினால் தான் சுகமாகும் (See மாற். 11:24) தேவன் சபித்த அன்றே மரத்தையும் பூமியையும் இணைக்கும் வேர் பட்டுப் போயிருக்க வேண்டும்: அது வெளியே தெரியாது. அப்படி வேர் பட்டுப் போனதினாலே மறு நாள் இலைகள் காய்ந்து போனதை கண்டு பேதுரு பட்டுப் போயிற்று என்கின்றான். அப்படித்தான் வியாதியும். விசுவாசித்து ஜெபித்த அன்றே வியாதியின் வேர் பட்டுப் போயிற்று. வெளிப்படையாய் குணமாவது நிச்சயம் பிற்பாடு இருக்கலாம். இந்த அத்திமர உவமானத்தை சொல்வதால் ஜெபித்த அன்றே எல்லா வியாதியும் வெளிப்படையாய் குணமாகாது என்று எண்ண வேண்டாம். இப்படியும் நடக்கலாம், உடனேயும் நடக்கலாம். தேவையானது ஒன்றே ஒன்று. அது தான் விசுவாசம். ஒருக்காலும் தவறான அறிக்கை கூடாது.

விசுவாசமுள்ள ஜெபம் தான் பிணியாளியை இரட்சிக்கும் (யாக். 5:15) உன் ஆத்துமா தேவ வசனத்தினாலே தினந்தோறும் மறுரூபமாகி நல்ல படியாய் செழித்திருப்பது போல (ரோ. 12:2) எல்லாவற்றிற்கும் சுகமாயிருப்பாய், சுகமாகாத வியாதி தேவனிடத்தில் ஒன்றுமில்லை (3 யோ. 2). அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக். 1:37) விசுவாசிப்போம் செயல்படுவோம்: விடுதலை நிச்சயமே.

# 14. விசுவாசமே வியாதிக்கு மருந்து

இன்றைக்கு கிறிஸ்தவ வட்டாரத்திலே அநேகர் வியாதியால் தவிக்கின்றனர். எவ்வளவோ பணம் செலவழித்து டாக்டர்களிடம் போகிறவர்களும் உண்டு; டாக்டரிடம் போகாமல் வைராக்கியமாய் இருப்பவர்களும் உண்டு. நம் கண்களுக்கு முன்பாக வெளிப்படையாய்த் தெரியும் பிரபல ஊழியக்காரர்கள் வியாதியிலேயே மரித்துப் போகிறதைக் கண்டு விசுவாசிகளே மனந்தளர்ந்து போகிறார்கள். பல்லாவரம் பாஸ்டர் ஸ்டீபன், பட்டாபிராம் பாஸ்டர் பெஞ்சமின், அண்ணா நகர் ஜோசப் ஸ்டாலின், ACA பாஸ்டர் சாம்சுந்தர், மகிழ்ச்சி ஆசிரியர் ஜீவானந்தம் போன்றோர் அண்மைக் காலத்திலேயே மரித்தவர்கள். தெய்வீக ஆரோக்கியத்தை

வெளிப்படையாய்த் தமிழ்நாட்டில் எடுத்துக் காட்டிய போதகர் ஜஸ்டின் பிரபாகரனின் வியாதியால் ஏற்பட்ட மரணத்தை பெரும்பாலான கிறிஸ்தவர்களால் இன்னும் ஜீரணிக்க முடியவில்லை. நம் தேவனின் சித்தமே நாம் சுகமாயிருக்க வேண்டும் என்பதுதான் (3 யோ. 2) அதனால்தான் அவர் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் நன்மை செய்கிறவராயும் பூமியிலே சுற்றித் திரிந்தார் மனிதனாக (அப். 10:38). நம் நோய்களை அறவே ஒழிக்க வேண்டும் என்று தான் நமக்காய் காயங்கள் பட்டார்; மரித்தார் (மத். 8:17; ஏசா. 53:4). இன்றும் காயத் தழும்புகளோடே பரலோகத்தில் இருக்கிறார் நாம் குணமாயிருக்க வேண்டும் என்பதற்காய் (1 பேதுரு 2:24). "நீடித்த நாட்களாய் அவனைத் திருப்தியாக்கி என் இரட்சிப்பை அவனுக்கு காண்பிப்பேன்" (சங். 91:16) என்று சொன்ன தேவனல்லவா! அவர் சொன்னதைச் செய்பவர்: செய்வதையே சொல்லுபவர்; அல்லேலூயா! அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதித்து வியாதியை விலக்குவேன் என்று சொன்ன தேவனல்லவா நம் தேவன் (யாத். 23:25). "The Lord will protect you from all sickness and he will not bring on you any of the dreadful diseases..." (உபா. 7:15) என்ற வசனம் நமக்கல்லவோ! இப்படிப்பட்ட தான அன்புள்ள தேவன் நமக்கு இருக்கும் போது மேகம் போன்ற திரளான ஊழியக்காரர் மற்றும் விசுவாசிகளின் சாட்சிகளையே பார்த்துப் பார்த்து ஏன் பின் மாறிப் போகிறாய்? உலகத்திலே உன்னைச் சுற்றி எப்படிப்பட்ட சாட்சிகள் இருந்தாலும் விசுவாசத்தால் அவர்கள் பெறும் வெற்றியை மட்டும் தான் பார்த்து சுதந்திரிக்க முயல வேண்டுமே அல்லாமல் அவர்களின் தோல்வியைக் கண்டு துவண்டு போவதோ பின் மாற்றம் அடைவதோ கூடாது. இது குறித்து உன்னிடமுள்ள பாரமான யாவற்றையும் நெருங்கி நிற்கிற உலகத்தையும் தள்ளிவிட்டு விசுவாச ஓட்டத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி பொறுமையோடு ஓட வேண்டும் (எபி. 12:1).

ஒன், டூ, த்ரி என்று சொல்லி உன் விசுவாச ஓட்டத்தை ஆரம்பிக்க தேவன் தயாராயிருக்கிறார். நீ களத்தில் இறங்கவோ, ஓடவோ தயாராய் இருக்கிறாயா? எப்பொழுது இந்த readiness; அதாவது ஆயத்த நிலைவரும் தெரியுமா? தேவ வசனத்தை தொடர்ந்து கேட்பதால் மட்டுமே! (ரோ. 10 : 17) வசனமில்லாத வாழ்க்கை விசனமே. இன்றைக்கு பெரும்பாலான ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்வோர் வேத வசனங்களை வாசிப்பதில்லை. ஏதோ சபையிலே சொல்லும் செய்திகளையும் அனுதின தியானப் புத்தகங்களையும் ஆயிரம்-கோடி ஸ்தோத்திரங்கள்

மாத்திரமே அவர்கள் வாசிப்பதாகும். ஒருமுறையாவது வேதத்தின் 66 புத்தகங்களையும் படித்திருப்பார்களா என்பதும் சந்தேகமே! அந்நிய பாஷை பேசி விட்டாலோ ஏதோ பிசாசுகளை துரத்தி விட்டாலோ ஜோஷ்யம்போல சில வார்த்தைகளை தீர்க்கதரிசனம் என்று சொல்லி அதன் மூலமாய் சில காரியங்கள் நடந்து விட்டாலோ. ஆகா ஓகோ என்று அனைவரும் மகிழும் வண்ணம் பிரசங்கம் பண்ணியோ அல்லது ராகத்தோடே இனிமையாய் இசையோடோ பாடியோ, அல்லது கல்லும் கரையும் வண்ணம் அழுது அழுது ஜெபித்தோ ஆயிரக்கணக்கான ஆத்மாக்களைக் கொண்ட சபை என்று பேறு பெற்றாலோ விசுவாச ஓட்டத்தில் ஓடத் தயார் என்று அர்த்தமல்ல; அல்லது விசுவாச ஓட்டத்தில் ஓடுகிறார்கள் என்றும் அர்த்தமல்ல. உலகப் பந்தயச் சாலையில் ஓடுகிறவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறுவதற்கே இச்சையடக்க மாயிருப்பார்கள். ஆனால் அழிவில்லாத கிரீடத்தைப் பெறப் போகும் நாம் எப்படி இருக்க வேண்டும்? பவுலைப் போல சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தி விசுவாச ஓட்டத்தை ஆரம்பித்தால்தான் (1 கொரி. 9:24-27) அவனைப் போலவே நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடித்து விசுவாசத்தை காத்து நீதியின் கிரீடத்தைப் பெறமுடியும். (2 தீமே.ா 4:7) ஆக சரீர ஒடுக்கத்தால் விசுவாசம் வளர்கிறது என அறிகிறோம். இதைத்தான் ஜீவ பலியாய் ஒப்புக் கொடுத்தல் என்றும் (ரோ. 12:1) மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருத்தல் என்றும் (கலா. 5:24) சொல்லப்படுகிறது. இப்படி இருக்கும் போது தான் நமது சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயம் என்ற அந்தஸ்தைப் பெறுகிறது. (1 கொரி. 6:19). அப்போது தான் "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்" (1 கொரி. 3:17) என்ற வசனம் சரீர வியாதி வரும் போது நிறைவேறும்.

**இந்த நிலை எப்போது வரும் தெரியுமா?** மனிதனுக்கு ஆவி ஆத்மா, சரீரம் என்ற மூன்றும் உண்டு. இருதயமாகிய ஆவியிலே தான் வேத வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. (எபி. 8:10) சங். 103:1-3 வசனங்களை ஒவ்வொரு ஜெபம் முடிந்ததும் சொல்கிறோமே ஏன்? அதைச் சொன்னால் தானே பலருக்கு ஜெபம் பண்ணியதிலே ஒரு திருப்தி வருகிறது. "என் ஆத்மாவே! கர்த்தரை ஸ்தோத்திரி" என்று நம் ஆத்மாவிற்கு கட்டளை கொடுப்பது யார்? அதுவரை தேவனோடு ஆவியோடும் உண்மையோடும் தொழுது உறவாடி (யோ. 4:24) வல்லமையோடு வசனத்தால் நிறைந்திருக்கும் நம் ஆவிதானே! இந்த வல்லமையும் வசனமும் நிறைந்த நம் ஆவி ஆத்மாவிற்கு கட்டளையிடுகிறது. உடனே சரீரம், தேவ வசனப்படி செயல்படுகிறது. அப்போது வியாதிப் பிசாசு ஓடியே போவான். நம் ஆவியிலே

எழுதப்பட்ட வசனத்தின்படி செயல்படுகிறவன் தான் ஆவிக்குரிய மனுஷன். வெறுமனே அந்நிய பாஷை மட்டும் பேசுகிறவன் ஆவிக்குரியவனல்ல. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உன் இதயத்தில் எழுதப்பட்ட வசனப்படி உன் சரீரம் நடக்கட்டும்: ஆவிக்குரிய கிறிஸ்தவன் என்ற நிலைமை வரட்டும்; நிச்சயம் சரீரம் வியாதியினின்று ஆரோக்கியமடையும். இதனால் தான் நாம் வியாதி வரும் முன்னே ஆவியை உயர்த்தி சரீரத்தை ஒடுக்கும் உபவாசத்தைக் கைக் கொள்ளுகிறோம்! ஆவியில் வல்லமையை வசனத்தோடு பெறுகின்றோம்! தெய்வீக ஆரோக்கியம் கூட (Divine Health) நமக்கு வந்து விடுகின்றது. தெய்வீக சுகம் தானாகவே வியாதியின் போது கிடைக்கிறது. இது இலவசம். அல்லேலூயா! நம் ஆத்மா வாழ்வது ஆவியிலுள்ள வசனத்தால் தான் (யாக். 1:21; ரோ. 12:2); இந்த நம் மனமாகிய ஆத்மா மறுரூபமாக, மறுரூபமாக நாம் சுகமாவோம் (3 யோ. 2) வசனத்தோடு கூடிய இந்த விசுவாசமே வியாதிக்கு விடுதலையளிக்கும் மருந்து.

**ஆவிக்குரிய கூட்டத்தில் மூன்று பிரிவுகள் உள்ளனர்** (1) **பிதாக்கள் :-** இவர்கள் ஆதி முதலே அனைத்தையும் அறிந்த பூரண விசுவாசிகள். இவர்களுக்கு தெய்வீக ஆரோக்கியம் என்று முண்டு. இதைத்தான் ஏசா. 33:24 சொல்கிறது. (2) **வாலிபர்கள் :-** தேவ வசனம் இவர்களுக்குள் நிலைத்திருக்கிறதால் ஆவியில் பலவான்கள். கொல்லவும் திருடவும் அழிக்கவும் வந்த பிசாசை வசனத்தாலே ஜெயிப்பவர்கள்; இந்த விசுவாசத்தாலேயே வியாதிப் பிசாசிலிருந்து விடுதலை பெறுபவர்கள். (3) **பிள்ளைகள் :-** புதிதாய் தேவனுக்குள் வந்தவர்கள் விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்க்ள. வசனத்தின் மேல் இவர்களுக்கு விசுவாசம் வேண்டும் (1 பேதுரு 2:3) இவர்கள் ஆவிக்குரிய வாலிபர்களாய் மாறும் வரைக்கும் வியாதிப் பிசாசினால் துன்பப்படுவார்கள். (இது குறித்து 1 யோ. 2:13, 14 ஐ வாசியுங்கள்). இந்த செய்தியை வாசிக்கும் தேவ பிள்ளையே! இதிலே நீ எந்தப் பிரிவில் இருக்கிறாய் என்று நிதானித்துக் கொள். காலத்தைப் பார்த்தால் போதகர்களாய் இருக்க வேண்டிய விசுவாசிகள் இன்னும் பாலகர்களாகவே இருக்கிறார்கள் என்று பவுல் சொல்லியபடி இன்றைக்கு பெரும்பாலான ஆவிக்குரிய சபை கிறிஸ்தவர்கள் இந்த மூன்றாவது ரகத்திலேயே தான் இருக்கிறார்கள. அதனாலே வியாதிக்கு மருந்து விசுவாசம் மட்டுமே என்று உணராமல் உலகப் பிரகாரமாய் நிவாரணம் தேடுகிறார்கள. இவர்களின் விசுவாசம் வளர ஜெபிப்போம். இப்படிப்பட்டவர்களுக்கு, ஆவிக்குரிய வாலிபர்களுக்குரிய விசுவாசத்தை விட, ஆவிக்குரிய பிதாக்களுக்குள்ள ஒன்பது வரங்களில் ஒன்றான விசுவாச வரம் (1 கொரி. 12:9) நிறைந்து காணப்படட்டும். இந்த வரம் தான் சிங்கக் கெபியிலே போடப்பட்ட

தானியேலுக்கு இருந்தது; இந்த வரம் தான் பெலிஸ்தனுக்கு முன்பாக நின்ற தாவீதுக்கு இருந்தது. எப்போதும் நாம் பிதாக்களாகவே இருப்போம்; சில சமயங்களில் வாலிபர்களாகவும் சில சமயங்களில் பிள்ளைகளாகவும் மாறாத படிக்கு ஆவிக்கு கீழ்ப்படிந்தவர்களாய் செயல்படுவோம்! வெற்றி பெறுவோம்!

இயேசுவின் காலத்தில் வியாதியிலிருந்து விடுதலையானவர்கள் விசுவாசத்திலே வாலிபர்களாகவே இருந்திருக்கிறார்கள். இயேசுவின் வசனத்தால் ஈர்க்கப்பட்ட இரண்டு குருடர்கள் இயேசுவிடம் வந்த போது அவர் கேட்ட கேள்வி:- "இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா?" (மத். 9:28, 29) என்பது தான். அவர்களின் விசுவாச அறிக்கை "ஆம்" என்பதே. உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்று இயேசு சொன்னார்; சுகமடைந்தனர். ஆக வியாதிக்கு ஒரே மருந்து வசனத்தை விசுவாசிப்பது மட்டுமே. இன்னொரு இடத்திலே 12 வருடமாய் பெரும்பாடுள்ள ஸ்திரியானவள் "சொஸ்தமாவேன்" என்று இருதயத்திலே விசுவாசித்து அவர் வஸ்திரத்தை தொட்டாள். "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று இயேசு சுகம் பெற்ற அவளிடம் சொன்னார் (மத். 9:20-22) ஆக வியாதிக்கு ஒரே மருந்து விசுவாசமே! ஒரு நூற்றுக்கதிபதி சொன்னான்:- "நான் அதிகாரத்திற்குட்பட்டவன்; ஒருவனை வாவென்றால் வருகிறான்; போ என்றால் போகிறான். ஆனால் வியாதியை போகச் சொல்ல முடியவில்லையே! இந்த அதிகாரம் இயேசுவிடம் தான் உண்டு. இயேசு என் வீட்டிற்கு வரவேண்டாம்; ஒரு வார்த்தை அவர் சொன்னாலே வியாதி ஓடிப்போம்." இதைக் கேட்ட இயேசு, "இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் காணவில்லை; நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக் கடவது" என்றார், அந்த நாழிகையிலேயே சுகம் கிடைத்தது (மத். 8: 6-13). இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டேயிருக்கலாம்; நேரமும் இடமும் போதாது. தேவனாகிய வார்த்தையை, வார்த்தையாகிய தேவனை விசுவாசித்து மேற்கண்டவர்கள் போல தைரியமாய் விசுவாச அறிக்கையிடும்போது அதுவே மருந்தாக மாறி வியாதியிலிருந்து விடுதலை கிடைக்கும்; இதற்காய் கோடிக்கணக்கில் செலவழிப்பதும் காலத்தை வீணடிப்பதும் கவலைப்படுவதும் வீண். இலவசமாய் மருந்திருக்க இன்னும் ஏன் அலைய வேண்டும்! விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாய் இருக்க வேண்டாமா? (தீத்து 1:14)

பாவிகளின் சொத்துதான் நீதிமானுக்கே ஒழிய, நீதிமான்களின் சொத்து பாவிகளுக்கு அல்ல (நீதி. 13:22). இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நீதிமான்களாக்கப்பட்ட (1 கொரி. 6:11; ரோ. 3: 23, 24) நாம் ஏன் இயேசுவை விசுவாசிக்காத பாவத்தை உடைய பாவிகளுக்கு (யோ. 16: 8, 9) நம்

பணத்தைக் கொடுக்க வேண்டும்? அப்படி கொடுத்தும் பல நேரங்களில் வியாதியிலிருந்து விடுதலை கிடைப்பதில்லை. அப்போது தேவசித்தம் என்று தேற்றிக் கொள்ளும் கிறிஸ்தவர்களும் உண்டு. எதுவய்யா தேவசித்தம்? வியாதியோடு மரிப்பதா? இயேசு சிலுவையிலே சுமந்தது, தீர்த்தது வியாதி இல்லையோ? வீணான மனுஷனே! நீ சுகமாயிருக்க வேண்டும் என்பது தான் தேவசித்தம். இதற்குரிய மருந்தை கொடுப்பவரும் அவரே! அதை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் உன் விருப்பம்! இன்றே தீர்மானி! விசுவாசமாகிய மருந்தை வசனத்தோடே எடுத்து பாவத்தாலும் சாபத்தாலும் பிசாசினாலும் வரும் வியாதிப் பொல்லாங்கை எதிர்ப்போம்; வெற்றி பெறுவோம்! இயேசுவின் வார்த்தை நமக்குள்ளே! (யோ. 15:7).

# 15. பவுலின் கண்ணைக் குருடாக்கியது தேவனா?

சவுல் தமஸ்குவுக்கு போகும் வழியில் இயேசு கிறிஸ்து சந்தித்த போது அவன் கண் குருடாகி விட்டது அல்லவா? சவுலைப் பவுலாய் மாற்றுவதற்காய் தேவன் தான் இப்படிப்பட்ட சிட்சைகளை கொடுத்தாரா? நம் தேவன் உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிறவர். சவுல் என்ன தான் கிறிஸ்தவர்களக்கு உபத்திவரம் கொடுத்தாலும் அவனைத் திருத்த நல்வழிப்படுத்த இப்படிப்பட்ட பொல்லாங்கான காரியத்தைச் செய்வாரா? சோதோம் கொமேராவை பாழக்கியவர் அது மனந்திரும்ப வேண்டும் என்றா? இல்லையே! சவுலுக்கு தண்டனை கொடுத்து ஒரேடியாக அழிக்காமல் (1 தீமோ. 5:24) அவன் மூலமாய் புறஜாதிகளுக்கு சுவிசேஷம் போக வேண்டும் என்று விரும்பியவர்தானே அவனை நேரில் சந்தித்தார்; அவனும் இவருடைய அழைப்பை ஏற்றான், மோசேயைப் போல மூன்று முறை மறுக்கவில்லை; யோனா போல மறுதலித்து வேறு கப்பலில் ஏறவில்லை. அப்படியிருக்க அவர் நிச்சயம் குருடாக்க மாட்டார். யாக். 1; 13; 17, அப். 10:38 போன்றவற்றை வாசியுங்கள். நன்மை செய்து வாழ வைப்பதே தேவ திட்டம். பவுல் கண் குருடான உடனே அவனை அனனியாவிடம் தேவன் அனுப்பி வைத்தற்கான இரண்டு காரணங்களில் ஒன்று:- சவுல் பார்வை அடைய வேண்டும் என்பதாகும் (அப்.9:17). தேவனின் அன்பைப் பாருங்கள்! அப்படியே அனனியா சவுலின் மேல் கைவைத்த உடனே அவன் பார்வை

அடைந்தான். (See மாற். 16:17). மனக்கண்களை குருடாக்குகிறான் பிசாசு (2 கொரி. 4:4). அப்படிப்பட்ட கண்களை திறக்கிறவர் தேவன் (ஆதி 21:19; லூக். 24:45, 31; யோபு 42:5) மனக் கண்களே குருடாயிருக்கக் கூடாது என்று எண்ணுகிறவர், சரீரக் கண்களைக் குருடாக்குவாரா? அப்படியானால் பவுலின் கண்கள் குருடானது எப்படி?

இதை அறியுமுன்னே தேவனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவர் சொன்னதைப் பாருங்கள்:- "நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை; அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை" (யோ. 5:27). தேவன் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறார் (God dwells in infinite glory which no man has ever seen nor can see); ஒருவரும் கண்டிராதவர்; காணக் கூடாதவர். இயேசுவும் இவரோடே இருப்பதால் இயேசுவின் நிலையும் அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் தேவனைக் கண்டவர்கள் சத்தத்தைக் கேட்டவர்களெல்லாம் அவரின் மகிமையில்லாத (Out of glory) நிலையில்தான் பார்த்திருக்க வேண்டும். மனிதக்கண்களால் காணும் நிலையில் மகிமையின்றி வெளிப்பட்டிருக்கிறார் என்று வேதம் பல இடங்களில் சொல்கின்றது. (ஆதி. 18:8; 32:24; யாத். 33:11; யோசு. 5:13-15; நியா. 6:11-13) மகிமையின் தேவன் காணக் கூடாதவர் என்று ரோ. 1:20; 1 தீமோ. 1:17; எபி. 11:27 போன்ற வசனங்கள் சொல்கின்றன. மகிமையின்றி வெளிப்பட்ட கர்த்தரை முகமுகமாய்க் கண்டு பேசிய மோசே (யாத். 33:11). "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" என்று யாத். 33:18ல் கேட்கிறான். அப்படிக் கேட்டும் கூட மகிமை நிறை தேவனை முழுமையாய் காணக்கூடாமல் பின் பக்கத்தை மாத்திரம் பார்த்துத்தான் என அறிகிறோம் (யாத். 33:20-23). ஆனால் பவுலை இயேசு கிறிஸ்து சந்தித்தது சேரக் கூடாத ஒளியில் வாசமாயிருந்த அதே நிலையில்தான். அப். 9:3ஐ வாசியுங்கள். சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. மகிமையின் தேவன் அவன் முன்னே வெளிப்பட்டார். சாலமோன் ஆலயப் பிரதிஷ்டை செய்யும்போது தேவனுடைய மகிமை ஆலயத்தை நிரப்பியதால் ஆசாரியர் நிற்கக் கூட முடியவில்லை என்று (2 நாளா. 7:3) அறிகிறோம். அப்படியே சவுலும் தரையிலே விழுந்தான். (அப். 9:3) ஆக சவுல் மகிமையுள்ள தேவனின் பிரசன்னத்தை முகமுகமாய் காண்கிறான்.

தேவன் இயேசுவின் மகிமையின் நிறைவிலே வெளிப்பட்ட போதே, பவுல் மெய்மறந்த நிலையிலேயே அவரைக் கண்டதாகச் சந்தோசமாய் சொல்கிறான். (அப். 9:17, 27; 22:14 1 கொரி. 9:1, 15:8) சாதாரண நமது

தொலைக்காட்சியையே அருகிலிருந்து தொடர்ந்து பார்த்தால் கண் பார்வை குறைந்து போகும் போது, சூரிய ஒளியையே கண்ணால் தொடர்ந்து பார்க்க முடியாத போது, சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணும் மகிமையின் தேவனை, ஒருவரும் காணக்கூடாத தேவனை நேரடியாய்க் கண்டால் என்ன ஆகும்? அப். 22:11ல் அவனே சொல்வதைப் பாருங்கள்:- "அந்த ஒளியின் மகிமையினாலே நான் பார்வையற்றுப் போனபடியால்." ஆக மகிமையின் பிரசன்னத்தை காண இந்தக் கண் போதாது! அதனால் தான் நாம் மறுரூபமாகித்தான் பிதாவின் சந்நிதானம் போகப் போகிறோம். அல்லேலூயா! பவுலின் கண் குருடானதைக் கண்டதேவன் மனதுருகி முதலில் அவன் கண் பார்வையடைய வழி வகுத்தார். அதற்குப் பின் தான் ஞானஸ்நானமெல்லாம்! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தேவன் முதலில் விரும்புவது நாம் செழிப்புள்ளவர்களாய் சுகமாய் வாழ வேண்டும் என்பது தான் (சங். 1). அதன் பின்புதான் இரட்சிப்பு. இந்த அடிப்படையில் தான் நாம் இராப்போஜனத்தில் சுகவாழ்விற்காய் இயேசுவின் சரீரம் பிய்க்கப்பட்டது போல முதலில் அப்பம் பிட்கிறோம்; அதன்பின் தான் நாம் பாவம் கழுவப்பட தேவ ரத்தம் சிந்தப்பட்டதற்கு அடையாளமாய் ரசத்தை அருந்துகிறோம்! என்னே தேவனின் பேரன்பு!

## 16. வியாதி ஏன் விலக மறுக்கிறது?

இன்றைக்கு கிறிஸ்தவ வட்டாரத்தில் உள்ள பெரும்பாலான ஊழியர்களும், விசுவாசிகளும் வியாதியால் வாடுகின்றனர். பலர் மரித்தும் போகின்றனர். காரணம் என்ன? வியாதி என்ற உடனே எசேக்கியா ராஜாவைக் காட்டுவார்கள்; அவன் அழுதான்; தேவன் வியாதியை நீக்கினார். நீயும் அழுது முறையிடு என்பார்கள். சொல்கிற ஊழியரும் அழுது முறையிடுகிறார். "விடுதலை இல்லை. வியாதி விலக மறுக்கிறது. குருடனுக்கு பார்வை தர உமிழ்ந்து சேறுண்டாக்கி அவன் கண்ணிலே பூசினாரே. எனவே மருந்து மாத்திரைகள் சாப்பிடலாம். டாக்டரிடமும் போகலாம்" என்று பலர் முடிவெடுத்து அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குப் போய் பெரிய ஆபரேஷன் செய்து வருகின்றனர். அதன் பின்னும் வியாதி இருந்தால் "இது தேவன் வியாதியைக் கொடுத்து சிட்சிக்கிறார்; இந்த வியாதியிலேயே மரித்தாலும் பரவாயில்லை; பவுலுக்கு வியாதியிலிருந்து விடுதலை இல்லையல்லவா! யோபுவுக்கு வியாதி கொடுத்தவர் நம் தேவன் தானே"

என்று சொல்லித் தேற்றிக் கொள்கின்றனர். ஆனாலும் வியாதி அவர்களை விட்டு விலகிய பாடில்லை; இருந்தாலும் இந்த வியாதி நீங்க வேண்டுமென்று பார்க்கின்ற ஊழியரிடமெல்லாம் ஜெபிக்க வேண்டுமென்று விசுவாசிகள் தலையைக் கொடுக்கிறார்கள். "தேவனுடைய இந்த சிட்சையை அற்பமாய் எண்ணக்கூடாது" என்று வாயளவில் முழக்கம். ஆனால் உள்ளத்திலோ இந்த வியாதிக்கு எதிரிடையான எண்ணம்; ஏக்கம்; ஏன் இந்த நிலை? ஆசீர்வாத இயக்க தலைவர் ஸ்டான்லி போல ஒரு சில ஊழியர் தேவனால் தீர்க்கக்கூடாத வியாதிகளும் உண்டு என்று சொல்லி தங்களையே சந்தோசப்படுத்திக் கொள்கின்றனர்.

அமெரிக்க ஊழியர் கென்னத் ஹெகின் அவர்களுக்கு ஒரு பெரிய வியாதி இருந்தது. அவரோ தெய்வீக சுகத்தைப் பற்றி பிரசங்கிக்கிறவர். ஒருமுறை டாக்டர் அவரை பரிசோதித்து விட்டு வியாதியின் கொடுமை நிலைமையை விளக்கினார். இவரோ நான் இயேசுவின் தழும்புகளால் சுகமானேன் என்று அறிக்கையிட்டுவிட்டு மறுபடியும் பரிசோதிக்க சொல்கிறார். மறுபடியும் வியாதியின் தன்மையிருப்பதை டாக்டர் உறுதிப்படுத்தினார். ஊழியரோ விட்ட பாடில்லை. மறுபடியும் விசுவாசத்தோடு அறிக்கை யிட்டவராய் பரிசோதிக்க சொன்னார். டாக்டர் இதைக் கேட்டு சிரித்து விட்டார் ஊழியரோ விட்ட பாடில்லை. ஊழியரின் விடாப்பிடியால் டாக்டர் சோதித்தார். என்ன ஆச்சரியம்? அவருடைய வியாதிக்கிருமி ஒன்று கூட இல்லை. ஜஸ்டின் பிரபாகரன் என்ற ஒரு ஊழியர் சென்னையில் தெய்வீக ஆரோக்கியம் பற்றி போதித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பயங்கரமான வியாதி வந்தது. அப்போது அவரைப் பார்க்க வந்தவர்களிடம் நான் வியாதியில் சாகும் தருவாயில் இருப்பதால், நான் போதித்த தெய்வீக ஆரோக்கிய உபதேசம் பொய்யல்ல என்றாராம். என்னே அவரது வசன விசுவாச அறிக்கை! சகோ. பெர்க்மான்ஸ் அவர்களுக்கு 30 வயதில் ஒரு பெரும் வியாதி. விசுவாசித்தார்; வியாதி விலகிப் போயிற்று. பால்யாங்கி சோவுக்கும் டிபி வியாதி. விசுவாசித்தார்; விலகிப் போயிற்று, எனக்கும் மூளை உடைந்து விட்டது (Fracture). விசுவாசித்தேன் வியாதி விலகியது. ஏன் பலருக்கு இன்னும் விலகவில்லை? இவர்கள் மூலமாய் எத்தனையோ பேர்கள் சுகமாகிறார்கள். ஆனால் இவர்களோ வியாதியிலே நித்தமும் சாகிறார்கள் ஏன்? பழைய உடன்படிக்கைக்கும் புதுஉடன்படிக்கைக்கும் வித்தியாசம் இன்னும் பலருக்கு முழுமையாய் தெரியவில்லை. உடன்படிக்கை என்றாலே இருவர் வேண்டும்; இருவருக்கும் இடையே ஒப்பந்தப் பத்திரம் வேண்டும் இருவரும் கையெழுத்திட வேண்டும். பழைய உடன்படிக்கை சீனாய் மலையில் இஸ்ரேல் மக்களுக்காய் நின்ற மோசேக்கும் தேவனுக்கும்

இடையே நடந்தது. இருவரும் ஆட்டுக் குட்டியின் ரத்தத்தால் கையொப்ப அடையாளமாய் அங்கீகரித்தனர். ஒப்பந்த ஷரத்து என்ன? அது தான் 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணங்கள். இந்தப் பிரமாணங்களின் படி நடந்தால் தேவனின் ஆசீர்வாதம் முழுவதும் இஸ்ரவேலருக்கு உண்டு. இஸ்ரவேலர்கள் யாத். 19ல் உறுதியிட்டு அறிக்கையிட்டது போல பிரமாணங்களை அவர்கள் கைக்கொள்ளவில்லை. இதனால் ஆசீர்வாதத்தை இழந்து சொர்க்கத்தையும் இழக்க நேர்ந்தது. ஆனாலும் மனுக்குலத்தின் அன்புள்ள தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் புது உடன் படிக்கையை உண்டாக்கினார். மனுக்குலம் பக்கம் இயேசுவும், மறுபக்கம் தேவனும் இருந்து விலையேற்றப்பட்ட இயேசுவின் இரத்தத்தால் கையொப்ப அடையாளமிட்டு அங்கீகரித்தனர். புதிய ஒப்பந்த ஷரத்து என்ன? பழைய ஒப்பந்தத்தை மாற்றம் பண்ணி (Modify) தற்காலத்திற்கு ஏற்றாற் போல செய்யவில்லை. புது ஒப்பந்தம் பழையதின் மறுமலர்ச்சி அல்ல. இது புத்தம் புதிய ஒப்பந்தம். இது கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாய் இருக்கும் (1 கொரி. 1:18) நமக்கோ தேவபெலன். இந்த ஒப்பந்தத்தில் உள்ளவைகளை விசுவாசித்தாலே ஆசீர்வாதம். ஏனெனில் இதன் கையொப்பமே இயேசுவின் இரத்தம். இதிலே வியாதியைப் பற்றி என்ன உள்ளது?

ஏசா. 53ல் சொல்லப்பட்ட தீர்க்தரிசன நிறைவேறுதல் இதிலே எழுதப்பட்டுள்ளது (மத். 8 17); அவருடைய தழும்புகளால் சிலுவையிலே எல்லா வியாதிகளையும் சுகமாக்கி விட்டார் (1 பேதுரு 2:24); அதிலும் ஒரு படிமேலாக நம் ஆத்மா வசனத்தால் புது உடன்படிக்கையின் ஷரத்தால் தினந்தோறும் மறுரூபமாகி வாழ்ந்தால் சுகமாயிருப்போம் (3 யோ. 2) எல்லாவற்றிற்கும் மேலாக வியாதி உன் சரீரத்தை அணுகாது என்ற தீர்க்க தரிசன வார்த்தை சிலுவை மரணத்தில் வெளிப்படுத்திய ஒப்பந்தத்தில் இருக்கிறது. (சங். 91:10) பிசாசானவனே வசனத்தை திருடவும் கொல்லவும் அழிக்கவும் இருக்கிறான். இயேசுவின் ஒப்பந்தமோ நமக்கு ஜீவனையும் - பரிபூரண ஜீவனையும் தருகிறது. எனவே புது ஒப்பந்தப்படி அவர் வியாதியை கொடுக்கவோ அனுமதிக்கவோ மாட்டார். மரணத்தின் அதிபதியை (எபி. 2: 13;14) அவர் புது ஒப்பந்தத்தில் ஒழித்துக் கட்டியதால் நமக்கு மரண பயமில்லை. வியாதி சிட்சையல்ல என்று புதிய ஒப்பந்தம் அறிவிக்கிறது. ஆவியாகிய தேவன் நம் ஆவியில்தான் வார்த்தைகளைக் கொண்டு சிட்சித்து பரிசுத்தப்படுத்துவார் என்று ஒப்பந்தம் கூறுகிறது (எபி. 1: 8,9; யோ. 15:3; 17: 17; சங். 105: 9; 2 தீமோ. 3: 16, 17). பொல்லாங்கனாகிய பிசாசின் கிரியைகளை அழிக்க அவர் வந்தார் என்று ஒப்பந்தம் சொல்கிறபடியால் (1 யோ. : 3:8) பொல்லாங்கினால் தேவன் ஒருக்காலும் புது உடன்படிக்கைக்கு

உட்பட்ட பிள்ளைகளை சோதிக்கவே மாட்டார் (யாக். 1:13). புதிய ஏற்பாட்டுப் பிள்ளைகளுக்கு வியாதியே வரக்கூடாது என்பது தான் புதிய ஒப்பந்தத்தின் அடிப்படை ஷரத்து என்றாலும் (ஏசா. 33:24) அந்த ஷரத்துகளை விசுவாசிக்கையில் விசுவாசக் குறைவு ஏற்படும் போது வியாதி வந்தால் தீமோத்தேயு, துரோப்பீமு போன்றோருக்கு வியாதி வந்ததே என்று எண்ணாமல், விசுவாச ஓட்டத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கியே ஓட வேண்டாமா? (எபி. 12:1) அவர் வியாதிப்பட்டாரா? அவர் தானே வழி! (பவுலுக்கு மாமிசத்திலே வந்த முள் வியாதி அல்ல என்று முன்பேயே நான் எழுதியிருக்கிறேன்.) வியாதி சம்பந்தமான காரியத்தில் நம் விசுவாசம் பிள்ளைகளைப் போல அற்பமாய் இருக்கக் கூடாது. விசுவாசத்தில் பிதாக்களாய் இருக்க வேண்டும். (1 யோ. 2: 13, 14). இதற்கு தான் புதிய ஏற்பாட்டு ஷரத்தை அறிந்து விசுவாசிக்க வேண்டும். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இந்த ஷரத்து எந்த அதிகாரத்தில் இருக்கிறது என்று கேட்கிறயா? இயேசு கிறிஸ்து மற்றும் அப்போஸ்தல உபதேசத்தில் இது வெட்ட வெளிச்சமாய் காணப்படுகிறது (மத். 28:20; ரோ. 6:17; யூதா 17). அதனால்தான் நிறையப் பேர் இந்த ஷரத்தை அறிந்தோ அறியாமலோ அப்போஸ்தல சபை என்ற தலைப்புகளில் தங்கள் சபைகளுக்கு பெயர் வைக்கிறார்கள். ஆனால் பெயருக்கு எற்றபடி நிலை நிற்பதில்லை. குண்டு மணி என்ற பெயருள்ளவன் ஒல்லியாகவும், வெள்ளைச்சாமி கருப்பாகவும், அன்பழகன் அன்பில்லாமலும் அழகர் அசிங்கமாகவும் ராஜா பிச்சைக்காரனாகவும் இருப்பதுபோல.

இயேசு கிறிஸ்து சொன்னார்:- "எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொன்னால், தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் (இரட்சிக்கப்பட்ட ஆவியில்) சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற். 11:23) மலையே பெயர்ந்து போகுமென்றால் வியாதி ஏன் விலக மறுக்கிறது? புது உடன்படிக்கையின் ஒப்பந்தத்தைப் பற்றிய, சந்தேகமில்லாத விசுவாசம் இல்லாததால் தான். சர். ஐசக் நியூட்டன் இந்த வசனப்படி ஆப்பிள் மரத்தில் கீழிருந்து கொண்டு 'ஆப்பிள் பழமே விழு' என்று விசுவாசத்தோடே சொல்லி வந்தான். ஒரு நாள் அவன் விசுவாசித்து சொன்னபடியே விழுந்தது. இது தான் விசுவாச வல்லமை. நம் விசுவாச வல்லமையினால் எல்லாம் கூடும். தேவனையே இழுக்க முடியும் நம் பக்கம். நூற்றுக்கதிபதி சொல்கிறான்:- "நான் ஒருவனைப் போவென்றால் போகிறான்; வா என்றால் வருகிறான் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்" (மத். 8:8,9) இதன் பொருள் என்ன? தேவ

வார்த்தையினால் மட்டுமே கூடும் என்று விசுவாசித்தான். வியாதி உன்னை விட்டு விலகி விட்டது; ஒரு வேளை திருமணப் பந்தலில் வெட்டப்பட்ட வாழை மரத்தின் இலை காய்வது போல வெளியரங்காய் உனக்கும் ஊராருக்கும் தெரிவதற்கு ஒரு சில நாட்கள் ஆகலாம். அதனால் ஒப்பந்த வார்த்தைகளை விசுவாசித்து அறிக்கை இடுவதில் கொஞ்சமும் தளர்ந்து போகாதே! வியாதியில் இருக்கும் போதே இயேசுவின் தழும்புகளால் சுகமானேன் என்று இறந்த காலத்தில் விசுவாசத்தோடு சொல்லு. வியாதி விலகி ஓடியே போகும்! புதிய ஏற்பாட்டு ஷரத்தை தினம் தினமும் விசுவாசித்து அறிக்கையிடுங்கள்! என்றும் சுகமே!

# 17. எல்லா நோய்களையும் நீக்குவேன் என்றவர் எலிசா போன்றோரின் வியாதியை ஏன் நீக்கவில்லை?

உபா. 7:15 ஐ வாசித்தால் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவேன் என்று தேவன் சொல்லியிருப்பது தெரியும். இது தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் (promise) என்று பலர் நினைக்கின்றனர்; தவறு. உபா. 7:11-15 வசனங்களை வாசியுங்கள். இது வாக்குத்தத்தம் அல்ல; ஆசீர்வாதம். ஆசீர்வாதம் என்பது Conditional. நாம் எந்த பணியையும் தேவன் முடிக்கச் சொன்னபடி முடித்துக் கொடுத்தால் அவர் சொன்னபடியே ஆசீர்வதிப்பார். இல்லையேல் ஆசீர்வாதம் கிடைக்காது. பதிலாக சாபம் தான் கிடைக்கும். வாக்குத்தத்தம் என்றால் நாம் கீழ்ப்படிந்து அவர் சொன்னபடி செய்தாலும் செய்யா விட்டாலும் அவர் கண்டிப்பாய் சொன்னதை செய்வார். உபா. 7ல் தேவனின் நியாயப் பிரமாணங்களை கைக்கொண்டால் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார். இல்லையேல் வியாதி தொடரும்; முடிவு மரணமாயிருக்கலாம். ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் நம் முன்னே தேவன் வைத்து சில நிபந்தனைகளோடு அவைகளைப் பெற வைக்கிறார். நிபந்தனைப்படி நாம் செயல்படவில்லையேல் வியாதி போன்ற பொல்லாத சாபங்கள் வந்து சேரும். மரணத்துக்கேதுவான வியாதி எலிசாவுக்கு எப்படி வந்தது? ஏன் மரிக்க வேண்டும்? (2 ராஜா. 13:14, 20). இது பலருடைய கேள்வி. மேலே சொல்லப்பட்டதை மறுபடியும் தியானித்தால் எலிசா தெய்வீக ஆரோக்கியத்தோடு இருக்க (3 யோ. 2) தெய்வீக சுகம்

பெற ஏதோ ஒரு நிபந்தனையில் குறை இருந்திருக்கலாம். நம்மிடம் குற்றம் வைத்துக் கொண்டு தேவன் பேரில் குறை கண்டுபிடிப்பது பெருந்தவறு.

புதிய ஏற்பாட்டிலும் ஆசீர்வாதம் பெற அதே சட்டம் தான். இங்கும் நிபந்தனைகள் உண்டு. அங்கே விசுவாசத்தோடு கூடிய நியாயப்பிரமாணக் கிரியையாகிய நிபந்தனை; இங்கோ விசுவாசத்தோடு கூடிய, இயேசு மற்றும் அப்போஸ்தல உபதேசக் கிரியையாகிய நிபந்தனை. அன்றும் இன்றும், என்றும் விசுவாசத்தினாலே வியாதியினின்று விடுதலை உண்டு (லூக். 8:48; 1 பேதுரு 2 : 24); வசன விசுவாசத்தாலே ஆத்மா வாழ்கிறது; ஆத்மா வாழ்வதாலே தெய்வீக சுகத்தோடு இருக்கிறோம். வாதை அணுகுவதில்லை (3 யோ. 2; சங். 91:10). எனவே வியாதியிலிருந்து விடுதலை என்பது வாக்குத்தத்தம் அல்ல என்றும்; அது ஆசீர்வாதம் என்றும், அதை தேவனே தரும் நிபந்தனையோடு நாமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும், வியாதியில் மரிக்க தேவன் விரும்பாமல் நம்மிடமே திறவுகோலை தந்து (மத். 18:18; 16:19) ஜெயம் பெறச் சொல்கிறார் என்றும் முந்தி அறிவோமாக!

# 18. வியாதியைப் பற்றி இன்னும் விளக்கம்

"வியாதியை தேவன் கொடுப்பதில்லை; பிசாசுதான் கொடுக்கிறான்" என்றும் (யோ. 10:10 ; யோபு 2:7) "தேவன் அவ்வப்போது வியாதியை அனுமதிப்பதில்லை. உலகத் தோற்றத்திற்கு முன்னமேயே பிசாசுக்கு அனுமதி கொடுத்தாயிற்று" என்றும், "நம் எல்லோருடைய நோய்களையும் சிலுவையிலே சமந்து தீர்த்த இயேசு மறுபடியும் அதை நமக்கு கொடுத்தால் அவர் சிலுவையிலே சுமந்தது வீண்" என்றும், "தேவன், வியாதி, தோல்வி, மரணம், வறுமை, போன்ற பொல்லாங்கான காரியங்களால் சிட்சித்து சோதித்து புத்தி புகட்ட மாட்டார்; வசனத்தாலே தான் சுத்தமாக்கி வழி நடத்துவார்" என்றும் (யாக். 1:13; 1 யோ. 3:8; யோ. 15:2,3; 17:17) "வாதை நம் கூடாரத்தை அணுகக் கூடாது. நம் ஆத்மா வாழ்வது போலவே நாமும் வியாதியின்றி தெய்வீக ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டும் என்பது தான் தேவசித்தம்" என்றும் (சங். 91:10; 3 யோ. 2 in English). "இயேசுவின் தழும்புகளால் எல்லா வியாதிகளும் குணமாயின. தேவனால் தீர்க்க முடியாத வியாதிகள் ஒன்றுமே இல்லை; எனவே எந்த ஒரு தேவ பிள்ளையும்

வியாதியால் மரிக்கக் கூடாது. தேவன் நீதிமான்களின் மரணத்தில் பிரியமாயிருக்கிறார் என்றால் வியாதியில் மரிப்பதிலே நிச்சயம் அல்ல" என்றும் இது வரை நான் திட்டமும் தெளிவுமாக எழுதி இருக்கிறேன். ஆனாலும் ஒரு சிலர் கண்கள் திறக்கப்பட, இன்னும் விளக்கங்களை எழுதலாம் என்ற ஆவியானவரின் தூண்டுதலோடு இதை எழுதுகிறேன். தேவன் தாமே வெளிச்சமாயிருந்து எல்லோருடைய மனக் கண்களையும் பிரகாசமாக்குவாராக! (எபே. 1:19)

உபவாசம் இருப்பதினாலே உடல் பலவீனப்பட்டு வியாதி வரலாம் என்று ஒருவர் கருதுகிறார். அப்படியானால் ஏன் உபவாசம் இருக்க வேண்டும்? தேவையில்லையே! மோசே 40 நாள் சீனாய் மலையிலே அப்பம் புசியாமலும் தண்ணீர் குடிக்காமலும் இருந்தானே அவன் உடல் பலவீனப்பட்டதா? அவனுக்கு அதனால் வியாதி வந்ததா? அவன் சீனாய் மலையிலிருந்து இறங்கி வரும் போது முகம் பிரகாசமாய் இருந்தது என்றல்லவா வேதம் சொல்கின்றது. தற்காலத்தில் தண்ணீர் கூட குடிக்காமல் உபவாசம் 40 நாளுக்கு இருப்போர் யார்? ஜூஸ், ஹார்லிக்ஸ், தேநீர் என்று அடிக்கடி குடிக்கிறார்களே! மோசே போல 40 நாள் அப்படி இருப்பது விஞ்ஞானிகளே ஏற்றுக் கொள்ள முடியாத இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்று. அதிலேயே அவன் பலவீனப்படவில்லையே! இயேசுவும் அப்படியே 40 நாள் உபவாசம் இருந்தாரே வியாதிப்பட்டாரா? உபவாசம் இருப்பது எதற்கு? மாமிசத்தை குறைத்து ஆவியை உயர்த்தி தேவ ஆவியோடு தொடர்பு கொண்டு தேவ இரகசியங்களையும் தேவ வல்லமையையும் பெற்றுக் கொண்ட வல்லமை உள்ள ஆவியினாலே ஆத்மாவையும் சரீரத்தையும் கட்டுப்பாட்டுக்குள் வசனத்தின் படி கொண்டு வந்து ஆவிக்குரிய கிறிஸ்தவனாய் வெற்றி வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காகத் தானே! இப்படி ஆவியும் ஆத்மாவும் புஷ்டியோடு வாழும் போது வியாதி எப்படி சரீரத்திற்கு வரும்?

அக்கினி அபிஷேகம் பெறுவதினாலும் வியாதி வரலாம் என்று சொல்கிறார்கள். தானியேலுக்கு தேவன் சொப்பனங்களை கொடுத்ததால் அவன் சுகவீன மானான் என்று இதற்கு ஆதாரமாய் காட்டுகிறார்கள். அக்கினி அபிஷேகத்தால்வியாதி வருமென்றால் அதை ஏன் வாஞ்சிக்கிறீர்கள்? தானியேல் கண்ட தரிசனத்திற்கு கேட்ட விளக்கத்தினால் அவன் சோர்வடைந்தான்; வருங்காரியங்களைக் குறித்து கவலையுற்றான்; பயந்தான். அதனாலேயே தான் அவன் வியாதிப் பட்டானே ஒழிய அக்கினி அபிஷேகத்தால் அல்ல (தானி. 8:26, 27) Fear is the reverse gear of faith.

பயமே சுகவீனம் (தானி. 10; 16; யோபு 2;25) பெந்தகொஸ்தே நாளிலே 120 பேர் ஆவியினாலும் அக்கினியினாலும் அபிஷேகம் பண்ணப்பட்டார்களே அவர்கள் அதனால் வியாதிப்பட்டார்களா? யோசேப்பு சொப்பனங் கண்டதால் வியாதிப்பட்டானா? வசனத்துக்கு விரோதமாய் சாத்தான் தூண்டிவிடும் உபாய தந்திரம் இது. எலிசா முதிர் வயதானதால் அவனுக்கு வியாதி வந்தது என்று வாதிடுவோரும் உண்டு. அப்படியானால் சங். 91 : 10 ; 3 யோ. 2 ; போன்ற வசனங்களெல்லாம் வாலிபர்களுக்குத்தானா? முதியோர்களுக்கு இல்லையா? வசனங்களை விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்பது முதியோர்களுக்கு பொருந்தாததா? ஆபிரகாம் நல்ல நரை வயதிலும் முதிர்ந்த பூரண ஆயுசிலும் மரித்தானே அவனுக்கு முதிர் வயதில் வியாதி வந்ததா? (ஆதி. 25:7,8) விசுவாச மார்க்கத்தின் தகப்பன் விசுவாசத்தோடே வாழ்ந்திருக்கிறான்; அதனால் தான் வியாதி அணுகவில்லை. அல்லேலூயா! முதிர் வயதில் வியாதிப்பட்ட தேவ மனுஷர்களைப் பார்த்து நீங்களும் திருப்திப்பட்டுக் கொண்டால், உன் விசுவாசப்படியே தான் உனக்கு ஆகும் என்ற வசனம் உன்னிலே பலிக்கும். எனவே வாயின் வார்த்தைகளை காவல் வையுங்கள். பிசாசு ஜெயமெடுக்க இடங்கொடாதிருங்கள்.

**ஒரு சகோதரி எழுதியிருக்கிறார்கள்:-** "ஏமிகார் மைக்கேல், Fr. அகஸ்டீன் போன்றோர் வியாதியிலிருந்து கொண்டே ஊழியம் செய்தார்கள். சமீபத்தில் பெரியகுளம் Dr. யோபு, Bro. வின்சென்ட்ராஜ் ஆகியோரும் வியாதிப் படுக்கையிலே ஊழியம் செய்கிறார்களே! மதுரையில் சகோ. சாமுவேல் ராஜ்குமார் வீல்சேரில் அமர்ந்தபடி ஊழியம் செய்கிறாரே! அப்படியிருக்க விசுவாசிகளாகிய நாம் எம்மாத்திரம்" என்று. இவர்கள் இப்படி வியாதிப்பட்டார்கள் என்பதால் நாமும் அப்படித் தான் வியாதிப்பட வேண்டுமா? அது தான் தேவ சித்தமா? மேகம் போன்ற திரளான சாட்சிகள் இருந்தும் உங்கள் விசுவாச ஓட்டத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கியே ஓடக் கடவோம் (எபி. 12 ;1). ஆட்களைப் பாராதீர்! ஆண்டவனைப் பாருங்கள்! நாம் வியாதியின்றி தெய்வீக ஆரோக்கியத்தோடு (Divine Health) வாழவேண்டும் என்பது தான் தேவசித்தம். இதற்கு ஒப்புக் கொடுப்போம்; ஆரோக்கியமாய் வாழ்வோம்! ஆமென். யோபுவை சோதிக்க தேவன் அனுமதிக்கவில்லை என்று நான் பல முறை எழுதியும் இன்னும் பலர் அதே பல்லவியைத்தான் பாடிக் கொண்டிருக்கின்றனர். **பாரம்பரிய சபைக் கருத்துக்கள் இதயத்திலே பதிந்திருக்கும் வரை வியாதியைப் பற்றிய விளக்கம் புரியாது.** பழைய கொள்கைகளை ஒதுக்கி வைத்து விட்டு வேத வசனங்களை தியானிப்போம். ஆவியானவர் வெளிப்படுத்துவார்.

யோபு சொன்ன வார்த்தைகள் எல்லாவற்றையுமே தேவ வார்த்தை என்று நம்பாதீர்கள். யோபுவே சொல்கிறான் "நான் எனக்குத் தெரியாததையும் என் புத்திக்கு எட்டாததையும் நான் அறியாததையும் அலப்பினேன்" (யோபு 42:3) அப்படியிருக்க யோபு 5:18 ஐ எப்படி நம்ப முடிகிறது? தேவனே நம்மை காயப்படுத்தி அழவைத்து பின் நம் வேண்டுதலினாலே அவரே வந்து காயங்கட்டுகிறார் என்றால் தேவன் செய்கிறது நாரதர் வேலையா? அவர் நல்ல சமாரியன் அல்லவா? நல்ல சமாரியன் காயப்படுத்துவாரா? திருடவும் கொல்லவும் அழிக்கவும் அலைபவன் பிசாசு தானே! அறியாமையினாலே யோபு சொன்னதை நம்பி, நம்மவர்களும் சாத்தானின் வேலையை தேவனின் பணி என்று சொல்வது எவ்வளவு மூடத்தனம்; தேவ துரோகம். நம் இயேசு ஜீவன் தரவே வந்தார். அல்லேலூயா! யாக். 1:13, 17 போன்ற வசனங்களை விசுவாசித்தால், தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்ற யோபுவின் அறியாத வார்த்தைகளை (யோபு 2:10) நாம் நம்ப மாட்டோம்; நம்பி விசுவாசிக்க மாட்டோம்; தவறான விசுவாசத்தால் வியாதிப்பட்டு மரிக்க மாட்டோம். இயேசு கற்றுக் கொடுத்த ஜெபத்திலே "உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்கிறாரே, யோபுவின் 2:10 வார்த்தையை விசுவாசிக்கிற நீ பரலோகத்தில் தீமை உண்டென்று எண்ணுகிறாயோ? தீமை தேவனிடமிருந்தா வருகிறது? அப்படியானால் பிசாசின் வேலைதான் என்ன? பிசாசின் பணியை தேவன் செய்கிறார் என்று தவறாய்ச் சொல்லாதீர்கள். உங்களின் தவறான சிந்தனை தவறானா விசுவாசத்தை தருகிறது. தவறான விசுவாசம் தவறான அறிக்கையை தருகிறது; தவறான அறிக்கையால் எல்லாம் தவறாகவே நடக்கின்றன. மனிதனாய்ப் பிறந்த இயேசு நன்மை செய்தவராகவே சுற்றித் திரிந்தாரே (அப். 10:38) உங்களுக்குப் புரியவில்லையா? எங்காவது அவர் தீமை செய்தாரா? சிலுவையில் மரிக்கும் போது கூட போர் வீரனுக்கு கண் பார்வை தந்தவராயிற்றே! அவிசுவாச வார்த்தைகளை விட்டு விடுங்கள்! யோபுவுக்குப் போல் மனக் கண் திறக்கப்பட்டு வேதத்தை தியானியுங்கள் (யோபு 42:5). வியாதி தேவனுடைய பிள்ளைகளுக்கு வராது; தேவன் அனுமதிப்பதும் கிடையாது. என்றுமே தெய்வீக ஆரோக்கியம் தான். பரலோகத்தில் இருப்பது போல ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்துக்குள் வந்த நாம் வியாதியின்றியே இருப்போம். பரலோக நகரவாசிகள் நான் வியாதிப்பட்டேன் என்று சொல்வதில்லை (ஏசா. 33:24) ஆமென். நீதிமானின் சரீரம் தேவனுடைய ஆலயம் (1 கொரி. 6:19); இதை ஒருவன் கெடுத்தால் அவனை தேவன் கொடுப்பார். கெடுப்பவன் யார்? தேவனா? அல்லவே அல்ல. கெடுப்பவன் பிசாசு என்று முந்தி அறியுங்கள். அல்லேலூயா!

# 19. தேவன் நம்மைப் புடமிடுகிறாரா?

புடமிடுதல் என்றால் அழுக்குகளையும் தேவை இல்லாதவைகளையும் அகற்றி மெருகேற்றுதல்; பிரகாசிக்க வைத்தல்; அழகூட்டுதல் என்று பொருள். வெள்ளியையும் பொன்னையும் அக்கினியினால் புடமிடுகிறாரா? எப்படிப் புடமிடுகிறார்? இந்தக் கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக!

ஏசா. 60 : 1 ன் படி நாம் மகிமையோடு பிரகாசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதனால்தான் எல்லா மனுஷரையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாய் அவர் உலகத்திற்கு வந்தார். (யோ. 1:9) தேவன் நம்மை இந்த நிலைக்கு உயர்த்தவே புடமிடுகிறார். புடமிடுதல் என்ற உடனே பலருடைய எண்ணம் அவர் நமக்கு வியாதி, வறுமை, தோல்வி போன்ற உபத்திரவங்களைக் கொடுத்து சிட்சித்து நல்வழிப்படுத்துகிறார் என்று எண்ணுகிறார்கள். சங். 119; 71ஐ வைத்துக் கொண்டு பலர் உபத்திரவங்களை தேவன் கொடுத்து பிரமாணங்களை, தேவனுடைய வார்த்தையை உணர வைக்கிறார் என நினைக்கிறார்க்ள. சங். 119:67 ஐ வாசியுங்கள். தேவனுடைய வார்த்தையைக் காத்து நடக்காததால் தான், வழி தப்பி நடந்து உபத்திரவப்பட்டான் தாவீது. இது தேவன் கொடுப்பதல்ல. யாக். 1:13; ன்படி பொல்லாங்கினால் தேவன் யாரையும் சோதிக்க மாட்டார். நன்மை செய்வதே அவர் சாயல் (எபே. 2:10 ; அப். 10:38) பொல்லாங்கான காரியங்கள் எல்லாமே பிசாசின் கிரியைகள் (யோ. 10:10) இவைகளை சிலுவை மரணத்தால் அழித்த தேவன் எப்படி மறுபடியும் அவைகளை கொடுப்பார் (1 யோ. 3, 8) "உலகத்தில் உபத்திரவங்கள் உண்டு; திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்" என்ற யோ. 16:33 நம் காதில் ஒலிக்கிறதா? உலகத்தை பிசாசின் பொல்லாத கிரியைகளை ஜெயித்தவர் நம் தேவன் இயேசு! இதை விசுவாசித்தால் நாமும் ஜெயம் பெறுவோம் (1 கொரி. 5:57; ரோ. 8:37; ஐ யோ. 5:4) பொல்லாத காரியங்களால் தேவன் புடமிடுவதில்லை; சிட்சிப்பதில்லை என்றால் அவரின் புடமிடுதல் தான் என்ன?

மல். 3:3 ஐ வாசித்தால் கர்த்தருடையவர்களாயிருக்கும் படிக்கும் நீதியாய் காணிக்கையை செலுத்தும்படிக்கும் அவர் புடமிடுகிறார் என அறிகிறோம். நீதி. 17:3; 27: 21; சங். 26 : 2 போன்ற வசனங்களை வாசித்தால் அவர் இருதயத்தை புடமிடுகிறார் என அறிகிறோம். இருதயம் என்றால் மாம்ச இருதயமல்ல; மனிதனுடைய ஆவி (1 பேதுரு 3:4) மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் என்ற மூன்றும் இருந்தும் (1 தெச. 5:23). அவர் ஆவியிலே மாத்திரமே புடமிடுகிறார். ஆவியிலே அனலாய், ஒளியாய், ஜீவனோடு

இருந்தால் மாத்திரமே அந்த ஆவி, ஆத்மாவையும் சரீரத்தையும் அடக்கி ஆள முடியும் (சங். 103:1-3) க்கான விளக்கத்தை ஆசிரியரின் கருகலான சத்தியம் என்ற புத்தகத்தில் வாசியுங்கள்) இந்த ஆவி பரிசுத்த ஆவியினால் வசனத்தைக் கொண்டு நடத்தப்படுகிறது. தேவ வசனம் ஆவியில் எழுதப்படுகிறது. (எபி. 8:10) இந்த ஆவியில் எழுதப்பட்ட வார்த்தைப் படி ஆத்மாவையும் சரீரத்தையும் நடத்துபவனே ஆவிக்குரியவன். வெறுமனே "என் ஆத்மாவே! கர்த்தரை தோத்தரி" என்று ஆவியில் ஜெபித்தால் மட்டும் போதாது. இப்படிப்பட்ட அதிகார ஜெபத்தை, புடமிடப்பட்ட ஆவியே செய்யும் (சங். 103) இப்படி சொல்ல வைக்கவே இருதயமாகிய ஆவியை தேவன் புடமிடுகிறார். "சோதிக்கிறார்" என்று தமிழில் மொழி பெயர்த்தது தவறு. Tempt அல்ல Test என்று மூல பாஷையில் இருக்கிறது. ஆவியிலே தேவன் பரீட்சை பார்க்கிறார். ஆவியிலே புடமிடுதல் எப்படி என்று பார்ப்போம்.

சங். 105 : 17 - 19 ஐ வாசியுங்கள், யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் சிறையாக விற்கப்பட்டான். கர்த்தர் அவனுக்கு தரிசனங்கள். சொப்பனங்கள் மூலம் சொல்லப்பட்ட வசனங்களெல்லாம் நிறைவேறுமாவும் அவருடைய வசனமே அவனைப் புடமிட்டது. பெந்தகொஸ்தே நாளிலே பேதுரு பிரசங்கித்தபோது அதைக் கேட்டவர்கள் இருதயம் குத்தப்பட்டதாம் (அப். 2:37). இது தான் ஆவியில் வசனத்தின் புடமிடுதல். உடனே அவர்கள் இரட்சிப்புக்கு ஒப்புக் கொடுத்தார்கள். அவர்கள் இருதயம் புடமிடப்பட்டது. ஆரம்பத்திலே மட்டும் ஆவியை புடமிடவைத்து, ஆவியிலே மறுபிறப்பைக் கொடுத்து இரட்சிப்புக்குள் நடத்தவது மட்டுமல்ல (யாக். 1:18; யோ. 3:3, 5; 1 பேதுரு 1:23 ; ரோ. 10:9, 10); தினந்தோறும் தேவன் வசனத்தைக் கொண்டு இருதயமாகிய ஆவியைப் புடமிடுகிறார். இதனால் ஆவியிலே வல்லமை கிடைக்கிறது. எனவே ஆவியாயிருக்கிற பிசாசுக்கு எதிர்த்து நிற்க முடிகிறது. ஆத்மாவையும் சரீரத்தையும் வசனத்தினால் ஆவி நடத்த முடிகிறது. அதன் மூலமாய் தெய்வீக ஆரோக்கியம், வெற்றி வாழ்க்கை பொருளாதார ஆசீர்வாதம் மட்டுமல்ல; நித்திய ஜீவனும் நிச்சயமாகிறது. பரலோகம் போக வழிகேட்ட வாலிபனிடம் இருந்த குறையை இயேசு சுட்டிக் காட்டினாரே அதுதான் தேவனின் புடமிடுதல்; சிட்சித்தல்; (மத். 19:22) முடிவில் அவன் புடமிடுதலுக்கு உடன்படவில்லை; சோகமாய் வெளியேறினான். நாமோ அப்படியில்லாதபடிக்கு வசனத்தின் மூலமாய் நம் ஆவிக்கு வரும் தேவனுடைய சிட்சையை - போதனையை - பரீட்சைக்குரிய காரியமதை அற்பமாய் எண்ணாமல் (எபி. 12:5) புடமிடுதலுக்கு தினந்தோறும் ஒப்புக் கொடுக்க வேண்டும். பயங்கரமான விபச்சாரம் செய்யும் கிறிஸ்தவனுக்கும், அந்த சபையாருக்கும் பவுல் நிருபம் மூலமாய் புடமிடும் வார்த்தைகளை

எழுதினதினால் அல்லவோ அங்கே ஒரு புது மாற்றம் உண்டானது (1 கொரி. 5:1-5; 2 கொரி. 2:1-11; 7:8-12)

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நம் தேவன் வார்த்தையினால் ஆவியாகிய இருதயத்தை புடமிடுகிறார். உன் ஆவி பலமுள்ள, அனலுள்ள, பரிசுத்தமுள்ள ஆவியாய் இருக்க வேண்டும்என்று விரும்புகிறாயா? அந்த உன் புடமிடப்படும் ஆவியினாலே உன் ஆத்மாவும், சரீரமும் சீர்செய்யப்பட, கிறிஸ்துவுக்குள் சாட்சியாய் இருக்க நாடுகிறாயா? இன்றே வசனத்தால் தேவன் உன் ஆவியிலே தினந்தோறும் தரும் புடமிடுதலை ஏற்றுக் கொள். சபை பிரசங்கங்களின் மூலமாய்க் கூட தேவன் உன்னைப் புடமிடுவார். நீ தயாராயிருந்தால் தேவன் செயல்பட தடையே இல்லை.

# 20. பாவத்தின் சம்பளம் மரணமா?

இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும் என்று யாக். 1:15 சொல்கின்றது. கர்ப்பம் தரிக்க இரண்டு ஆள் தேவை. இங்கே இச்சை அதாவது மனிதருக்குள்ளிருந்து பிறக்கும் இச்சை, கர்ப்பம் தரிக்காமலிருந்தால் பாவம் பிறக்காது. ஆனால் அது பிசாசசோடு உறவு கொண்டு பாவத்தைப் பிறப்பிக்கிறது. இப்படிப்பட்ட தவறான உறவே கூடாது; அப்படியே உறவு கொண்டு கர்ப்பமானாலும் அந்த பாவம், கிரியைகளால் வெளிப்படும் முன்னே கலைத்து விடுவது மிக மிக நல்லது. அதனால் தான் கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதே என்று வேதம் சொல்கிறது; சூரியன் அஸ்தமிக்கும் முன்னே அந்த கோபம் கலைக்கப்பட வேண்டும் (எபே. 4:26) கிருபையின் காலத்திலே எவைகளெல்லாம் பாவமென்று முதலில் அறிவோம்.

(1). ஆவியானவரால் உலகத்தாருக்கு, இயேசுவே ஆண்டவர் ; இரட்சகர் என்று உணர்த்தப்பட்டும் அதை விசுவாசிக்காததே பிரதான பாவம் (யோ. 16: 8,9). இதுதான் ஆவியானவருக்கு விரோதமான பாவம். இந்த பாவம் செய்வோருக்கு - அதாவது இரட்சிக்கப்படாதவர்களுக்கு (ரோ. 10:9,10). இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்பு இல்லை. இது மரணத்துக் கேதுவான பாவம் (1 யோ. 5:16). இந்த பாவத்தை பவுல் செய்ததால் தான் தன்னை பிரதான பாவி என்கிறான். (1 தீமோ. 2:15); (2) தேவனுடைய வார்த்தையை (Law) மீறுவது பாவம் (1 யோ. 3 :4); (3) நன்மை செய்ய

அறிந்திருந்தும் செய்யாமற் போவது. புறக்கணிப்பது பாவம் (யாக். 4 : 17); (4). சந்தேகப்படுதல், உறுதியில்லாமை, நம்பிக்கையில்லாமை ஆகிய எல்லாமே பாவம் தான் (ரோ. 14:23); (5). சகல வித நேர்மைக்கேடும் (Unrighteousness) பாவமே (1 யோ. 5:17).

இப்படிப்பட்ட பாவங்கள் செய்பவனுக்கா சரீர மரணம்? ஆம் என்றால் சிறு குழந்தைகள் மரிக்கின்றனவே ஏன்? உலகத்திலே நாம் என்ன செய்தாலும் அதற்கு ஒரு கூலி - சம்பளம் - வெகுமானம் - ஏதோ ஒன்று உண்டு. பாவம் செய்தாலும் சம்பளம் உண்டு. இது தான் மரணமென்கிற பயங்கரம். இந்த மரணம் சரீர மரணமாயிருக்க முடியாது. ஏனென்றால் சரீர மரணம் ஆதாம் செய்த பாவத்தின் மூலம் மனுக்குலத்திற்கு தேவன் கொடுத்த தண்டனை (எபி. 9:27). இது சன்மார்க்கனுக்கும் உண்டு. துன்மார்க்கனுக்கும் உண்டு; குழந்தைக்கும் உண்டு; இரட்சிக்கப் பட்டவனுக்கும் உண்டு; அப்படியானால் இந்த செய்தியின் தலைப்பிலுள்ள பாவம், ஆதாம் செய்த பாவமில்லை என அறிகிறோம். இதிலுள்ள சம்பளம் சரீர மரணம் அல்ல என்றும் அறிகிறோம். **உலகத்திலே இரண்டு விதமான பாவங்கள் தான் உள்ளன.** (1) ஆதாம் செய்த பாவம் (2) ஒவ்வொரு தனிமனிதனும் செய்கிற பாவம். ஒரு தனி மனிதன் எப்போது ஆவிக்குரிய மரணத்தில் வீழ்ந்து பாவியாகிறான்? மேலே சொல்லப்பட்ட பிதான பாவமான இயேசுவை விசுவாசிக்காமல் இருக்கும் போது. தலைப்பில் சொல்லப்பட்ட படி சம்பளத்தைப் பெறப்போகிறவர்கள் பாவிகள் என்பதால், அவர்கள் ஆவிக்குரிய மரணத்தில் ஏற்கெனவே இருந்திருக்க வேண்டும். அல்லது இரட்சிக்கப்பட்டு மறுபடியும் ஆவியிலே மரித்திருக்க வேண்டும். (எபே. 2:1) இப்படிப்பட்ட பாவிகள் தங்களின் பாவக் கிரியைகளால் பெறப்போகும் சம்பளமாகிய மரணம், நிச்சயம் இரண்டாம் மரணமாகிய நித்திய மரணம் தான், நரகம் தான். மரித்த பாவிகள் ஆவிக்குரிய மரணத்திலிருந்த சரீரங்களை கல்லறையில் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு 2ம் மரணமாகிய சம்பளம் தரும்போது மறுபடியும் சரீரத்தில் மரிக்கிறார்கள். உள்ளான மனுஷன் நரகத்திலே நித்ய வேதனை அடைகிறான். இந்த 2 ம் சாவைத்தான் பாவம் செய்கிற ஆத்மாவே சாகும் என்று எசே. 8 : 4, 20 சொல்கிறது. பாவத்தினின்று இயேசு கிறிஸ்துவின் கிருபையால் விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமையானால், அந்த பாவத்திற்கு சம்பளமே இல்லை. அதை இயேசுவே பாதாளம் போய் பெற்றுக் கொண்டார். இனி என்றுமே நித்திய ஜீவன் தான்; மரணமில்லை.

# 21. சரீர மரணத்தைப் பற்றி.....

இந்த காலத்தில் அநேக அகால, பொல்லாத, விரும்பத்தகாத மரணங்கள் தொடர்ந்து நடக்கின்றன. அதுவும் தேவ ஊழியர்களுக்கே நடக்கின்றது. சென்னை பாஸ்டர், ஸ்டீபன், அகஸ்டின் கோமஸ், அப்போஸ்தலர் பெஞ்சமின், ஜோசப் ஸ்டாலின், ஜஸ்டின் பிரபாகரன், பாஸ்டர் ஜீவானந்தம், பாஸ்டர் சாம் சுந்தரம் போன்ற பலருக்கு இப்படி நடந்திருக்கின்றன. ஏன் இப்படி என்று கிறிஸ்தவ விசுவாசிகள் அங்கலாய்த்து பதிலேதும் கிடைக்காமல் "கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்" (யோபு 1:21) என்ற யோபுவின் வார்த்தையைச் சொல்லி ஆறுதலடைகிறார்கள். இந்த வார்த்தை நூற்றுக்கு நூறு சரியாய் இருந்திருந்தால் அவர்களின் ஆறுதல் நிரந்தரமாய் இருந்திருக்கும். இந்த வார்த்தை தேவன் சொன்ன வார்த்தை அல்ல. இது யோபு, தான் விசுவாசித்ததை வெளிப்படுத்திய வார்த்தையாகும். யோபுவுக்கு திராட்சைத் தோட்டம், ஆடு, மாடு, மனைவி, மக்கள் எல்லாம் கொடுத்து ஆசீர்வதித்தவர் தேவன். கர்த்தர் கொடுத்தார் என்பது உண்மை. கொடுத்தவைகளை கர்த்தர் தான் எடுத்தாரா? சாத்தான் தான் கையை நீட்டினான். எனவே கர்த்தர் எடுத்தார் என்று யோபு சொன்னது அவனின் அறியாமை. இந்த வார்த்தை எப்படி நிரந்தர ஆறுதலைக் கொடுக்கும்? கர்த்தர் தானே சாத்தானுக்கு உத்தரவு கொடுத்தார் என்று வாதிடுபவர்களும் உண்டு. யோபுவைப் போய் தொடு என்று தேவன் கட்டளையிட்டதாய் வசனம் ஏதும் உண்டா? "சரீரத்தை தொடாதே; உயிரைத் தொடாதே" என்று "தொடாதே" என்ற வார்த்தையைச் சொல்லி, யோபுவுக்கு பாதுகாப்பும் தாங்கத் தக்கதான திராணியும் தானே தந்தார் தேவன்! உலகமே பிசாசின் கையில்; யோபு இந்த உலகத்தில்; அதனால் தான் கர்த்தர் சாத்தானிடம், "அவன் தான் உன் கையிலிருக்கிறானே! நீயே தொடலாமே! என்னை ஏன் தொடச் சொல்கிறாய்" என்று கேட்டார் (யோபு 1 : 12). தேவன் உத்திரவு கொடுத்து தான் பிசாசு தொட்டான் என்பது போன்ற மாயையை பிசாசு ஏற்படுத்த நினைத்தான். பல கிறிஸ்தவர்கள் அவனின் மாய விளையாட்டில் ஏமாந்து போய் மரணத்தைப் பற்றிய கருத்தை அறிய முடியாமல் தவிக்கின்றனர். எந்த மரணம் வந்தாலும் சரி, ஏசா. 57:1-ஐச் சொல்லி அறிந்தோ அறியாமலோ கர்த்தர் மேலே குற்றத்தைச் சாட்டுகின்றனர்.

இன்னும் சிலர் உபா. 29 : 29 ல் சொல்லப்பட்டபடி மறைவான ரகசியங்கள் கர்த்தருக்கு உரியது என்பதால் இப்படிப்பட்டதான மரணம் பற்றியவைகளை சிந்திக்க வேண்டாம் என்று எண்ணுகிறார்கள். இவர்கள்

ஓசியா 4:6ல் சொல்லப்பட்டபடி அறியாமையினால் சங்காரமாகிறவர்கள். நிஜமாகிய இயேசு வந்தபின்னே லூக். 12 : 2; ன் படி வெளியாக்கப்படாத மறை பொருளுமில்லை. அறியப்படாத இரகசியமுமில்லை. அல்லேலூயா! தானியேல் தீர்க்கதரிசிக்கு பல தீர்க்கதரிசன காரியங்களை தேவன் சொன்னார். அது அவனுக்கே விளங்கிக் கொள்ள முடியவில்லை. அல்லேலூயா! அவைகள் கடைசி காலத்திற்கு உரியவைகள் என்பதால் முத்திரை போட்டுவை என்று தானி. 12; 4ல் தேவன் சொன்னார். ஆனால் புதிய ஏற்பாட்டு வெளிப்படுத்தல் விசேஷத்திலோ, எல்லா தீர்க்கதரிசன வார்த்தைகளும் விளக்கப்பட்டிருப்பதால் இவைகளை முத்திரை போட வேண்டாம்; மூட வேண்டாம்; மறைக்க வேண்டாம்; எல்லாம் வெளியரங்கமாக்கப்பட்டுள்ளது என்று வெளி. 22 : 10 ல் தேவன் சொன்னார். இப்படியிருக்கும் போது சரீர மரணத்தைப் பற்றிய சத்தியத்தை வேத வசனத்தோடு ஆவியானவரின் ஒத்தாசையைக் கொண்டு அறிந்து கொள்வோமாக!

சரீர மரணத்தை வைத்து பரலோகம் போவானா என்று யாரையும் எடை போடக்கூடாது. **ஏனென்றால் பரலோகத்திலே 3 அதிசயங்களை காணப் போகிறோம்.** 1. யார் யாரெல்லாம் வருவார்கள் என்று நினைக்கிறோமோ அவர்கள் எல்லாம் அங்கே வரமாட்டார்கள். 2. யார் யாரெல்லாம் வர மாட்டார்கள் என்று நினைக்கிறோமோ அவர்கள் எல்லாம் அங்கே வருவார்கள். **மூன்றாவது** அதிசயம்: நீங்களும் நானும் அங்கே இருப்போம். ஆமென். மரணம் என்பது ஆவிக்குரிய மரணம், சரீர மரணம், நித்திய மரணம் என்று மூன்று பகுதிகளாய் உள்ளது. எபி. 9:27 ன் படி சரீர மரணம் மனிதனுக்கு நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. இது ஆதாம் ஏவாள் செய்த பாவத்தால் வந்தது (ஆதி. 3:19) இது சாபமல்ல. சாபமென்றால் சிலுவையிலேயே ஒழிந்திருக்க வேண்டுமல்லவா! (கலா. 3:13). இது தேவன் தந்த தண்டனை. இது நம் விசுவாசத்தால் மாறாது. சுப்ரீம் கோர்ட்டு கொடுத்த தண்டனையை வேறு யாரும் மாற்ற முடியாது; அந்தப்படி சரீர மரணமாகிய தண்டனையை தேவன் ஒருவர் தான் மாற்றுவார். விசுவாசிகளாகிய நமக்கோ இரகசிய வருகையின் போது மாறும் (1 கொரி. 15:55).

முதலில் சரீர மரணம் நிகழ்வது எப்படி என்று பார்ப்போம். யாக் 2:26; பிர. 12;7; ன் படி உள்ளான மனுஷனாகிய ஆவியும் ஆத்மாவும் சரீரத்தில் இல்லையென்றால் சரீரம் மரணம் அடைகின்றது. சரீரத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. இரத்தமே உயிர் (ஆதி. 9:4; லேவி. 7:11, 14) மண் சரீரத்தில் தேவனால் ஜீவ சுவாசம் ஊதப்பட்டது; உயிர் வந்தது; இரத்த ஓட்டம்

உருவானது (யோபு 33;4) மனிதனுக்கு மட்டுமல்ல எல்லா ஜீவராசிகளுக்குமே சுவாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சுவாசத்தை எடுத்துவிட்டால்; உயிரில்லை; மரணம் வருகிறது (சங். 104: 29) அல்லாமலும் இரத்த ஓட்டத்தை தடைப்பட வைத்தாலோ, இரத்தத்தை சிந்தவோ, உறையவோ, கொஞ்சம் கொஞ்சமாய் கரையவோ வைத்தாலோ சரீரத்தில் உயிரில்லாமல் போகும்; அப்போது சுவாசமும் எடுபட்டுப் போகும். இப்படியாய் நிகழ்கின்ற சரீர மரணத்தை யார் நிறைவேற்றுகிறது? யாருக்கு அப்படிப்பட்டதான அதிகாரம் உண்டு? இப்படியெல்லாம் கேள்விகள் எழுகின்றன. வேத வசனத்தின்படி பார்க்கும் போது பிசாசுக்கும் தேவனுக்கும் நிறைவேற்ற அதிகாரமுண்டு எப்படி? **பிசாசு:** (1) இதற்கு கொல்லவும், அழிக்கவும் உலகத் தோற்றத்திற்கு முன்பே அதிகாரம் தரப்பட்டது (யோ. 10 ; 10). (2) சரீரத்தை மாத்திரமே அழிக்க அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது (மத். 10:28; லூக். 12 :4). (3) இந்தப் பிசாசை மரணத்துக்கு அதிகாரி - Death Officer என்று எபி. 2:14 சொல்கிறது. (4) வெளி. 6:8 வாசித்தால் மரணத்தை செய்வதற்கென்றே மரணப் பிசாசு உண்டு என அறிகிறோம்.

**தேவன்:** (1) அவர் பட்சிக்கிற அக்கினி என்று உபா. 4:4 சொல்கின்றது. (2) அவர் கொல்லுகிறவர் என்று உபா 32:39 கூறுகிறது. (3) தீங்கையும் மரணத்தையும் உண்டாக்க முடியும் (ஏசா. 45:7; உபா. 30; 19) (4) ஜீவனைக் கொடுக்கவும் எடுக்கவும் அதிகாரமுண்டு (யோ 10:18) (5) மரணத் திறவுகோல் அவரிடமே உள்ளது (வெளி 1:18)

அப்படியானால் பிசாசும் தேவனும் மரண விஷயத்தில் ஒரே காரியத்தைத் தான் செய்கிறார்களா? இது கேள்வி. இதை அறியுமுன்னே எப்படி எப்படியெல்லாம் மரணம் நடக்கிறது என்று முந்தி அறிய வேண்டும்.

(I) கல்யாண நாளில் மரணம்; தலைப் பிரசவத்தின் போது மரணம் வேலை கிடைத்த அன்றே மரணம்; வாலிப வயதில் மரணம்; குடும்பத் தலைவன் மரித்து ஒருவாரம் கூட ஆகாத நிலையில் வீட்டுப் பொறுப்பை ஏற்க வேண்டியவர் மரணம்; பச்சிளங் குழந்தைகள் பதறப் பதறப் பெற்றோர் மரணம்; பிறப்புகளில் மரணம்; கொடிய வியாதியினால் மரணம்; கவலையால் தரித்திரத்தால் தோல்வியால் மரணம் அல்லது தற்கொலை இப்படியாய் மரணங்கள் நிகழ்கின்றன. இப்படிப்பட்டதான மரணத்தை இரட்சிக்கப்படாத உலகத்தார் கூட ஏற்பதில்லை. இது அகால மரணம். யாக். 1:13 ன்படி பொல்லாங்கானதைச் செய்பவன் பிசாசு என்பதால் இந்த பொல்லாங்கான மரணத்தை அவன் தான் செய்ய வேண்டும். 1 பேதுரு 5:8

மற்றும் யோ. 10:10 ன்படி பக்தியுள்ள சந்ததி வராதபடி எப்படியும் அழிக்க வேண்டும் என்று எண்ணுபவன் அவன்தான். எபி. 2 : 14, 15 ஐ வாசித்தால் மரண பயம் அவனாலேதான் வருகின்றபடியால் இப்படிப்பட்ட பயம் நிறைந்த மரணத்தைக் கொடுப்பவன் அவனே. இப்படிப்பட்ட மரணங்களை கொடுக்க அவன் தன் இஷ்டப்படியே செயல்படுகின்றான். இது போன்ற மரணங்கள் எல்லாம் பாவத்தாலும், சாபத்தாலும் பிசாசின் நேரடி ஈடுபாட்டாலும், உண்டாகலாம். மொத்தத்தில் சாத்தானே காரணம். ஏசா. 59:2 ஐ தியானியுங்கள். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை; உன்னைக் கை விடுவதுமில்லை. பூமியின் கடைசி பரியந்தம் உடனிருப்பேன் என்று சொன்ன தேவன், வார்த்தையில் உண்மையாயிருக்கிறார். நாம் பாவம் செய்தாலும் கூட அவர் விலகுவதில்லை; அவர் நமது அப்பா இல்லை என்று சொல்லும் வரை உடனிருப்பார்; அதன் பின்னும் திரும்பி வருவோமா என்று காத்தும் இருக்கும் அன்புள்ளவர். பிசாசானவனும் தனக்கு நியமிக்கப்பட்ட காரியத்தை செய்ய தயாராய் இருக்கிறான். தேவனின் நிழலில், செட்டையில் ஒளியில், பார்வையில், அரவணைப்பில் இருக்கும் போது பிசாசு நம்மை தொட முடியாது. நம்முடைய பாவமே நமக்கும் தேவனுக்கும் பிரிவினை உண்டாக்கும். பிசாசு அப்போது சுலபமாய் நம்மைப் பிடித்து விடுவான். இப்படியாய் பிசாசின் மூலம் வரும் அகால பொல்லாத மரணத்தை தேவன் ஜெயித்தார் (ஏசா. 25:8) என்பதால் இந்த மரணம் - மரணப் பிசாசு தேவனுக்கு எதிரி தான். அப்படியிருக்க இந்த எதிரியான மரணத்தை தேவன் தரும் மரணம் என்று சொல்வோர் தேவனைப் பற்றிய அறிவில்லாதவர்கள் (ஓசியா 4:6). பிசாசின் வேலையை தேவன் செய்தார் என்று சொல்லி பிசாசுக்கு நல்ல பெயர் உருவாக்குகிறார்கள். அதனால்தான். இப்படிப்பட்ட அகால மரணம் நடக்கும் வீட்டு ஆராதனைகளில் ஏசா. 57 : 1 மற்றும் யோபு 1:21 போன்ற வசனங்களைச் சொல்லி தேவனே இப்படியான மரணத்தைக் கொடுத்து எடுத்துக் கொண்டார் என்று பிரசங்கிக்கிறார்கள். இது பேதமை. இந்த மாதிரியான அகால மரணம் கிறிஸ்தவனுக்கு வரவே கூடாது. இதை மறைந்த போதகர் ஜஸ்டின் பிரபாகர் சொன்னார் என்பதால் அவரை வேதப் புரட்டர் என்று கிறிஸ்தவ ஊழியர்களே சொல்கின்றனர். இவர்கள் சொன்னது ஜஸ்டினை அல்ல; சங். 91:10-16 ஐ சொன்ன தாவீதையே சாடுகின்றனர். அகால மரணம் கிறிஸ்தவனுக்கு வரக்கூடாது என்று சொன்னவரே அகால மரணமடைந்தார் என்பதால் அந்த கூற்று ஏற்கக் கூடியதல்ல என்றும் பலர் சொல்கின்றனர். அப்படியானால் நீதிமொழிகள், பிரசங்கி போன்ற புத்தகங்களை எழுதிய ஞானி சாலமோன், இறுதியில் அந்நிய ஸ்திரிகளோடு பிணைந்து விக்ரக ஆராதனைக்காரனாய் மாறி எபி. 11ல் உள்ள விசுவாசிகள்

பட்டியலிலே இடம் பெறாமல் போனதால், நீதிமொழிகள் பிரசங்கியிலே அவர் சொன்ன வார்த்தைகள் பொய்யா? "நான் பிரசங்கித்தது பொய்யல்ல" என்று ஜஸ்டின் கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட பொல்லாத அகால மரணத்தை இயேசு தான் தருகிறார் என்று இன்னும் ஆணித்தரமாக சொல்வார்களானால் (1) இயேசு பிசாசின் கிரியைகளை அழிக்க வந்தார் என்பது வீணாகி விடும். (1 யோ. 3:8; மத். 8:17 With யாக். 1: 13). (2) இயேசு, தன் மரணத்தினாலே மரண அதிகாரி தரும் மரண பயத்தினின்று விடுதலை ஆக்கினார் என்பது பொய்யாகிவிடும் (எபி. 2: 14, 15). (3) ஜீவன் தரவும், அது பரி பூரணப்படும் வரை காக்கவும், நடத்தவும் இயேசு வந்தார் என்பது கட்டுக்கதையாகி விடும் (யோ. 10; 10). (4) கடைசி நாளில் இப்படிப்பட்ட மரணப் பிசாசை பரிகரிக்கப் போகிறார் என்பதும் தவறாகிவிடும் (1 கொரி 15 ; 26; வெளி 20:14). எனவே இப்படிப்பட்டதான மரணத்தை, விசேஷமாய் தேவனுடைய பிள்ளைகளுக்கு கொடுக்கும்படியாய் பிசாசு அலைகிறான். இதிலிருந்து நீங்கும் வழி தேவனிடம் உண்டு (சங். 68:20). **அதற்கான வழிகள் :** (1) சர்வாயுத வர்க்கம் தரித்துக் கொள்ள வேண்டும் (2) வசனத்தோடு கூடிய விசுவாசத்தால் பரிசுத்த ஆவியின் வல்லமையோடு நம்மைச் சுற்றி நாமே வேலி போட்டுக் கொள்ள வேண்டும். இது தான் நமக்கு அரண்; கோட்டை; கேடகம்; உன்னத மானவரின் மறைவு - நிழல் - செட்டை (இதை தேவன் போடுகிறார் என்ற பிசாசின் வார்த்தை பொய் - யோபு 1;10). (3) உன் ஆத்மா தினந்தோறும் மறுரூபமாகட்டும் (ரோ. 12; 2;3 யோ. 2). (4) உன் காலம் - ஜீவன் - Life Time - சத்துருவின் கையிலில்லை; கர்த்தரின் கையிலுள்ளது என்று விசுவாசி (சங். 31 : 15; தானி. 5:23 - See யோ. 15:7; கொலோ. 3:3; 2 தீமோ. 1:12)

(II) **இரண்டாவதாய்** கிறிஸ்துவினிமித்தமும் அவரின் ஊழியத்தினிமித்தமும் வரும் மரணம். இது தேவ பிள்ளைகளுக்கு வருவது; இரத்த சாட்சியாய் மரிப்பது. இது தேவனால் முன் குறிக்கப்பட்ட மரணம். தேவ சித்தப்படி நடக்கும் மரணம், இப்படிப்பட்ட மரணம் தான் தேவன் விரும்பும் மரணம் (சங். 116 :15). அதனால்தான் ஸ்தேவான் கல்லெறியுண்டு மரிக்கிற போது, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இயேசு அவனை அன்போடு வரவேற்க எழும்பி நிற்கிறார் (அப். 7:55, 56) அல்லேலூயா. யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்டது; இயேசு ஈனச் சிலுவையிலே இளமையிலேயே மரித்தது; தோமா எதிரிகளால் குத்தி கொல்லப்பட்டது போன்ற பல உதாரணங்களை சொல்லலாம். இந்த மரணத்தைச்

செய்பவனும் பிசாசுதான். இப்படிப்பட்ட மரணம், அகால - பொல்லாங்கான - மரணமாயிருந்தாலும் தேவ பிள்ளைகள் விரும்பி ஏற்றுக் கொள்கிறார்கள் (எபி. 11; 35 - 38). இதிலே ஒரு முக்கியமான காரியம் என்னவென்றால் இப்படிப்பட்ட மரணம் யாருக்கும் தெரியாமல் நடக்காது. இந்த மரணத்தால் தேவ நாமம் மகிமைப்படும்; அவரின் சுவிசேஷம் சாட்சிகயாய்ப் பிரசங்கிக்கப்படும்; ஆத்ம ஆதாயம் பெருகும். நாம் மூட்டைப்பூச்சி போன்றவர்களென்றும் மூட்டைப்பூச்சியை நசுக்கினால் கிறிஸ்தவம் வளரும் என்றும் ராஜாஜி சொன்னது உண்மையாகும். இப்படியான மரணம், தேவதிட்டம் என்பதால் பலமுறை இயேசு, பவுல் போன்றோரை மக்கள் கொல்ல முயன்றும் முடியவில்லை அல்லவா! இப்படிப்பட்ட மரணங்கள் நடக்கப் போவது அந்த இரத்த சாட்சிகளுக்கு கண்டிப்பாய் தெரியும் (See 2 தீமோ. 4:6).

(III) **மூன்றவதாய்,** தான் தந்த தண்டனையை தேவனே நல்லபடியாய் நிறைவேற்றும் மரணம். இதுவும் தேவன் விரும்பும் மரணம்தான் (சங். 116 : 15). நீடித்த நாட்களாய் வாழ்ந்து திருப்தியாய் மரிக்கும் மரணம் (சங். 91:16) இப்படிப்பட்ட மரணம் வேண்டுமென்று எல்லோருமே விரும்புவர் (பிலி. 2:3ல் பவுலின் ஆசை). ஏன் என்றால் இங்கே சாத்தானின் வேலை இல்லையே! உன் காலம் - ஜீவன் Life Time - தேவனின் கையிலிருந்தால், 91-ம் சங்கீதப்படி வாழ்ந்தால், 1-ம் சங்கீத ஆசீர்வாதத்தோடு இது நடக்கும். அப்படியானால் எத்தனை வருஷம் வாழலாம் என்று பலர் கேட்கின்றனர். 70-80 என்று சங். 90:10 ஐ வைத்து சொல்கின்றனர். இது தவறு. இந்த வருஷம் நமக்கல்ல; மோசேயினால் இஸ்ரேலருக்கு இதை எழுதிய மோசேயே 120 வருஷம் வாழ்ந்தாரே! ஆதி. 6:3ன்படி 120 வருஷம் மனிதனுக்கு வாழ்விருந்தது; நோவா காலத்துக்குப் பின் 70 ஆயிற்று என்கின்றனர். அப்படியானால் மோசேக்குப் பிறகு கிட்டத்தட்ட 3500 ஆண்டு காலத்தில் 10 வயதாக மாறியிருக்கணுமே! நமக்கோ அவர் சித்தப்படி திருப்தியான நீடித்த வாழ்க்கை தருவார். ஆமென். ஆபிரகாமுக்கு இந்த மரணம் தான் (ஆதி. 25:7, 8); மோசேக்கும் (உபா. 34:7) யாக்கோபுக்கும் (ஆதி. 47:28-30 49, 33) இந்த மரணம் தான்.

(IV) **நான்காவதாய்** தேவனுக்கு விரோதமாய் தொடர்ந்து பாவம் செய்து, அதிலே நிலைத்திருந்து தேவ நாமம் தூஷணம் செய்யும் போது வரும் மரணம். இதுவும் தேவன் தரும் மரணம் தான். (அவர் பட்சிக்கிற அக்கினியாயிற்றே!) சரித்திர நியாயத் தீர்ப்பில் வரும் மரணம்; 1 தீமோ. 5: 24ன் படி வருவது! இது தேவனுக்கு விரோதமாய் துணிகரமாய் பாவம்

செய்வதால் வருவது. எல்லோருக்கும் வருவதல்ல; தேவன் வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பில் இப்படிப் பட்ட எல்லோருக்குமே 2ம் மரணம் தர இருப்பதால், ஒரு சிலருக்கே இப்படிப்பட்ட மரணம் ஜீவியத்திலேயே தேவனால் சம்பவிக்கலாம். ஏன் இப்படி தேவன் செய்கிறார் தெரியுமா? தன்னுடைய மகிமையை வேறு யாருக்கும் கொடுக்க விரும்பாத தேவன், தான் இன்னார் என்று இதன் மூலம் உலகிற்கு வெளிப்பட, சுவிசேஷத்திற்கான தடைகள் உடைய, பலர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட, வசனப்படி வாழ நடத்துவதாகும். இந்த மரணம் தேவ மக்களுக்கும் வரலாம்; உலகத் தானுக்கும் வரலாம். எகிப்தில் சங்காரத் தூதன் தந்த மரணம் (யாத். 12 : 13) ; யூதா மகன் ஓணானின் மரணம் (ஆதி. 38; 8-10); சோதோம் கொமாரா அழிவு; ஜலப்பிரளயத்தில் உலக அழிவு; அனனியா - சப்பிராள் மரணம் (அப். 5); யோராம் ராஜா மரணம் (2 நாளா. 21; 14, 15, 18, 19) போன்ற பல மரணங்களை நாம் சிந்திக்கலாம். இந்த மரணம் யாருக்கும் தெரியாமல் நடக்காது.

ஆக பிசாசால் வருகிற அகால - பொல்லாத மரணம், இரத்த சாட்சி மரணம், தேவனால் வரும் நீடித்த நாளாய் திருப்தியாகி மரிக்கும் மரணம், சரித்திர நியாயத்தீர்ப்பின் மரணம், என்று நான்கு வகையாய் சரீர மரணம் இருக்கிறது என்று அறிகிறோம். 2 வதும் 3வதும் தேவனுக்கு அருமையான மரணம். இவைகளினால் வரும் பின்விளைவுகள் மகிமையாகவே இருக்கும். 1ம் 4ம் தேவ பிள்ளைகளாகிய நமக்கு வேண்டவே வேண்டாம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உனக்கு எப்படிப்பட்ட மரணம் வேண்டுமென்று விரும்புகிறாய்? எபே. 3 : 20 ன் படி செய்கிற தேவன் நம் தேவனல்லவா! தேவ சித்தத்தை அறிந்து செயல்படு! வெற்றி உனதே! வசனத்தைக் கேட்டு, மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு வணங்காக் கழுத்தோடு தேவனுக்கு விரோதமாய் சாத்தான் பக்கம் சாயாதபடி, வசன வெளிச்சத்தில் விசுவாச ஓட்டம் ஓட ஒப்புக் கொடு! நீதிமானை பரலோகம் கொண்டு போவதே தேவ சித்தம். இந்த சித்தத்திற்கு நாம் தயாராவோம்! அவர் வருகை சமீபமாய் இருக்கிறதினாலே மரணத்தைக் காணாமலே மறுரூபமாவோம்! அல்லேலூயா!

# 22. மரணம் சாபமா? அது சிலுவையில் ஒழிந்ததா?

வேதத்திலே சாபமும் ஆசீர்வாதமும் மனிதனுக்கு வைக்கப் பட்டிருக்கிறது. இரண்டுமே Conditional தான். தேவனின் வார்த்தைப்படி செய்தால் ஆசீர்வாதம் உண்டு; செய்யாவிட்டால் சாபம் உண்டு. உபா. 28ல் நாம் பார்ப்பது இது தானே! இந்த சாபம், சிலுவை மரணத்திலே ஒழிக்கப்பட்டதாயிற்று! இதை விசுவாசிக்கிற யாவருக்கும் சாபமில்லை (கலா. 3:13) சாபம் எப்படி வருகிறது என்பதை ஒரு உதாரணத்தோடு சொல்ல விரும்புகிறேன். ஒரு போலீஸ்காரர் ரோட்டிலே நடந்து போகும் ஒருவனைப் பார்த்து "நீ இடதுபுறம் தான் நடந்து போக வேண்டும்; அதை மீறி வலது புறம் போனாயென்றால் ஆக்சிடெண்ட் நடக்க வாய்ப்புண்டு; எனவே வலது பக்கம் நடக்காதே" என்கிறார். இவனோ அவர் சொல்லைக் கேளாமல் வலது புறமாகவே நடக்கிறான். போலீஸ்காரன் சொன்னபடியே ஒரு லாரி மோதி அவன் கால் ஒடிந்து விட்டது. கால் ஒடிய வைத்தது போலீஸ்காரரா? இல்லை. அவனே தன் சுய சித்தபடி செய்து தீங்கை வருவித்துக் கொண்டான். இது தான் சாபம் என்பது. மற்றபடி அவன் வலதுபுறம் நடக்கும் போது போலீஸ்காரர் அவனைப் பிடித்து அபராதமோ, ஜெயில் தண்டனையோ விதித்தால் அதற்குப் பெயர் Punishment - தண்டனை. அதைக் கொடுத்தவர் போலீஸ்காரர். ஆக சாபம் வேறு. தண்டனை வேறு. இன்றைக்கு மனிதர்கள் எல்லாரும் எபி. 9:27 ன்படி மரிக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவர்களும் மரிக்கிறார்களே. இந்த மரணம் எப்படி வந்தது என்று முதலில் பார்ப்போம்.

ஆதாம் பாவம் செய்ததினால் மரணம் வந்தது; உண்மை தான். **மரணத்திலே மூன்று வகை உண்டு.** (1) ஆவிக்குரிய மரணம் (2) சரீர மரணம் (3) நித்திய மரணம். ஆதி. 2;17 ல் தேவன் சொன்னாரே "இந்தக் கனியைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று. இது எந்த மரணம்? ஆதாம் 930 வருஷம் வரை வாழ்ந்து தானே சரீர மரணத்தைக் கண்டான். அப்படியானால் கனியைப் புசித்த உடனே ஆதாம் சாகவில்லையா? அப்படி அவன் சாகவில்லை என்றால் தேவனின் வார்த்தை பொய்யாகிவிடுமல்லவா! முதலில் சாவு - Death - என்றால் என்ன என்று புரிய வேண்டும். Communication cut - அதாவது தொடர்பு அறுபடுதல் - இதற்குப் பெயர் தான் சாவு. டெலிபோன் Dead ஆகி விட்டது என்று சொல்லுகிறோம். ஆனால் டெலிபோன் இருக்கிறது. ஒயர்களெல்லாம் இருக்கின்றன.தொடர்பு கொள்ள

முடியாத நிலையில் போன் இருக்கிறது. இதற்குப் பெயர் தான் Dead. ஒருவனுக்கு சரீரம் கொடுத்திருப்பது உலகத்தோடு தொடர்பு கொள்ள - ஆவி கொடுத்திருப்பது ஆவியாகிய தேவனோடு தொடர்பு கொள்ள. ஒருவன் சரீர மரணமடைந்தான் என்றால் என்ன பொருள்? இந்த சரீரம் உலகத்தோடு தொடர்பு கொள்ள முடியாத நிலையாகி விட்டது. மரித்துப் போனது என்று பொருள். இப்படி ஆதாமுக்கு ஆகவில்லை. ஆனால் அவன் தான் ஓடி ஒளிந்து தேவனோடு தொடர்பில்லாத நிலைக்கு உள்ளானான். அதாவது ஆவி மரித்துப் போய்விட்டது. கனியைப் புசித்த நாளிலே ஆவிக்குரிய மரணமடைந்தான். இந்த ஆவிக்குரிய மரணம் தான் அவனுக்கு வந்த சாபம். இது சரீர மரணமல்ல.

அப்படியானால் அவனுக்கு சரீர மரணம் எப்படி வந்தது. சரீர மரணம் அவனின் கீழ்ப்படியாமையினாலே வந்த சாபத்தினால் அல்ல. கீழ்ப்படியாமற் போன ஆதாம்; ஆவிக்குரிய மரணமாகிய சாபத்தைப் பெற்றுக் கொண்ட ஆதாம், 1 யோ. 1:7-9 போல பாவ அறிக்கை செய்து மன்னிப்பு பெற விரும்பாததால், சாபத்தோடே சரீர மரணமாகிய தண்டனையையும் தேவன் அவனுக்குக் கொடுத்தார். (ஆதி. 3:19) அவன் கனியைப் புசித்ததினாலே வந்த சாபம் எல்லா மனுஷரையும் தொடர்வது போல அவனுக்குத் தேவன் தந்த தண்டனையும் எல்லாரையும் தொடர்கின்றது. இதற்கு முடிவு தான் என்ன? ரோ. 5,6 ஆகிய அதிகாரங்களை பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு படிப்போம். ஆதாமின் மீறுதலினால் பாவம் நம்மை ஆண்டது; மரணம் வந்தது; இயேசு கிறிஸ்துவினாலே விடுதலை வந்தது; ஜீவன் கிடைத்தது. இதற்கு ஒப்பனையாக பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைக்கும் ஞானஸ்நானத்தினாலே, பாவத்தால் வந்த மரணத்திலிருந்து விடுதலையாகி இருக்கிறோம். அப்படியானால் இந்த மரணம் எது? இது ஆவிக்குரிய மரணமல்லவா! எபே. 2:1-7 வரை வாசியுங்கள். பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் ஆவியிலே மரித்திருந்த நாம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலே ஜீவனைப் பெற்று மறுபடியும் பிறந்திருக்கிறோம். சாபமாகிய ஆவிக்குரிய மரணத்திலிருந்து விடுதலை கிடைத்துவிட்டது. அல்லேலூயா! ஆனால் தேவன் தந்த தண்டனையான மரணத்திலிருந்து விடுதலை கிடைத்ததா? இயேசுவின் மரணத்தையும் உயிர்தெழுதலையும் விசுவாசிக்கிறவனுக்கு இந்த தண்டனையிலிருந்தும் விடுதலை உண்டென்றால் கடந்த 2000 ஆண்டுகளாக பரிசுத்தவான்கள் யாரும் மரித்திருக்கக் கூடாதல்லவா? அப்படியானால் இந்த சரீர மரணத்திற்கு விடுதலை தான் என்ன?

எபி. 2:14, 15 ஐ வாசித்தால் மனிதன் சரீர மரணத்திலேயே இருக்கிறான்; மனிதனாய்ப் பிறந்த இயேசு கிறிஸ்து மரித்து, சரீர மரணப் பிசாசை ஜெயமாக விழுங்கி உயிர்த்தெழுந்தார் என்பதை நாம் விசுவாசிக்கும் போது நமக்கு மரண பயத்திலிருந்து விடுதலை வருகிறது; ஒரு நாளைக்கு இயேசு மரித்து உயிர்த்தது போல நாமும் மரித்து உயிர்த்தெழுவோம் என்ற விசுவாசம் வருகிறது. 1 தெச. 4:13ல் பவுல் சொல்லும் ஆறுதல் வார்த்தை இது தானே. இந்த நம்பிக்கை வார்த்தையினாலே, சரீரமரண பயத்திலிருந்து விடுதலை இப்போதே வருகிறது. சரீர மரணத்திலிருந்து அல்ல. தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காமல் ஆவிக்குரிய மரணமாகிய சாபத்தை ஆதாம் அடைந்தான்; நாம் தேவனுடைய வார்த்தையை ரோ. 10:9, 10ன் படி விசுவாசித்து அறிக்கையிடுவதால் ஆவிக்குரிய மரணமாகிய சாபத்தினின்று விடுதலையாகி ஜீவனைப் பெற்றுள்ளோம். இதே போல சரீர மரணம் சாபமாயிருந்தால், இதே போல் நாமும் விசுவாசிக்க, சரீர மரணமே இல்லாமல் என்றென்றும் ஜீவிக்கலாமே! அப்படி ஒரு நிலை இருந்தால் பவுல் 1 தெச. 4ல் சொல்லியிருப்பாரே! அப்படி ஒரு நிலை இல்லையென்பதால் இந்த சரீர மரணம் சாபமல்ல: இது தேவன் தந்த தண்டனை. தண்டனை கொடுத்தவரே இதை எடுத்தால் தான் விடுதலையே ஒழிய விசுவாசித்தால் இப்போதே விடுதலை இல்லை - எப்போது தான் தேவன் எடுப்பார்?

சிலுவையிலே மரித்த இயேசு மரணத்தை ஜெயமாய் விழுங்கி வெற்றி சிறந்தார். இனி அவருக்கு மரணமே இல்லை. சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவர். ஆனால் உலகிலே மரணப் பிசாசு இன்னும் ஜீவிக்கிறான். விசுவாசிகளாகிய நாம் பூரண புருஷராகி இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் போது இந்த சரீரம் அழியாமையைத் தரித்துக் கொள்ளும். அப்போது தான் நாமும் இயேசு கிறிஸ்துவைப் போல இயேசு கிறிஸ்துவினாலேயே மறுரூபமாகி மரணத்தை ஜெயிக்கிறோம். (1 கொரி. 15:55) மரணம் உலகில் அப்போதும் இருக்கும். ஆனால் மரணத்தின் வேர் நமக்கில்லை. அல்லேலூயா! இந்த மரணப் பிசாசு, ஆயிர வருட அரசாட்சி முடிந்து வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது பரிகரிக்கப்படும் (1 கொரி. 15:26). அதன் பின்பு புதிய வானம்; புதிய பூமி ; அதன் பின் மரணமே இல்லை; எங்குமே இல்லை. அல்லேலூயா! யோ. 11; 25 26 ஐ வாசியுங்கள். இரண்டு விதமான கிறிஸ்தவ கூட்டம் உண்டு கிறிஸ்துவின் வருகைக்கு முன்னே மரித்து இரகசிய வருகையில் உயிர்த்தெழும் ஒரு கூட்டம். இன்னொன்று இரகசிய வருகையின் காலம்வரை உயிரோடிருந்து மரிக்காமலே மறுரூபமாகும் ஒரு கூட்டம். இந்தக் காலம் கடைசி காலமாய் இருப்பதினாலே இயேசு சீக்கிரத்தில் வரப்

போகிறார் என்று விசுவாசிப்போமானால், நிச்சயமாய் நாம் இரண்டாவது கூட்டத்தை சேர்ந்தவர்களாவோம்! இதிலே இணைந்து மறுரூபமாக விசுவாசிப்போம்! வெற்றி பெறுவோம்!

## 23. மரணம் வருவது பிசாசினாலா?

சரீர மரணத்தைக் கொடுப்பது யார்? அது எப்படி வருகிறது? எதனால் வருகிறது? இதைப் பற்றிய அறிவு நம் எல்லோருக்கும் கண்டிப்பாய் தேவை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயித்தார் என்று வேதம் கூறுகிறது (2 தீமோ. 1:10 ஏசா 25:8) அதை விசுவாசிக்கிற நாமும் கர்த்தருடைய இரகசிய வருகையிலே மரணத்தை ஜெயிப்போம் (1 கொரி. 15:55) அப்படி என்றால் இந்த மரணம் நமக்கு எதிரி - பகைவன் என்றுதானே அர்த்தம்! இந்த மரணச் சத்துருவை கடைசியில் தான் தேவன் சங்கரிப்பார். (1 கொரி. 15:26; வெளி. 20:14) இந்த மரணமாகிய சத்துருதான் பிசாசு. அவனின் வேலையே திருடுவதும் கொல்லுவதும் அழிப்பதும் தான் (யோ. 10:10) ஆனால் இயேசுவோ நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தார். எபி. 2:14 ன்படி பிசாசுதான் மரணத்துக்கு அதிகாரி என்று அறிகிறோம். இந்த அதிகாரியைத் தான் தேவன் தன் மரணத்தினாலேயே ஜெயித்தார். ஆக நாம் அறிந்து கொள்வது - மரணத்தை மனுஷருக்கு கொடுக்கிறவன் பிசாசு; அந்த பிசாசையே தேவன் ஜெயித்தார் என்று விசுவாசிக்கும் நாமும் மரணத்தினின்று விடுதலையாகிறோம். மனுஷர் அனைவருக்கும் மரணம் வருவது ஆதாம் ஏவாளின் பாவத்தினால் வந்த தண்டனையால்தான். தண்டனையை கொடுத்த தேவன் தான் அந்த தண்டனையை மாற்ற முடியும். அது வரைக்கும் மனிதன் மரித்தே ஆகவேண்டும். (எபி. 9:27). இந்தத் தண்டனை விசுவாசிகளுக்கு மாறுவது இரகசிய வருகையில்தான் என்று ஏற்கெனவே பார்த்தோம். மரணப் பிசாசை இயேசு ஜெயித்தார் என்று விசுவாசிப்போர் மரணத்தினின்று விடுதலை ஆக வேண்டுமல்லவா? பின்பு ஏன் விசுவாசியும் மரிக்கிறான். மரணம் தண்டனையாயிருந்தாலும் விசுவாசிக்கும் போது அது மாற வேண்டாமா? மாறாவிட்டால் விசுவாசிக்க வேண்டிய கட்டாயமென்ன? மரணம், என்பது வியாதியினால், வறுமையினால், கவலையினால் விபத்துகளினால் மற்றும் வேறே காரணங்களினால் வரலாம். இவைகள் எல்லாம் பிசாசின் கிரியைகள்.

இந்த பிசாசின் கிரியைகளை தேவன் அழித்து விட்டார் (1 யோ. 3:8) விசுவாசிக்கிற எவனையும் பிசாசினால் வரும் இப்படிப்பட்டதான மரணம் அணுகாது. அவனுக்கு இப்படிப்பட்ட சாவு வராது. இப்படிப்பட்ட காரியங்களால் மரணம் வரும்போதும் பல கிறிஸ்தவர்கள் தேவன் மரணத்தைக் கொடுத்து எடுத்துக் கொண்டார் என்று தவறான விசுவாசம் கொள்கிறார்கள். அதற்கு ஏசா. 57:1; யோபு 1:21 வசனங்களை உபயோகிக்கின்றனர். தவறான விசுவாசத்தால் தவறான அறிக்கையிடுகிறார்கள். தவறான அறிக்கையினாலே எல்லாம் தவறாகவே மாறிவிடுகின்றது. இதிலிருந்து விடுதலையே இல்லாமல் போய் விடுகின்றது. மேலே சொன்ன பிசாசின் கிரியைகளே இல்லாமல் மரிக்கும் மக்களைப் பற்றி என்ன சொல்வது?

முதலில் மனித சரீரத்திற்கு உயிர் இரத்தத்தில் இருக்கிறது என அறிய வேண்டும் (ஆதி. 9:4; லேவி. 17:11) தேவன் மனித சரீரத்தை மண்ணினாலே உருவாக்கி (ஆதி. 2:7) ஜீவ சுவாசத்தை நாசியிலே ஊதினார். அவரின் சுவாசத்தினாலே இரத்த ஓட்டம் இருக்கிறது; உயிர் இருக்கிறது; இந்த சுவாசத்தை தேவன் எடுத்துவிட்டால் இரத்த ஓட்டம் நிற்கிறது; உயிரற்று போகிறது. மனிதனுக்கு மட்டுமல்ல ; ஜீவராசிகள் அனைத்துக்கும் இதுவே (யோபு 33:4; 1210; ஆதி. 2:7; சங். 104: 29; எசே. 37:5; தானி. 5:23; அப். 17:25)

ஆக ஜீவ சுவாசத்தை தேவன் எடுக்கும் போது மரணம் வருகிறது (இயேசு தன்னுடைய சுவாசத்தை தானே விட்டார் - யோ. 19:30). பிசாசின் கிரியைகளினாலேயும் இரத்த ஓட்டம் தடைபட்டு மரணம் வருகிறது. தேவன் மனிதனைப் படைத்ததன் நோக்கமே பக்தியுள்ள சந்ததியைப் பெற்று லூசிபர் இருந்த இடத்திலே மனிதனை வைக்க வேண்டும் என்பது தான் (மல்கி. 2:15; எபே. 2:7). பிறந்த மனிதர் எல்லாருமே மரிக்காமல் பூமியில் இருந்தால் பூமி இடங்கொள்ளாது. எல்லா மனிதனுமே தேவ பிள்ளையாய் மாறாததால் அவர் எதிர்பார்த்த மக்கள் கூட்டம் கிடைக்காமல் போய்விடும். எனவே தான் தேவனும் சங். 91: 16ன்படி நீடித்த நாட்களால் விசுவாசியை திருப்தியாக்கி அவரின் இரட்சிப்பை பாதுகாப்பை விடுதலையை அவனுக்குக் காட்டி அவனின் சுவாசத்தை எடுத்து விடுகிறார். இப்படிப்பட்ட மரணம் தான் நீதிமானின் மரணம், தேவன் கொடுக்கும் மரணம்; அவர் விரும்பும் மரணம். மற்றப்படியான மரணமெல்லாம் பிசாசின் மரணம். இந்த பிசாசின் மரணத்தின் மேல் நமக்கு அதிகாரமுண்டு. இப்படிப்பட்ட மரணம் கிறிஸ்துவினிமித்தம் இரத்த சாட்சியினிமித்தம் வரலாமே ஒழிய மற்றப்படி அல்லவே அல்ல! தேவனிடத்திலும் சங்கார தூதன் இருப்பதால் பிசாசின்

மரணத்திற்கேதுவான கிரியைகளினூடேயே தேவன் அவன் மூலமாய் தம்முடைய சரித்திர நியாயத் தீர்ப்பை உலக மக்கள் காணும்படியாய், வெளிப்படையாய் மரணத்தைக் கொடுப்பார் என்றும் அறியுங்கள் (யாத். 12:13; 11 நாளா. 21:14, 15, 18, 19,; 11 சாமு. 12:15). இதைப் படிக்கும் தேவ பிள்ளையே உனக்கு எப்படிப்பட்ட மரணம் தேவை? இன்றே தீர்மானி! மரணமில்லாமல் அவர் வரும் வரை உயிரோடிருக்க ஆயத்தமா? கர்த்தருக்கு தோத்திரம்!

## 24. மரணம் நேரிடுவது தெரியுமா?

தேவனுடைய பிள்ளைகளுக்கு மரணம் நேரிடுவது நிச்சயமாய்த் தெரியும், ‘‘நாமெல்லாரும் நித்திரையடையப் போவதில்லை’’ (1 கொரி. 15:51) என்ற இரகசியத்தைச் சொன்ன பவுல் ‘‘நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது’’ (2 தீமோ. 4:6) என்று தனது மரணத்தைப் பற்றித் தெரிந்தவனாகச் சொல்கிறான். பேதுருவும் ‘‘நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடும்’’ என்று அறிந்து 2 பேதுரு 1:13-ல் சொல்கின்றான். யாக்கோபும் தன் சாவை முன் கூட்டியே அறிந்தவனாய் தன் பிள்ளைக்களுக்குண்டான தீர்க்கதரிசன வார்த்தைகளை உரைக்கிறான், மரணத்தின் அதிபதியாகிய பிசாசை (எபி. 2:14) வென்ற இயேசு கிறிஸ்து கூட’’ இதோ மனுஷகுமாரன் பாவிகளுடைய கையில் ஒப்புக் கொடுக்கப்படுகிற வேளை வந்தது (மத். 26:45) என்று தன் மரணத்தை அறிந்தவராய்ப் பேசினார். ஆக, நமது சரீரம் தேவனுடைய ஆலயமானால், தேவனால் கிரயத்திற்கு கொள்ளப்பட்டிருந்தால் (1 கொரி. 6:19,20) நமக்குள் இருப்பவர் உலகத் திலிருக்கிறவனிலும் பெரியவராய் இருப்பதால் (1 யோ. 4:4) நிச்சயமாய் நமது மரணம் நமக்குத் தெரிந்தே ஆகும். நமக்குத் தெரியாமல் ஒன்றும் நடக்காது. எனவே மரண இருளின் பள்ளத் தாக்கிலிருந்து பயந்து கொண்டிருந் தாயானால் பயப்படாதே; உனக்குத் தெரியாமல் மரணம் உன்னை மேற் கொள்ளாது. இது உறுதி, அல்லேலூயா. ஆதி. 18:18 ல் ஆபிரகாமுக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் நமக்கும் உண்டல்லவா?

# 25. மரணத்திற்குப் பின்னும் வாழ்வா?

மரணத்தைப் பற்றி கலங்காதே! மரணத்திற்குப் பின்னும் வாழ்வு உண்டு என்று வேதம் கூறுகிறதை அறியாயோ! இயேசு "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்" (லூக். 9 :60) என்றாரே யார் இந்த இருவகையான மரித்தோர்? சரீர மரணத்தில் உள்ளவர்களை அடக்கம் செய்யும் மரித்தோர் யார்? லூக். 15:24, 32 வசனங்களில் சொல்லப்பட்டபடி, கெட்ட குமாரன் மரித்தானா? எப்படி?

"அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி. 2:17) என்று தேவன் ஆதாமிடம் சொன்னாரே; அந்தப்படி அவன் மரித்தானா? தேவன் சொன்னது பொய்யாகுமா? மரித்தோரை விட்டு எழுந்திரு என்று எபே. 5:14ல் பவுல் சொல்கிறாரே யார் இந்த மரித்தோர்? எபே. 2:1, 5 வசனங்களை உற்று நோக்கும் எந்த ஒரு இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைக்கும், இந்த மரணம் என்ன என்று தெரியும்! அது தான் ஆவிக்குரிய மரணம். தேவன் ஆவியாயிருப்பதால் மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள தொடர்பு மனிதனுடைய ஆவியின் மூலம் மட்டுமே! உலகத்திலுள்ள எந்த ஜீவராசிக்கும் இப்படிப்பட்ட ஆவி இல்லாததால் அவைகள் தேவனை அறிவதில்லை; தொடர்பு கொள்வதில்லை. ரோ. 1: 21ல் சொல்லப்பட்டபடி மனிதனின் இருதயம் - ஆவி இருளடைந்தது: அவன் ஆவி மரித்தது; தேவ சமூகத்தை விட்டு விலகினான்; பாவம் செய்த ஆதாம் - ஏவாளைப் போலானான். இது தான் ஆவியின் மரணம். இந்த ஆவிக்குரிய மரணத்திற்குப் பின்னும் மனிதன் வாழ்கிறானா? ஆம்! வாழ்கிறான்! அதுதான் நாம் இரட்சிக்கப்படாததற்கு முன்னிருந்த நிலை. ஆக, கண் கூடாகவே ஆவிக்குரிய மரணத்திற்குப் பின்னும் வாழ்வு உண்டு என்று உணரும் போது நமது சரீர மரணத்திற்குப் பின்னும் வாழ்வு இருக்க வேண்டுமல்லவா?

"தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு அதிக ஆசையுண்டு;" - பிலி. 1:23-24; 2 கொரி. 5:7-8, 2 தீமோ. 4:6-7.

"நான் என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரம் நேரிடும்" (2 பேதுரு 1:13) போன்ற வசனங்களின்படி, இந்த சரீரமாகிய கூடாரத்தை விட்டுப் பிரிந்து "நான்" தேவனோடு வாழுவேன் என்று விளங்குகிறதல்லவா! இன்னும் விளக்கமாய் சொல்கிறேன். கேளுங்கள்.

"நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன். தேவன் மரித்தோருக்கு தேவனாய் இராமல் ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார்." (மத். 22:31-32). ஆபிரகாம்

ஈசாக்கு, யாக்கோபு எல்லோரும் சரீர மரணமடைந்தார்கள். ஆனாலும் அந்த சரீர மரணத்திற்குப் பின்னும் அவர்கள் வாழ்வதால்தான், தேவன், ஆபிரகாமின் தேவன் என்று சொல்லப்பட்டு, ஜீவனுள்ளோருக்கு தேவனா யிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறதல்வா? மேலும் வெளி. 6:9-11ன்படி சரீர மரணமடைந்தபின் பரலோகில் தேவனோடு இருந்து சத்தமிடும் பரிசுத்தவான்கள் வாழ்வுடன் இருக்கிறார்கள் என்று புரிகிறதல்லவா! லூக் 23 :43 போன்ற வசனங்களின்படி சரீர மரணமடைந்த இயேசுவுக்கும். கள்ளனுக்கும் வாழ்விருந்ததாய் உணர்கிறோமல்லவா! பாதாளத்திலும், பரதீசிலும் மரித்தவர்கள் ஜீவனோடுதான் உள்ளனர். ஆனால் பரதீசில் உள்ளோர் நித்திய ஜீவனோடு உள்ளனர்; பாதாளத்தில் உள்ளோர் நித்திய அழிவில் உள்ளனர். (சங். 115: 17; 6:5)

“அந்த பாதாளத்திலே அவர்கள் இரட்சிக்கப்பட எந்த ஒரு செய்கையும், வித்தையும் ஞானமும் இல்லை. இரட்சிக்கப்பட்ட சரீரத்தோடே இந்தப் பூமியிலேயே, பெலத்தோடே செய்” என்று பிர. 9:10 சொல்கிறது. ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது மட்டுமே தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2 கொரி. 5:10). புது உடன்படிக்கைக்குரிய தேவ பிள்ளைகள், பவுலும் பேதுருவும் சொன்னபடி தேகத்தை விட்டுப் பிரிந்து அதாவது சரீர மரணத்திற்குப்பின் கிறிஸ்துவோடே வாழ்வோம்! அல்லேலூயா! கர்த்தருக்கு தோத்திரம்!

மேலும் லூக். 16ல் சொல்லப்பட்ட லாசரு - ஐசுவரியவான் தொடர், சரீர மரணத்திற்குப் பின்னும் உள்ள வாழ்வை தெரிவிக்கிறது. 2 கொரி. 12:1-4ன் படி இந்த உலகை விட்டுப் பிரிந்தாலும் அத்தோடு எந்த முடிவும் இல்லை; தொடர் உண்டு என்று விளங்குகிறதா? சரீர மரணமடைந்த இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைகளும் பரலோகில் ஒரே குடும்பமாய் இருக்கின்றனர் என்று எபே. 8:11 எபி. 12 : 22-24 போன்ற வசனங்கள் சொல்லவில்லையோ? வேதத்தில் **இன்னொரு மரணமும் சொல்லப்பட்டிருக்கிறது அது தான் இரண்டாம் மரணம்.** ஆவிக்குரிய மரணத்திற்குப் பின்னும் சரீரமரணத்திற்குப் பின்னும் வாழ்வு உண்டென்றால், இந்த இரண்டாம் மரணத்திற்கு பின்னும் வாழ்வு உண்டல்லவா? ஆம்! அந்த வாழ்வு எங்கே? அக்கினியும் கந்தகமும் எரியும் அக்னிக் கடலிலே! அது உண்மையா? “மோசம் போக்கின பிசாசானவன் மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியும் இருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமும் எரியும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்; அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்” - வெளி. 20:10

இந்த அந்திக் கிறிஸ்துவும் கள்ளத் தீர்க்கதரிசியும் 1000 வருடத்திற்கு முன்பிருந்தே இந்த நரகத்தில் இருக்கிறார்கள் (வெளி. 19:20) 1000 வருடமாய் சாத்தானுக்கு ஆயத்தமான நரகத்தில் (மத். 25:41) இருந்ததினால், என்றென்றும் அங்கேயே வாதையில் இருக்க முடியும்; இருப்பார்கள் என்பது வெள்ளிடைமலை.

"அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்" - மத். 25 : 46.

நீதிமான்களுக்கு என்றென்றும் நித்திய ஜீவன்; பாவிகளுக்கு என்றென்றும் நித்திய ஆக்கினை. (மாற். 9:43 - 48).

# 26. பரிசுத்தமானவர்களுக்கு அகால மரணம் ஏன்?

"இந்த ஊழியர் தேவ தரிசனமில்லாமல் செயல்பட்டார்; தரிசனம் நிறைவேறாமலே வியாதி வந்து மரித்து போனார்" என்று சொல்பவர்களும் உண்டு. ஆபிரகாமுக்கும் மோசேக்கும் தேவன் சொன்ன தரிசனம் நிறைவேற வில்லையே. அவர்கள் வியாதிப்பட்டு மரித்தார்களா? (ஆதி. 17:8, எண். 20:12) "தேவ அழைப்பை மீறினார்; செய்த பிரதிஷ்டையை மாற்றினார்; கொள்கையை மாற்றினார்; அதனால் தான் மரித்துப் போனார்" என்போரும் உண்டு. அப்படியென்றால் அது சரித்திர நியாயத்தீர்ப்பு; அனனியா - சப்பிராளுக்கு வந்தது போல. அது உடனடியாக அல்லவா வந்தது! வருடங்கள் பல கழிந்து வரவில்லையே! இப்படி பிரதிஷ்டையை மாற்றிய எத்தனையோ பேர் இன்னும் மரிக்கவில்லையே! "இவர் பாவி! தன் பாவத்தால் அகால மரணமடைந்தார்" என்போரும் உண்டு. அப்படி என்றால் உலகிலுள்ள எல்லோருமே மரித்திருக்க வேண்டுமே! காரணங்கள் என்ன என்று தெரிந்து கொள்வோம்.

மனிதனுக்கு தேவனோடு "Sonship" (புத்திர சுவீகாரம்) "Fellowship" (ஐக்கியம்) என்று இரண்டு உள்ளன. மரணத்துக்கு ஏதுவல்லாத உலகப் பிரகாரமான பாவங்கள் ஏதும் செய்யும் போது, மனிதனின் 'Fellowship' போய் விடுகின்றது. எனவே பிசாசானவன் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்களின் சரீரத்தை நோய், விபத்து

போன்றவற்றால் தாக்குகிறான். (யாக். 5:14-15). ஆனாலும் இவர்கள் பரலோகம் போவதில் தடையில்லை, ஏனெனில் Sonship இருக்கிறதே!.

தேவன் சொல்லுகிறார், "நீ சொல்லுகிறபடியே உனக்கு ஆகும்" என்று. நாவினாலே, ஜீவனும் உண்டு; மரணமும் உண்டு. பரிசுத்தவான்களாகிய நடராஜ முதலியார், ஐஸ்டின் பிரபாகரன் போன்றோர் கிறிஸ்துவுக்காய் மரிக்கப் போகிறேன் என்று பாடினார்கள்; சொன்னபடியே சீக்கிரத்தில் மரித்து விட்டார்கள்.

நாம் சாப்பிடுகிற அப்பத்தையும் தண்ணீரையும் தேவன் ஆசீர்வதிக்க சொல்லாமல் சாப்பிட்டால் வியாதி வரும்; மரணம் வரும். (யாத். 23:25)

மனுஷனுக்கு வயதாக, வயதாக பலவீனம் (வியாதி) வந்தால், அது தன் பெலத்தின் குறைச்சலாலே அன்றி, வேறொன்றாலும் அல்ல, ஈசாக்கு கண் தெரியாமலே மரித்தானே; தாவீது வியாதியோடு மரித்தானே!

3 யோ. 2ன்படி நாளுக்கு நாள் மறுரூபம் ஆக வேண்டிய ஆத்மா செழிப்பில்லையேல், தெய்வீக ஆரோக்கியம் குறைபடுகின்றது; வியாதி தொடுகின்றது.

1 கொரி. 11:29-30ன் படி அபாத்திரமாய் திருவிருந்து ஆராதனையில் பங்கு பெற்றால் வியாதி தொடரும்; அகால மரணம் வரும்.

இருதயக் கவலையினால் "Heart - Attack" வரலாம்; வியாதி வரலாம் (சங். 32:3, பிலி. 4 : 4) அகால மரணம் வரலாம்.

வாரம் ஒரு முறையாவது ஓய்வு வேண்டும் என்று தான் தேவன் இஸ்ரவேலருக்கு ஓய்வு நாளை கட்டளையிட்டார். (உபா. 5; 15) ஆக ஊழியத்தில் வேலைகளில் ஓய்வு கண்டிப்பாய் தேவை. தேவன் படைப்பிலேயே ஓய்ந்திருந்தார். (ஆதி. 2:2) இயேசுவும் ஓய்ந்திருந்தார் (மாற். 6:31) ஆகவே ஓய்வே இல்லாததால் வியாதி சூழ்ந்து கொள்ளும்; அகால மரணம் வரும்.

பிசாசானவன் பரிசுத்தவான்களைப் பற்றி தேவனிடம் குற்றம் சாட்டுவதால் தேவன் நீதிபரராய் இருந்து விடுகிறார். (வெளி. 12;10) அதனால் கிருபையும், ஆசீர்வாதமும் பல வேளைகளில் இல்லாமல் போகின்றது. இதனால் பரிசுத்தவான்களை கொல்ல, பிசாசு, வியாதி போன்றவைகளை கொடுத்து அகால மரணம் தருகின்றான். (வெளி. 12:10)

பிசாசின் சோதனையை தாங்க போதிய விசுவாசம் இல்லையேல் விசுவாசக் குறைவினாலேயே (1 கொரி. 10:13) பிசாசு, வியாதியை தருவான்; அகால மரணம் தருவான்.

சில சமயங்களிலே ஏனோக்கு, எலியா, இயேசு, ஸ்தேவான், யோவான் ஸ்நானன் போன்ற தேவ பிள்ளைகள் இத்தனை வருஷம் தான் வாழுவார்கள் என்ற தேவ திட்டம் நிறைவேறும் போது, மரணத்துக்கு அதிபதியாகிய பிசாசு காரியமாற்றாமல், தேவனே அவர்கள் ஆவியை எடுத்துக் கொள்ளுகிறார். இப்படி எத்தனையோ காரணங்களால் பரிசுத்தவான்கள் வியாதிப்படுகின்றனர்; அகால மரணம் அடைகின்றனர். ஆதலால் அவர்களின் சாவை வைத்து யாரையும் எடை போடாதீர்கள். இயேசுவும், மனம் மாறாத கள்ளனும் ஈனச் சிலுவையில் அகோர மரணமடைந்தார்கள். இதனால் இயேசுவும் கள்ளனும் ஒன்றாகுமா? பரலோகிலே மூன்று அதிசயங்கள் காணப் போகிறோம். (1) யார் யாரெல்லாம் பரலோகம் வருவார்கள் என்று நினைக்கிறோமோ அவர்கள் எல்லாம் பரலோகில் இருக்க மாட்டார்கள். (2) யார் யாரெல்லாம் வரமாட்டார்கள் என்று நினைக்கிறோமோ அவர்கள் எல்லாம் வருவார்கள். (3) பாவிகளாகிய நாம் அங்கே இருப்போம்.

எனவே பரிசுத்தவான்களின் வியாதியையோ, மரணத்தையோ பார்க்காமல் அவர்கள் சொல்லிக் கொடுத்த சத்தியத்தை தொடர்ந்து கடைப் பிடிக்க தெரிந்து கொள்ளுங்கள்.

இயேசு சீக்கிரம் வருகிறார்!<br>
ஆயத்தமாவோம்!!<br>
ஆயத்தமாக்குவோம்!!!<br>
ஜெபியுங்கள்! ஜெபிக்கிறேன்<br>
விசுவாசம் வெற்றியைத்தரும்

## 27. கிறிஸ்தவனே! வியாதி ஏன் உன்னை விட்டு விலகவில்லை?

தேவனுடைய பிள்ளையே! பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வியாதியிலிருந்து விடுதலையாகாமலே தவிக்கிறார்கள் ஏன்? வரும் முன் காக்கவும் தெரியவில்லை; வந்த பின்னும் விடுதலை பெறவும் தெரியவில்லை. வியாதி வந்த உடனே ஏதோ ஒரு ஊழியக்காரரைத் தேடி ஓடுகிறாயே ஏன்? அவரும் நீயும் ஒரே அப்பாவுக்குத் தானே பிறந்திருக்கிறீர்கள்? ஒரு கண்ணுக்கு வெண்ணையும் ஒரு கண்ணுக்கு சுண்ணாம்புமா அந்த அப்பா, வைப்பார்?

ஒருவேளை உனக்கு விசுவாசக் குறைவு, என்றால், சபை மூப்பரை வரவழைத்து எண்ணெய் பூசி ஜெபிக்கும்போது, விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்குமல்லவா! (யாக். 5. 14-16) உன் வியாதிக்குக் காரணம் பாவமென்றால் பாவம் மன்னிக்கப்பட்டு சுகமாகுமே! உனக்கு ஏன் சுகமாகவில்லை? சாபமா? பிசாசின் பொல்லாத கிரியையா? உன் சாபமெல்லாம் இயேசு சிலுவையில் சுமந்து விட்டாரே! விசுவாசித்து அறிக்கையிடு! பிசாசை எதிர்த்து நிற்கத்தக்கதான சர்வாயுதவர்க்கங்கள் உன்னில் இல்லையோ? உன்னையே நீயே சோதித்துப்பார்.

வார்த்தையாகிய தேவன் உனக்குள் இருக்கிறாரா? இருந்தாரானால் அவரால் உன் வியாதியை சுகமாக்க அவருக்கு வல்லமையில்லையா! அல்லது அவரை சுகமாக்க நீங்கள் விடவில்லையா? அல்லது வியாதியை சுகமாக்கும் நம் தேவன் உங்களிடம் இல்லையா? **இந்த கேள்விகளுக்கு பதில் சொல்லிப் பாருங்கள் விசுவாசம் வளரும்.** வசன விவாசம் இருந்தால் தானே மாற். 11:23ஐ விசுவாசிக்க முடியும்! நூற்றுக்கதிபதி சொன்னான்:- “நான் ஒருவனைப் போ என்றால் போகிறான்; வா என்றால் வருகிறான்; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்” (மத். 8:8.9). இதன் பொருள் என்ன? என்ன மாதிரியெல்லாம் உலக அதிகாரம், வல்லமையிருந்தாலும், அவனது வேலைக்காரனின் வியாதி அவனுக்கு கீழ்ப்படியவில்லை; இயேசுவின் வார்த்தைக்கு மாத்திரமே வியாதி கீழ்ப்படிந்து விலகிப்போகும் என்று அவன் விசுவாசிக்கிறான். தேவ பிள்ளையே! உனக்கு தேவன் அதிகாரங்களை அள்ளி அள்ளி கொடுத்திருக்கிறார் என்பதை விசுவாசிக்கிறாயா? வியாதியஸ்தர்மேல் கரங்களை வைத்தாலே வியாதி சுகமாகத் தக்கதான அதிகாரம் ஊழியக்காரனுக்கு அல்ல... விசுவாசியான உனக்கே உண்டே (மாற். 16:17) பின் ஏன் வியாதி விலகவில்லை? “வியாதியிலிருந்து விடுதலையாக தேவனுக்கு சித்தமில்லை போலும்” என்று அவிசுவாச அறிக்கையிட்டு உன்னை நீயே திருப்திபடுத்திக் கொள்கிறாயா? நம் தேவனால் தீர்க்க முடியாத வியாதியும் உண்டோ? எனக்கு, சுத்தமாக்க சித்தமுண்டு என்று சொன்ன இயேசுவின் வார்த்தையை குஷ்டரோகி புரிந்து கொண்டு சுகம் பெற்றான். நீ ஏன் இப்படி?

மத். 24:34 - ல் இயேசு தொட்ட உடனே சுகமானான்; ஆனால் மாற். 8.23-25லே உடனே சுகமாகாமல் கொஞ்சம் கொஞ்சமாய் பார்வை கிடைத்தது. குஷ்டரோகி ஒருவனை தேவன் தொட்ட உடனே சுகமானான்; இன்னொரு இடத்தில் 10 பேரையோ ஆசாரியனிடத்தில் காட்டு என்றார்; போகிற வழியிலே சுகமானார்கள். மரித்த சிறுமியை தொட்டு உயிர்ப்பித்தார்; பாடையில் இருந்தவனை தொடாமல் பாடையைத் தொட்டே உயிர்ப்பித்தார்; கல்லறையில் இருந்தவனை எதையும் தொடாமல் வார்த்தையினாலே

உயிர்ப்பித்தார். எனவே தேவன் சுகமாக்குவதற்கு இலக்கண வரைமுறை எல்லாம் இல்லை. ஒன்று மட்டும் நிச்சயம்:- அவர் நமக்கு சுகமளிக்க சித்தமாயிருக்கிறார். அதனால்தானே நம்முடைய வியாதியை எல்லாம் அவர் சுமந்தார் (ஏசா. 53). அவர் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது; நமக்குத் தேவை விசுவாசமே! விசுவாசத்தால் மாத்திரமே தேவனின் மகிமையை காண்போம். தானியேல் ஜெபித்து பதில் வர 21 நாட்கள் ஆயிற்று. ஆனாலும் அவனுக்குள் விசுவாசமிருந்தது; பதில் வந்தது. ஆமென். கனி கொடாத அத்தி மரத்தை இயேசு சபித்தார்; மத். 21:19-ன் படி அன்றே அது பட்டுப்போயிற்று. ஆனால் சீஷர்கள் மறுநாள் தான் கண்டு அறிவிக்கிறார்கள். (See மாற். 11:13, 14.22-24) அதற்கு இயேசு சொன்னதைப் பாருங்கள். இயேசுவின் வார்த்தை புறப்பட்ட அன்றைக்கே அந்த மரம் பட்டுப்போனதை அவர்கள் விசுவாசிக் காததால் அறியவில்லை. அப்படித்தான் தேவபிள்ளையே! என்றைக்கு இயேசுவின் தழும்புகளால் சுகமானேன் என்று தேவனுடைய வார்த்தையை அறிக்கையிடுகிறாயோ அன்றே உனக்கு சுகமாகிவிட்டது. எப்படி? நம் ஊரில் திருமணம் போன்ற விழாக்களில் வாழைமரம் கொண்டு வந்து வைப்பார்கள் அல்லவா! மரம் இலைகளோடு பசுமையாகத்தான் இருக்கும். ஆனால் அதன் வேர் வெட்டப்பட்டாயிற்று; அதற்குள் ஜீவனில்லை. இரண்டு நாள் கழித்தே அது காய்ந்து போய் உலகுக்குத் தெரியும். அப்படித்தான் நீ விசுவாசித்து அறிக்கையிட்ட அன்றே வியாதியின் ஆணிவேர் அறுபட்டுப் போயிற்று என்று விசுவாசி. பசுமையான இலை இருப்பதுபோல வியாதி தென்பட்டாலும், சபிக்கப்பட்ட அன்றே, விசுவாசித்த அன்றே வேர் பிடுங்கப்பட்டது. விசுவாச அறிக்கை செய்ய செய்ய வெளியரங்கமாய் சுகமான மகிமை வெளிப்படும்.

வியாதியே வராமல் சுகமாயிருக்க வேண்டுமென்பதே தேவசித்தமாய் இருக்கும் போது (3. யோ 2) வந்தவியாதி நீங்காமல் வியாதியோடு மரிப்பது தேவ சித்தமாயிருக்குமா? நிச்சயம் இருக்காது. **வியாதியில் மரித்துப் போன ஊழியக்காரர்களை பார்க்காதே!** எபி. 12:1ன் படி நமக்கு வழியான இயேசுவை நோக்கியே பார்! அவர் என்றாவது வியாதிப்பட்டாரா? வியாதியே வராமல் (சங். 91:10) வாழ்வதை விட்டு விட்டு, வந்த வியாதி போகாது என்ற அவிசுவாச எண்ணத்தை எப்படி பிசாசு பெந்தகொஸ்தே வட்டாரத்தில் விதைத்தான்? இதை வாசிக்கும் தேவபிள்ளையே! வசனத்தை விசுவாசித்தால், விலகாத வியாதி ஒன்றுமில்லை; அதிகாரம் உன் கையிலே! நீயே விரட்டு இயேசுவின் நாமத்தினாலே! அதற்கு வல்லமையும் தேவை. அது ஆவியின் வல்லமை! உபவாசமிருந்து ஜெபித்து ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொண்டு, வசன விசுவாச அறிக்கையிட்டு, வியாதிப்பிசாசை விரட்டு! (மத். 7:21) வெற்றி உனதே!

# 28. பெலவீனமும் நோயும் ஒன்றா?

பெலவீனம் என்றால் ‘infirmity’ என்றும் நோய் என்றால் “Sickness” என்றும் ஆங்கிலத்தில் உள்ளது. பெலவீனம் என்றால் “சக்தி குறைவு; திராணி குறைவு; சிந்தனை குறைவு; தாலந்து குறைவு; விசுவாசக் குறைவு; வல்லமை குறைவு; வனப்பு குறைவு” என்று பலவாறாகச் சொல்லலாம். இந்த பெலவீனத்தால் துக்கங்கள் - கவலைகள் வரலாம் (Sorrows) தேவன் இப்படிப்பட்ட எல்லா துக்கங்களையும் சிலுவையிலே சுமந்து தீர்த்தார். (ஏசா. 53:4) கிதியோனுக்கு சரீரத்தில் பெலவீனமிருந்தது; மீதியானியரை முறியடிக்கத்தக்கதான பலம் இல்லை, ஆனாலும் அவன் மூலமாய் மீதியானியரை முறியடிக்க எண்ணிய தேவன், அவனை அழைக்கிறபோதே. அவனுக்கு விசுவாசம் வரும்படியாய் “பராக்கிரமசாலியே! கர்த்தர் உன்னோடிருக்கிறார்” என்றார். அவனோ ஆவிக்குரிய ரீதியில் தேறினவனாய், “கர்த்தர் எங்களோடிருந்திருந்தால் இவையெல்லாம் நேரிடுவானேன்?” என்று கேட்கிறான். ஆக கர்த்தர்கூட இருந்தால் நிச்சயம் பெலன் வரும்; மீதியானியரை ஜெயிக்க முடியும் என்று நம்பியிருக்கிறான். இதை அறிந்த தேவன், “உனக்கு இருக்கிற பெலத்தோடே போ உன்னை அனுப்புகிறவர் நானல்லவா!” என்று சொல்கிறார். (நியா. 6:12-4). அப்படியே அவன் சென்றான்; வென்றான். அல்லேலூயா! எந்த பெலவீனமாயிருந்தாலும் சரி, கர்த்தர் நம் பக்கத்திலிருக்கும் போது நம் பலன் பூரணமாய் விளங்கும், ஆமென்! மத். 8:17ஐ வாசியுங்கள் “அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார்” என்று உள்ளது. ஆக, பெலவீனம் வேறு; நோய் வேறு என்று அறிகிறோமல்லவா! தேவன் இரண்டையுமே தீர்த்தார். அல்லேலூயா! லூக். 5:15, 21; 8:2 போன்ற வசனங்களை ஆங்கிலத்தில் வாசித்தால், இயேசு நலமாக்கியதெல்லாம் நோயல்ல என்றும், பெலவீனங்களே (infirmities) என்றும் அறியலாம். 18 வருஷமாய் பெலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ இருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக் கூடாத கூனியா யிருந்தாள். இயேசு அவளைக் கண்டு “ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்” என்று சொல்லி, அவள் மேல் தமது கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினாள் (லூக். 13:11-13) இதுவும் வியாதி அல்ல என்றும், பெலவீனத்திலிருந்து விடுதலை என்றும் அறிகிறோம். 38 வருஷம் பெலவீனமாயிருந்த மனுஷன் சுகமானான் (யோ. 5:5 in English) ஆக பெலவீனம் வேறு, நோய் வேறு

என்று அறிகிறோம். கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது என்ற சங். 103:5, நமது பெலவீனத்திலிருந்து கிடைக்கும் விடுதலையைக் குறிக்கிறது. சரீரம் செத்துப் போன ஆபிரகாமுக்கு குழந்தையைக் கொடுத்தது இந்த வசனப்படி தானே! தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ள வார்த்தை; ஜெயம் தரும் வார்த்தை.

இது குறித்து இன்னும் விளக்கமாய்ப் பார்ப்போம். ரோ. 8:26; 14:1; 15:1 ன் படி பரிசுத்த வான்களுக்கும் பெலவீனம் உண்டு என அறிகிறோம். விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல ஆசாரியர்களுக்கும் பலவீனம் உண்டு என்று எபி. 5:12; 7;28 மூலம் அறிகிறோம். ஆனால் இது வியாதி அல்ல. இயேசு கூட பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தார் (2 கொரி. 13:4); ஆனாலும் மனிதனாய் இருந்த தனது சரீர பெலவீனத்தால் கூடாமல், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருந்தார். அல்லேலூயா! இது வியாதி அல்ல. அப்படியே பவுலுக்குள்ள முள்ளை வாசியுங்கள். (2 கொரி. 12:5-10). இந்த முள் பவுல் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட பரதீசின் வெளிப்பாட்டால் மேன்மை பாராட்டி, கிறிஸ்தவர்களை ஆதாயப்படுத்தாத படிக்கு அவனுக்கு எதிரே சாத்தானால் கிளம்பி விடப்பட்ட சரீரப் பிரகாரமான எதிரிகள் என்று இதே நூலில் எழுதியிருக்கிறேன். (Refer எண் 33:35; யோசு. 23:13; எசே. 28:24). எதிரிகளை எதிர்த்து நிற்க சரீரத்தில் பவுலுக்கு பலவீனம். எனவேதான் கிருபை உனக்குப் போதும்; பெலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும்; என்று தேவன் சொன்னார். ஆக இது நோய் அல்ல என்று புரிகிறதல்லவா! மேலும் பவுலைப் பற்றிய 2 கொரி. 11:24 - 30; கலா. 4:13 போன்றவைகளெல்லாமே நோய்கள் பற்றியது அல்ல என்றும், சரீர பலவீனம் என்றும் முந்தி அறிக, இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! சரீரத்திலோ, ஆத்மாவிலோ, ஆவியிலோ ஏற்படுகிற Weakness (வீக்னஸ்) எல்லாமே பெலவீனந்தான். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நோய்களை மாத்திரம் சுமந்து தீர்க்கவில்லை; நம்முடைய பலவீனங்களையும் சிலுவையிலேயே சுமந்து தீர்த்தார். என்று அறிகிறோம்! அல்லேலூயா! இதை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் இனி பலவீனமுமில்லை; வியாதியுமில்லை. அப்படியே ஆவியிலோ, ஆத்மாவிலோ சரீரத்திலோ எதிலே இருந்தாலும் தேவ கிருபையால் நம் பெலவீனம் பூரண பலமாய் மாறும்! அல்லேலூயா! இன்று முதல் பெலவீனத்தை, வியாதி - நோய் - என்று சொல்லாதிருப்போமாக! ஆமென்.

# 29. இரட்சிக்கபட்டவர்களுக்கு பரம்பரை வியாதிகள் தொடருமா?

சர்க்கரை வியாதி, மாரடைப்பு போன்ற வியாதிகளெல்லாம் பரம்பரையாக வரும் வியாதிகள் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். அப்படியே முகக்கூறு, உடல் வாகு, குணங்கள், நடை உடைபாவனைகள் எல்லாமே பரம்பரை பரம்பரையாய் இருப்பதை நாம் கண் கூடாகக் காண்கிறோம். தாயைப் போல பிள்ளை என்றும் அப்பாவை அச்சடிச்ச மாதிரி பிறந்திருக்கிறான் என்றும் சொல்வதைக் நாம் கேட்டிருக்கிறோம். முதல் மனிதன் ஆதாம்கூட தன் சாயலாக, தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்றான் என்று ஆதி. 5:3 சொல்கின்றது. கறுப்பு, சிவப்பு, அங்க அமைப்பு, பேச்சு, கண் அசைவு, எல்லாமே வழிவழியாய் வருகின்றது. இப்படியாய் பரம்பரை அம்சங்களோடே பிறக்கின்ற மனிதன், ஜலமாகிய வசனத்தில் ஆவியானவரின் உந்துதலால் இயேசு கிறிஸ்துவை ஆண்டவரென்றும், இரட்சகரென்றும், இருதயமாகிய ஆவியிலே விசுவாசத்து, மறுபிறப்படைந்து, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று இரட்சிக்கப்படுகிறான் (யோ. 3:3;5; ரோ. 10:9,10; அப்; 2:38, 1 பேதுரு 1:23; 1 கொரி. 6:11) இரட்சிக்கப்படும்போது அவனது இருதயமாகிய ஆவி தான், புது சிருஷ்டியாக மாறுகிறதே ஒழிய (2 கொரி. 5:17; எபே. 3: 25, 26), மனம் - உள்ளம் - சிந்தனை என்கின்ற ஆத்மாவோ, சரீரமோ புது சிருஷ்டியாகிறதில்லை. ஆவியிலே இருந்த பாரம்பரியக் காரியங்கள் தேவனுக்கு விரோதமான பிசாசின் காரியங்கள் மட்டுமே அழிக்கப்பட்டிருக்கிறது. ஆத்மாவிலும் சரீரத்திலும் உள்ளவைகள் அப்படியேதான், பரம்பரை வியாதிகள், குணங்கள் போன்றவைகளோடு இருக்கின்றன. இந்த மனமாகிய ஆத்மா தேவனுடைய வசனத்தினாலேயே தினந்தோறும் மறுரூபமாகிக் கொண்டேயிருக்கிறது. புது சிருஷ்டியாகிக் கொண்டேயிருக்கிறது. (ரோ. 12:2; யாக். 1:21). இந்த ஆத்மா, ஆவியில் எழுதப்பட்ட வசனப்படியே செயல்படும் போதுதான் இப்படிப்பட்ட மாற்றங்கள் உருவாகின்றன. இது இயேசு வரும் வரைக்கும் நடக்கும் (1 தெச. 5:23). மறுரூபமாகிக் கொண்டிருக்கிற ஆத்மா, ஆவியிலே எழுதப்பட்ட வசனப்படி (எபி. 8:10; யாக் 1:2) நடக்கும் போது, சரீரச் செயல்கள் மாறுகின்றன. இந்த சரீரம் முழுமையாய் மறு ரூபமாவதும். புது சிருஷ்டியாவதும் அவரது வருகையில் தான் (ரோ. 8:23).

இந்த நிலையில் நாம் சங். 91:10ன் படி "வியாதி என்னை அணுகாது; இது தேவசித்தம்" என்று அறிக்கையிடுகிறோம்; "இந்த சரீரம் தேவனுடைய

ஆலயம் இதை ஒருவன் கெடுத்தால் தேவன் கெடுப்பார்; பிரியமானவனே! உன் ஆத்மா வாழ்வது போல எல்லாவற்றிலும் வாழந்து சுகமாயிருப்பாய்'' என்றெல்லாம் அறிக்கையிடுகிறோம். இப்படி அறிக்கையிடும் வேளையிலே, பலதேவனுடைய பிள்ளைகளுக்கு வியாதி வருகிறது; பல தேவனுடைய பிள்ளைகள் தங்கள் பழைய குணாதிசயத்திலே நடக்கின்றனர். இதைப் பார்க்கும் சபையார், இவருடைய விசுவாச அறிக்கைப்படி இவர் இல்லையே என்று சொல்லி மருளுவதால், வசனத்தைக் குறித்த தெளிவு தேவைப்படுகிறது. அதை பிசாசு பயன்படுத்தி ''இந்த துன்பத்தை தேவன் கொடுத்து சிட்சிக்கிறார்; இப்படிப் பாடுகள் பட்டால் தான் பரலோகம் போக முடியும்'' என்ற ஒரு தவறான சத்தியத்தை ஊழியர்கள் மூலம் திணிக்கிறான்; விசுவாசிகளும் நம்பி ஏமாந்து பல வேளைகளில் மடிந்தும் போகின்றனர். அதையும், ''தேவ சித்தம்'' என்று பிசாசு சொல்ல வைக்கிறான். தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தமும் இன்னதென்று பகுத்தறியாத வரைக்கும் இந்த நிலைதான். உன்னிடத்தில் வரும் வியாதிகள் முதலில் பரம்பரையா என்று பார். பரம்பரை வியாதியானால் அது நீ பிறக்கும்போதே, இரட்சிக்கப்படும் முன்பே உன் சரீரத்தில் இசைந்திருப்பது. அது இரட்சிக்கப்படும் போது போகாது. அந்த பரம்பரை வியாதிகள் தலை தூக்கும்; அப்போதும் இயேசுவின் குணமாக்கும் வல்லமையினால் - தழும்புகளால் நிச்சயம் சுகமுண்டு. தேவனால் தீராத வியாதி ஒன்றுமில்லை. மற்றபடி பரம்பரை அல்லாத மற்ற வியாதிகள் இந்த சரீரத்தை அணுகாது என்பது தேவசித்தம். இதற்கு ஒப்புக் கொடுப்போம்; வியாதியில்லாமல் வாழலாம். **இரட்சிக்கப்பட்ட பிறகு வரும் வியாதிகள் பாவம், சாபம், பிசாசு ஆகியவைகளால் வருகின்றன.** இவைகளுக்க எதிர்த்து வசனத்தை உபயோகித்தால் வியாதியே வராது. ஆமென். பரம்பரை வியாதியானாலும் சரி, இரட்சிக்கப்பட்டபின் வருகிற வியாதியானாலும் சரி, எந்த ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவனும் வியாதியில் மரிக்கக் கூடாது. அகால மரணம் கூடாது என்பது தேவசித்தம்; இதற்கு ஒப்புக்கொடுப்போம். மரண நிலையை வைத்து யாரையும் எடைபோடக்கூடாது என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

அப்படியே மனம் - உள்ளம் - உணர்ச்சி, சிந்தனை, எண்ணம், ஆகிய ஆத்மாவிலும் பரம்பரைக் குணங்கள் இரட்சிக்கப்பட்ட பின்னும் தொடரும், அதுவும் வசனத்தால் ஆத்மா மறு ரூபமாகும் போது மாறிப்போகும். ''அன்பாயிரு; இரக்கமாயிரு; பொருளாசை, கோபம், மூர்க்கம், வேசித்தனம், கொலை, கொள்ளை எல்லாம் தேவையில்லை'' என்றெல்லாம் பிரசங்கிக்கிறவரே பல வேளைகளில் இவைகளில் மாட்டும் போது பரம்பரை குணமா அல்லது இரட்சிக்கப்பட்ட பின் வந்ததா என்பதை உணர்ந்தால்,

இரண்டையுமே மன மாற்றத்தால் வசனத்தைக் கொண்டு நீக்க முடியும். இல்லையேல் “கிறிஸ்தவன் நல்லவனாக்கப்படுகிறான்; அவன் நல்லவனே” என்ற உணர்வு விசுவாசிகள் மத்தியில் மாறிப் போக வாய்ப்புண்டு; வசனம் பொய் என்று நினைக்ககூட இடமுண்டு. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உன் பரம்பரைவியாதி மற்றும் குணங்களினால்தேவ வசனம் அவமாகாதபடி உன்னை நீயே நிதானித்து செயல்படு; மற்றவர்களுக்கு சாட்சியாயிரு. பொல்லாத வியாதியும் குணங்களும் பரம்பரை முறையில் ஒரு வேளை உன்னில் வெளிப்படலாம். அதையும் தேவன் மாற்றுகிறார். மற்றபடி இரட்சிக்கப்பட்ட பின் எந்த வியாதியோ, எந்த தீமையான குணங்களோ புதிதாய் வெளிப்படாது என்பது தேவ சித்தம். இது உன்னிலே நிறைவேற ஒப்புக் கொடு. சாட்சியாய் வாழு!

# 30. விசுவாசியே! உனக்குமா இந்த வியாதி?

தேவனுடைய பிள்ளையே! இன்றைக்கு உலகமெங்கும் புதிய புதிய வியாதிகள் உருவாகி பெரும்பாலும் எல்லா மனிதர்களுமே தாக்கப் படுகின்றனர். அதிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இருதயத்திலே விசுவாசித்து வாயினாலே அறிக்கையிட்டு மனந்திரும்பி, பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்தானம் பெற்று, அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியையும் பெற்ற விசுவாசிகளும் வியாதியினால் பாதிக்கப்படுகிறார்கள். அதிலும் சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால், பெரிய பெரிய மிஷினரிமார்கள், சுவிசேஷகர்கள், அப்போஸ்தலர்கள், போதகர்கள் பெரும்பாலோர் தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு மரித்தே போகிறார்கள். தற்கால ஊழியர்கள் கென்னத்ஹெகின், பால் யாங்கிசோ, சாம் சுந்தரம், பெர்க்மான்ஸ், பிரதாப் சிங், ஸ்டான்லி, தயாநந்தம் போன்ற பலரும் வியாதிகளுக்கு உட்பட்டிருக்கிறார்கள். இதை எல்லாம் பார்க்கும்போது, “வாதை உன் கூடாரத்தை அணுகாது” (சங். 91:10) உன் ஆத்மா வாழ்கின்றது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பாய்” (3 யோ. 2) போன்ற வசனங்களெல்லாம் பொய்யோ என்று பலரால் எண்ணத் தோன்றுகின்றது. இதனால் விசுவாசம் பலருக்குத் தளர்ந்து போகிறது. இதற்கெல்லாம்

அடிப்படைக் காரணம் சாட்சிகளை வைத்து சத்தியத்தை எடை போடுவதால்தான். சத்தியத்தை - வேதவசனத்தை - வைத்து சாட்சிகளைப் பார்த்தால் மட்டுமே விசுவாசம் வளரும்; தேவ சித்தம் விளங்கும். **வியாதியைப் பற்றி தேவ சித்தம் என்ன?** ரோ. 12:2ன்படி நம் மனமாகிய ஆத்மா வசனத்தால் தினந்தோறும் மறுரூபமாகும்போது (யாத். 1:21) தேவசித்தம் புரியும். ஆதிமுதல் இன்று வரை தேவ பிள்ளைகள் வியாதி இல்லாமல் வாழ வேண்டும் என்பதுதான் தேவசித்தம். அதனால்தான் வியாதிப்பட்டவர்கள் எல்லாரும் சுகமாக வேண்டி, எல்லா வியாதிகளையும் சிலுவையில் சுமந்து நமக்காய் ஜீவனை விட்டார். அவர் தழும்புகளால் சுகமாகிறோம். எந்த ஒரு விசுவாசியும், வியாதியில்லாமல் வாழ வேண்டும் என்பதும், வியாதி வந்தால் வியாதியோடு மரிக்கக் கூடாது என்பதும் தேவனின் வாஞ்சை. அப்படியில்லை என்றால் நீதிமானின் மரணத்தை விரும்புகிற தேவனாய் அவர் இருக்க முடியுமா? (சங். 116:15) சிந்தியுங்கள்.

இப்படிப்பட்ட தேவன் நமக்கு இருக்கும்போது பின் ஏன் விசுவாசிக்கு வியாதி வருகிறது? **ஒரு காரணம்:-** வசன வெளிப்பாடு இல்லாத ஊழியர்களின் தவறான பிரசங்கமே! ஒரு நல்ல ஊழியருக்கு, திடீரென்று ஏதோ வியாதி வந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். விடுதலையாக ஜெபிப்பார்; உபவாசமிருப்பார்; ஆனாலும் விடுதலையாகாத போது; "என்னைச் சிட்சித்து, சுத்த பொன்னாய் மாற்ற தேவன் வியாதியைக் கொடுத்திருக்கிறார்; இந்த வியாதி நீங்கினாலும் சரி. நீங்காமல் நான் மரித்தாலும் சரி, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சபையாருக்கு அறிவிப்பார். ஆவிக்குரிய சபையாரும் (?) ஆமென் - அல்லேலூயா என்று சொல்லி அதை அப்படியே நம்பிச் செயல்படுவார்கள். தங்களுடைய வாழ்க்கையிலும் அப்படித்தான் நடக்கும் என்று நம்புவதால் அவர்களுடைய விசுவாசத்தின்படியே நம்பிச் செயல்படுவார்கள்; தங்களுடைய வாழ்க்கையிலும் அப்படித்தான் நடக்கும் என்று நம்புவதால் அவர்களுடைய விசுவாசத்தின்படியே அவர்களுக்கும் ஆகிறது. இது பிசாசுக்கு கொண்டாட்டம்; விசுவாசிகளுக்கோ திண்டாட்டம். தேவன், வசனத்தினால் தான் இருதயமாகிய ஆவியிலே சிட்சிக்கிறார் என்ற வேத அறிவு இல்லாமல், வியாதியை சுமந்து தீர்த்த தேவனே வியாதியை கொடுத்து சிட்சிக்கிறார் என்று சொல்கிறார்கள் (யோ. 15:3: 17:17; சங். 50:17; 105:16; நீதி. 17:3) நமக்குக் கிடைக்கும் சிட்சை இரட்சிக்கப்படாதவர்களுக்கு, வேசிப்பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை என்ற வேத அறிவு இல்லாமல் போனதே இதன் விளைவு (எபி. 12:8).

**அடுத்த காரணம்:-** வியாதியைக் கொடுப்பது யார்; அது எப்படி வருகிறது என்ற வசன வெளிப்பாடு இல்லாதபோது வியாதி வருகிறது, பிசாசின்

கிரியைகளை அழிக்க இயேசு வந்தார் (1 யோ. 3:8); அவர் அழித்ததிலே ஒன்று வியாதி என்றால் அது பிசாசின் கிரியை தானே! ஆமென். யோ. 10:10ன் படி பிசாசு வியாதியைக் கொடுத்து நம் ஆரோக்கியத்தைத் திருடவும் நம்மைக் கொல்லவும் ஒழிக்கவும் அழிக்கவும் ஆதி முதலிலிருந்தே தேவனால் அனுமதிக்கப்பட்டு பூமிக்கு வந்தவன் என்றும், தேவனே நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தார் என்றும் அறிகிறோம். வியாதியானது நமது பாவத்தால் வருகிறது; நமது சாபத்தால் வருகிறது; பிசாசினால் நேரிடையாய் வருகிறது என்று ஏற்கெனவே விளக்கி பல முறை எழுதியிருக்கிறேன். "வியாதியா? மரணமா?!" என்ற இதே ஆராய்ச்சிப் புத்தகத்திலும் விளக்கியிருக்கிறேன். **பலர் சொல்வது:-** "நான் பாவம் செய்வதில்லை அப்படியே அறிந்தோ அறியாமலோ பாவம் செய்தாலும் 1 யோ. 1:8, 9ன் படி நான் அப்போதைக்கப்போது பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்பு பெறுகிறேன். எனவே என் பாவத்தால் என் சரீரத்தில் வியாதி வர வழியில்லை. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட எனக்கு மூதாதையர் சாபம் தொடராது (எசே. 31:29-33). என்னால் வரும் சாபமும் இயேசு கிறிஸ்துவால் சிலுவையிலே மாற்றப்பட்டது (கலா. 3:13). ஆகவே என் சாபத்தாலும், மூதாதையரின் சாபத்தாலும், சாபத்தில் ஒன்றான வியாதி வர ஏதுவில்லை. மேலும் நான் பிசாசுக்கு எதிர்த்து நிற்கிறேன்; சர்வாயுத வர்க்கங்களைத் தரித்திருக்கிறேன்; உபவாசித்து வல்லமையைப் பெற்றுக் கொள்கிறேன். வசன விசுவாச வீரன் நான். எனவே பிசாசினால் எனக்கு வியாதி வர வாய்ப்பில்லை." நானும் இப்படித்தான் விசுவாசித்து அறிக்கையிட்டேன். ஆனாலும் இப்படிப்பட்ட தேவ பிள்ளைகளுக்கும் வியாதி வருகின்றனவே ஏன்? எப்படி?

தேவ பிள்ளையே! சாத்தான் தந்திரமுள்ளவன். அவன் தந்திரங்கள் முழுவதும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும் (ஆதி. 3:1; 2 கொரி. 2:11). தேவனோடு, தேவ மகிமையிலே - தேவசாயலிலே - இருந்த ஏவாளையே அவன் தந்திரம் வஞ்சித்தது (2 கொரி. 11:3) நாமோ ஆவிக்குரிய ரீதியில் தேவனோடு இருக்கிறோம்; சரீரப் பிரகாரமாக நாம் பிசாசின் ஆளுகையில் உள்ள இந்த உலகில் இருக்கிறோம். (2 கொரி. 4:4 யோபு 1:12) பிசாசின் தந்திரங்களை அறிந்து எதிர்த்து நிற்க வேண்டும். அவன் தந்திரங்கள் எல்லாம், ஊழியங்கள், போதகங்கள், தீர்க்கதரிசனங்கள். குடும்பத்தார், உற்றார், உறவினர், நண்பர்கள், உலகத்தார், இயற்கை நிலை போன்ற எதன் மூலமாகவும் எப்படியும் வெளிப்படலாம். இவைகளை நாம் அறிந்து கொள்ள பிசாசு தடை செய்வான்; இவைளை ஆவியனாவரோ வசனம் மூலம் நமக்கு

வெளிப்படுத்துவார். வசன விசுவாசம் மிக மிக முக்கியம் (சங். 1). இப்படி அவனின் தந்திரங்களை அறிந்து கொள்ளாததினால் வியாதி போன்ற சங்காரத்தை அவன் நமக்கு கொடுக்கலாம் (ஓசி. 4:6); அப்படிப்பட்ட அறிவில்லாமையினால் பிசாசின் வியாதி போன்ற சிறைக்குள் சிறைப்பட்டுப் போக வழியுண்டு. (ஏசா. 5:13; யோபு 42:10). 18 வருடமாக ஊழியம் செய்து வசன விசுவாசத்தை செயல்படுத்திப் போதிக்கும் நானே, இந்தப் பிசாசின் தந்திரங்களில் ஒன்றை செப்டம்பர் 2004ல் தான் உணர்ந்தேன். அந்த தேவனின் வெளிப்பாடுதான், இந்த நூலில் உள்ள **"இரட்சிக்கப்பட்டவர்களுக்கு பரம்பரை வியாதிகள், குணங்கள் தொடருமா?"** என்ற செய்தி. அந்த செய்தியை மறுபடியும் தேவ ஒத்தாசையோடு வாசியுங்கள். இப்படிப்பட்ட வியாதிகள் தலை தூக்காதபடி பிசாசின் தந்திரங்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! வசன விசுவாத்தோடு பிசாசின் வியாதி சம்பந்தப்பட்ட தந்திரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்; எச்சரிக்கையாயிருங்கள்; மற்றவர்களுக்கும் அதை அறிவியுங்கள்; வியாதி இல்லாத வாழ்வு நிச்சயம் இந்த பூமியிலே உண்டு என்று விசுவாசித்து அறிக்கையிடுங்கள்; யாரை விழுங்கலாமோ என்று கெர்ச்சிக்கின்ற சிங்கம் போல் அலைந்து திரியும் அவனுக்கு உங்கள் சரீரத்தில் எவ்வளவேனும் இடங்கொடாதிருங்கள் (1 பேதுரு 5:8, எபே. 4:27). விசுவாசியே! உனக்கேன் வியாதி? அல்லேலூயா!

# 31. தெய்வீக சுகம் என்றால் என்ன?

தெய்வீக ஆரோக்கியம் (Divine Health) என்பது வேறு; தெய்வீக சுகம் (Divine Healing) என்பது வேறு. இரண்டையும் தேவன் தான் கொடுக்கின்றார். தம்பிள்ளைகள் தெய்வீக ஆரோக்கியத்தோடு வியாதியில்லாமல் வாழ வேண்டும் என்பது தான் தேவ சித்தம் (3 யோ. 2; சங். 91:10). ஆனாலும் பல தேவ பிள்ளைகளுக்கு வியாதிகள் வந்து விடுகின்றன. இதற்கு காரணங்கள் பல உள்ளன. இவைகளிலிருந்தும் சுகம் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இதற்காகத் தானே நம் எல்லா வியாதிகளையும் சுமந்து தீர்த்தார் (மத். 8:17; ஏசா. 53:4) அல்லேலூயா! இப்படித் தேவன் கொடுக்கிற சுகம் தான் தெய்வீக சுகம். இதைப்

பெற்றுக் கொள்ள தேவை வசன விசுவாசமே! விசுவாசித்தினால் வராத யாவும் பாவம் (ரோ 14:23); விசுவாசித்தால் தான் அவருடைய மகிமையைக் காண முடியும் (யோ 11:40); அப்படியானால், வியாதிப்பட்ட ஒரு தேவபிள்ளை, தெய்வீக சுகம் பெற இருதயமாகிய ஆவியில் விசுவாசித்தால் மட்டும் போதுமா? சுகம் கிடைத்து விடுமா? இது கேள்வி. பல தேவ ஊழியர்கள், விசுவாசம் மட்டும் போதும் என்று போதிப்பது உண்டு. இது சரிதானா? கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்ற வசனம் பொய்யா? (யாக். 2:20). இந்த தெய்வீக சுகம் பற்றிய கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவராக!

**வேதத்தில் தேவன் கொடுத்த தெய்வீக சுகம் பற்றி ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.** மோசேக்கு விரோதமாய் மீரியாம் பேசி பாவம் செய்ததால், சாபம் அவளைப் பிடித்தது; அவள் குஷ்டரோகியானாள். இதிலிருந்து சுகம் பெற தேவனிடத்தில் மோசே ஜெபித்தான். தெய்வீக சுகம் கிடைத்தது. எப்படி? எப்போது? 7 நாள் பாளையத்துக்குப் புறம்பே அவள் விலக்கப்பட்டு, பின்பு சுகமாகி சேர்த்துக் கொள்ளப்பட்டாள். இது ஒரு வகையான தெய்வீக சுகம் (எண். 12) சீரியர் ராஜாவின் படைத் தலைவன் நாகமான் குஷ்ட ரோகியாருந்தான். அவனிடத்திலிருந்த அடிமைப் பெண்ணின் வார்த்தையை விசுவாசித்து சுகம் பெற நாகமான் எலிசாவிடம் வந்தான். "யோர்தானில் ஏழுதரம் ஸ்தானம் பண்ணு" என்று எலிசா சொன்னதைக் கேட்டு, "எலிசா தன் கையினால் என்னைத் தொட்டு சுகமாக்குவார் என்றிருந்தேன். நான் ஸ்நானம் பண்ணி சுத்தமாக வேண்டும் என்கிறாரே" என்று கோபப்பட்டு திரும்பினான். அப்போது அவன் ஊழியக்காரன் மூலம் தேவன் பேசி சொல்லிய வார்த்தையை நாகமான் விசுவாசித்து அப்படியே அதை கிரியையில் காட்டினான். ஏழு தரம் முழுகின பின்பு சுகமானான். ஆக, தேவன் தரும் தெய்வீக சுகமானது விசுவாசித்து செயல்பட்ட பின்னரே கிடைத்தது. (2 ராஜா. 5) தெய்வீக சுகமானது எப்படியும், எந்த வழியிலும் தேவ சித்தப்படி வெளிப்படலாம் என்று அறிகிறோம்.

**இயேசு கிறிஸ்து கொடுத்த தெய்வீக சுகத்தைப் பார்ப்போம்.** ஒரு குஷ்டரோகி விசுவாச அறிக்கை இட்டான். அவரோ தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு "எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு" என்றார். உடனே அவன் சுத்தமானான் (மத். 8:1- 4) ஒருமுறை 10 குஷ்டரோகிகள் "ஐயரே எங்களுக்கு இரங்கும்" என்று தெய்வீக சுகம் வேண்டினார்கள். அவரோ தொடவில்லை. கையை நீட்டவில்லை. "நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு காண்பியுங்கள்" என்றார். அப்போதும் அவர்கள் சுகமாகவில்லை. அவர்

சொன்னதை விசுவாசித்து அவர்கள் போகையில் சுத்தமானார்கள் (லூக். 17:12 - 14) தெய்வீக சுகம் எப்படியும் வெளிப்படலாம். இரண்டு குருடர்கள், விசுவாசத்தோடே அவரைக் கூப்பிட்டுக்கொண்டே அவர் வீட்டிற்கே வந்து, விசுவாச அறிக்கை இட்டார்கள். அவரோ அவர்களுடைய கண்களைத் தொட்டு "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது" என்று சொன்ன உடனே அவர்கள் சொஸ்தமானார்கள் (மத். 9:27:30) ஒரு முறை பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான். அவனை அவர் சொஸ்தமாக்கினார் என்று மத். 12:22 சொல்கின்றது. எப்படி என்று விளக்கப்படவில்லை. ஒருமுறை இயேசு வருகிற வழியில் இரண்டு குருடர்கள் விசுவாசத்தோடு கூப்பிட்டார்கள். சீஷர்கள் தடுத்தும் விசுவாச சத்தம் குறையவில்லை. இயேசு உடனே நின்று, அவர்களின் விசுவாச அறிக்கையை கேட்டு, மனதுருகி அவர்கள் கண்களைத் தொட்டார். அவர்கள் சொஸ்தமானார்கள். (மத். 20:30:34). இன்னொரு முறை, ஒரு குருடனை கொண்டு வந்து அவனைத் தொடும்படி விசுவாசத்தோடு கேட்டபோது, அவரோ அவனை கிராமத்து வெளியே கொண்டு போய், அவன் கண்களில் உமிழ்ந்து அவன் மேல் கைளை வைத்து, எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். நடக்கிற மனுஷரை, மரங்கள் போல் காண்கிறேன் என்றதும், மறுபடியும் அவன் கண்களின் மேல் கைகளை வைத்து அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார். அப்பொழுது அவன் சொஸ்தமானான் (மாற். 8:22:25) வேறொரு சமயம், இயேசு தரையிலே துப்பி, உமிழ் நீரினால் சேருண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின் மேல் பூசி, சீலோவாம் குளத்தில் கழுவச் சொன்னார். அவன் விசுவாசித்து கழுவினான்" சுகமானான் (யோ. 9:6,7). இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். இன்றைக்கு விசுவாசிக்க இயேசுவின் வார்த்தை இருக்கிறது. ஆனால் வியாதிப்பட்ட நம்மைத் தொடவோ, உமிழவோ, சேறு பூசவோ மனுஷ குமாரனில்லை, சீலோவாம் குளமுமில்லை; ஆசாரியனும் இல்லை போகும்போதே சுகமாக. மாறாக தேவன், நன்மையான ஈவுகளை அளித்திருக்கிறார். (யாக். : 1:17) "உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் சுகமே இல்லை; அது காயமும் வீக்கமும் நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ்பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆறப்படாமலும் இருக்கிறது" என்று தேவன் சொல்வதைப் பாருங்கள் (ஏசா. 1:6). "கீலேயாத்லே பிசின் தைலம் இல்லையோ? இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்" (எரே. 8:22) என்ற தேவனின் அங்கலாய்ப்பை மறவாதே! வசன விசுவாசத்தோடு தான் பிசின் தைலமோ (மருந்துகள்), இரண வைத்தியனோ (டாக்டர்) தேவை; அப்போதுதான் சுகம் உண்டு.

சுகம் உண்டு என்ற தேவனின் எண்ணத்தை உணர்ந்துகொள். வியாதி என்ற உடனே நம் சபைகளிலே சொல்வது எசேக்கியா ராஜாவைத்தான். அவன் மரிப்பான் என்று ஏசாயா சொல்லியும் அவனின் விசுவாச வேண்டுதலால் தேவனே ஏசாயா மூலமாய் மறுபடியும் 15 வருடம் கூட்டிக் கொடுப்பதாய் சொன்னார். அவன் வியாதியினின்று பிழைப்பதற்கு விசுவாசத்தோடு அத்திப் பழத்து அடையை ராஜாவின் பிளவையின் மேல் பற்றுப் போட்டபோது அவன் பிழைத்தான். (2 ராஜா. 20) இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தெய்வீக சுகத்திற்கு வசன விசுவாசம் தேவை. மட்டுமல்லாமல் விசுவாசத்தோடு கூடிய நன்மையான செயல்பாடுகள் - கிரியைகள் தேவை. ஆசீர்வதிக்கப்பட்ட அப்பமும் தண்ணிரும் தேவை (யாத். 23:25) ஓய்வு தேவை. நல்ல சூழ்நிலை தேவை; நல்ல மருந்துகள் - மருத்துவர்கள் தேவை. நன்மையான எந்தக் காரியங்களையும் உலகிலே தேவன் நமக்காகவே உண்டாக்கியிருக்கிறார்! அல்லேலூயா! மண்ணான சரீரம் சுகமாயிருக்க விசுவாசத்தோடு மண் பூமியிலே உருவாகும் நன்மையானவைகள் நிச்சயம் தேவை. விதைக்கிறது நாம்; விளையச் செய்பவர் தேவன். விசுவாசத்தினால் மட்டுமே சில வேளைகளில் தெய்வீக சுகம் கிடைக்கலாம்; விசுவாசக் கிரியைகளிலேயும் சில வேளைகளில் தெய்வீக சுகம் கிடைக்கலாம். எப்படியும் தெய்வீக சுகம் தேவனால் ஏதோ ஒரு வழியில் கிடைக்கும் என்று விசுவாசி! கழுதை மூலமாய் பிலேயாமுக்கு உணர்த்திய தேவன், காகம் மூலம் எலியாவை போஷித்த தேவன், சேறு பூசி சுகமாக்கிய தேவன் இன்றும் ஜீவிக்கிறாரே! அல்லேலூயா! விசுவாசிப்போம்! அறிக்கையிடுவோம்! நன்மையான கிரியைகளில் ஈடுபடுவோம்! தெய்விக சுகம் நமக்கே! அல்லேலூயா ஆமென்!

# 32. HEART ATTACK AND HEART FAILURE

## (மாரடைப்பும், இருதயம் நின்று போதலும்)

செய்தியின் தலைப்பைப் பார்த்த உடனே இது என்ன மருத்துவச் செய்தியாயிருக்கிறதே என்று எண்ணத் தோன்றும். உண்மை தான். இது மருத்துவச் செய்தி தான். ஆனால் ஒரு வித்தியாசம், நமக்கு தேவன் கொடுத்திருக்கும் வேதத்தில், ஆவிக்குரிய செய்தியானது, மருத்துவம், விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம், வானவியல், கணிதம், பொறியியல்,

வணிகம், விளையாட்டு, குடும்பம் போன்ற பல செய்திகளையும் இணைத்தே ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைக்கு பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு மாரடைப்பு வந்து மரித்துப் போகிறார்கள்; பலருக்கு இருதய துடிப்பு நின்று போய் மரித்துப் போகிறார்கள். ஏன் இப்படி என்பதை பலர் அறியத் துடித்தும் அறியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கே இந்தச் செய்தி.

நான் அடிக்கடி என்னுடைய செய்தியில் யோ. 14:1 ஐ சொல்லி "ஒரு கிறிஸ்துவனுக்கும் மாரடைப்பு (Heart attack) வரக்கூடாது என்பது தேவனின் விருப்பம்" என்று சொல்வேன். இருதயக் கலக்கம் என்பது இரத்தம் கலங்கும் நிலையாகும். இது எதனால் வருகிறது? சர்க்கரை வியாதியினால் வரலாம்; டென்சனால், பிரஷரினால் வரலாம்; கொழுப்புச் சத்து அதிகமாவதால் வரலாம்; பாரம்பரிய வியாதியினால் வரலாம். அளவுக்கு மிஞ்சிய உடல் பருமனும் ஒரு காரணம். இது முன்னால் சொல்லப்பட்டவைகளால் வருபவை. மொத்தத்தில் யோ. 14:1 ஐ வாசித்தால், பிதாவாகிய தேவனிடத்திலும் இயேசுவாகிய வார்த்தையிடத்திலும் (வார்த்தையாகிய இயேசுவிடத்திலும்) விசுவாசம் இல்லாததினால் தான் மாரடைப்பு வருகிறது என அறிகிறோம். வெறுமனே "இயேசு, இயேசு" என்று விசுவாசித்தால் போதாது; இயேசுவின் வார்த்தையை விசுவாசிக்க வேண்டும். வசனமில்லாத வாழ்க்கை விசனமான வாழ்க்கை ."அப்பத்தையும் தண்ணீரையும் தேவன் ஆசீர்வதிக்க வேண்டும்", "திகையாதே! கலங்காதே! நான் உன்னோடு இருக்கிறேன்"; "பயப்படாதே; திடன்கொள், ஆத்ம இளைப்பாறுதல் தரும் இயேசுவிடம் வாருங்கள். சரீர இளைப்பாறுதலும் தேவையல்லவா, இந்த சரீரம் தேவனுடைய ஆலயம்; இதைக் கெடுக்கக் கூடாது. தேவன் படைத்ததெல்லாம் நல்லதுதான்; ஆனாலும் ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக் கொள்ளப்படும்போது தான் எல்லாவற்றையும் புசிக்கலாம்; போஜனப்பிரியன் தொண்டையில் கத்தியை வை; விளையாட்டு வீரர்கள் இச்சை அடைக்கத்தோடு இருக்கும் போது நாம் எப்படி இருக்க வேண்டும்? பிசாசின் தந்திரங்களை அறிந்து கொள்ளுங்கள்; பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்" போன்ற ஏராளமான வசனங்கள் தாராளமாய் இருந்தும் அதை நாம் இரவு பகலும் தியானிக்கிற மனுஷராய் இருந்து செயல்பட்டால் நாம் பாக்கியவான்களாயிருப்போம். மாரடைப்பு வராது.

நம் தேவனாகிய இயேசு கிறிஸ்து நமக்கு வரும் எல்லாவற்றையும் சுமந்து தீர்த்தார். அவர் இருதயம் வெடித்து சிலுவையிலே மரித்தார்; மாரடைப்பால் மரித்தார். எப்படித் தெரியும்? அவர் மரித்து விட்டாரா என்று

பார்ப்பதற்காக அவரின் விலாவை போர்ச் சேவகன் குத்தும் போது இரத்தமும் தண்ணீரும் வந்தது (யோ. 19:34). மாரடைப்பில் மரித்தவர்களுக்குத்தான் இரத்தமும் தண்ணீரும் வரும் என்று மருத்துவம் சொல்கின்றது. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நமக்காய் - நமக்கு வரும் மாரடைப்பை அவர் ஏற்று மரித்ததினால், இதை விசுவாசிக்கும் நமக்கு மாரடைப்பு வராது; வராது; வரக் கூடாது. வசனப்படி வாழ்வோம்; ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு ஒப்புக் கொடுப்போம். வருகை தாமதமானால் சங். 91:16 ன்படி நீடித்த நாட்களாய் வாழ்வோம். அல்லேலூயா!

தேவன், உள்ளான மனுஷனாகிய இருதயமாகிய ஆவியையும், மனம் - உள்ளம் ஆகிய ஆத்மாவையும் தம்முடைய சாயலின்படியும், ரூபத்தின்படியும் ஆணும் பெண்ணுமாய் ஒன்றுமில்லாமையிலிருந்து சிருஷ்டித்தார் (ஆதி. 1:26, 27; சங். 33:15). புறம்பான மனுஷனாகிய சரீரத்தை மண்ணிலிருந்து உண்டாக்கினார். சரீரமான மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. உள்ளான மனுஷனாகிய ஆவியின் ஜீவன், தேவ வார்த்தையாகிய கிறிஸ்து (யோ. 10:10). இந்த இரண்டு மனுஷனையும் இணைத்து உலகில் செயல்பட வேண்டி ஜீவ சுவாசத்தை மனிதனின் நாசியில் ஊதினார் (ஆதி. 2:7). எல்லா ஜீவன்களுக்கும் சுவாசம் ஒன்றே (பிர. 3:19) யோபு 32:2:33:4 போன்ற வசனங்களையும் தியானியுங்கள். இந்த சுவாசம் மனிதனுக்குள் இருக்கும் வரை உள்ளான மனுஷனும் புறம்பான மனுஷனும் இப்பூமியில் வாழ்கின்றனர். இந்த சுவாசம் எடுபட்டுப் போனால், உள்ளான மனுஷன் பிரிந்து போகிறது; புறம்பான மனுஷன் மரித்து மண்ணுக்குப் போகிறது (பிர. 12:7). இப்படியாய் சுவாசம் எடுபடும் நிலை தான் Heart Failure இருதயம் நின்று விடுதலாகும். மரித்து விட்டாரா என்பதைக் கண்டு பிடிக்க, நாடியைப் பார்ப்பார்கள். நாடித்துடிப்பு - இரத்த ஓட்டம் இருந்தால், சுவாசம் இருக்கின்றது என்று பொருள்; இருதயம் இயங்குகிறது என்று பொருள். சுவாசம் இல்லாத போது இருதயம் நின்று போகும். சுவாசம் எப்படி இல்லாமல் போகும்?

சங். 104:29ஐ வாசித்தால், சுவாசத்தைக் கொடுத்தவரே அதை வாங்கிக் கொண்டால்தான் இல்லாமல் போகும். அது எப்பொழுது நடக்கும்? சங். 91:16ன்படி கர்த்தர் நீடித்த நாளாய் நம்மை வைத்திருந்து, அதன் பின்னரே சுவாசம் எடுபடும்; இருதயம் நிற்கும்; மரணம் சம்பவிக்கும். இப்படித்தான் நீதிமான்களாகிய நமக்கு சம்பவிக்க வேண்டும். ஆமென். அல்லேலூயா! மற்றபடி பிசாசு தரும் அகால மரணமானாலும் தேவன் அனுமதித்து பிசாசு கொடுக்கின்ற இரத்த சாட்சி மரணமானாலும், இரத்தம் சிந்தவோ, உறையவோ, ஓட்டத்தடையோ, பிசாசு முழுமையாய்ச் செய்யும்

போது அதற்கு மேலும் சரீரத்தில் உயிராகிய இரத்தம் இல்லாத நிலையில் தேவனே சுவாசத்தை எடுத்துக்கொள்கிறார்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! Heart attack நமக்கு (மாரடைப்பு) வரவேகூடாது; (அப்போதும் சுவாசம் எடுபட்டுபோய் இருதயத் துடிப்பு நின்றுபோகும்) Heart failure - இருதயம் நின்றுவிடுதல் - சங். 91:16ன் படி தான் நடக்க வேண்டும். இந்த விசுவாசம் வளரட்டும்; அது கிரியைகளிலே வெளிப்படட்டும். விசுவாசம் வெற்றியைத் தரும். அல்லேலூயா!

# 33. வியாதி வரக் காரணமென்ன?

## I

இந்தக் கேள்விக்கு ஏராளமான விளக்கங்களை பழைய மாதப் பத்திரிகைகளிலும், இந்த ஆராய்ச்சிப் புத்தகத்திலும் தாராளமாய் எழுதியிருக்கிறேன். **வியாதி வரக் காரணங்களாவன:** (1) பாவம் (2) சாபம் (3) பிசாசு, இதுதான் வேதம் தரும் விளக்கம். ஆனாலும், இன்றைக்கு தேதிவரை இன்னும் பல ஆவிக்குரிய சபையார் சத்தியத்தை உணராமல், மனக்கண்கள் பிரகாசமாகாமல் (எபே. 1:19) கீழ்க்கண்ட காரியங்களை கோயபல்ஸ்போல சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறதை பகுத்தறிவோடு சிந்தியாமல் (யூதா 22) வசனத்தோடு தியானிக்காமல் (சங். 1) அப்படியே நம்பும் "விசுவாசிகள் என்ற பெயரால்" இருக்கும் கூட்டம் நம்பிக் கொண்டே இருக்கின்றது. இதனால் கர்த்தரை இன்னாரென்று உணராமல், அவரது சித்தமறியாமல் செயல்படுகின்றார்கள். 1 யோ. 3:8ன்படி பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே வந்த மனுஷகுமாரன், வியாதியை சிலுவையிலே சுமந்து தீர்த்தார். (மத். 8:17) என்று எழுதப்பட்டுள்ளதால், வியாதி பிசாசின் கிரியை என்று தெள்ளத் தெளிவாக அறிகிறோம். இந்த பிசாசின் கிரியையை தேவனுடைய கிரியை என்று சமப்படுத்துவது அறிவீனமும், மன்னிக்க முடியாத துர்ச்செயலும் அல்லவா!

**அவர்கள் சொல்கிறார்கள்:** (1) இயற்கையினால் வியாதி வருகிறது (2) கர்த்தர் நம்மை நேசிக்கிறதினால் வியாதி வருகிறது. (3) தேவனுடைய மகிமைக்கேதுவாக வியாதி வருகிறது. (4) மரணத்துக்கேதுவாக தேவன் வியாதியை பயன்படுத்துவதால் வருகிறது. இவைகளை வேதவசனப்படி ஒவ்வொன்றாய்ப் பார்ப்போம்.

ஜலதோஷம், காய்ச்சல் என்று டாக்டரிடம் போனால், "மழையில் நனைந்திருகக வேண்டும். அல்லது அதிக உஷ்ணத்தால் வந்திருக்க வேண்டும் அல்லது தண்ணீர் மற்றும் சுற்றப்புற சுகாதாரமில்லா சூழலால் வந்திருக்க வேண்டும்" என்றெல்லாம் அவர் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இதெல்லாம் உண்மைதான். ஏசா. 49:10, சங். 55:8 போன்ற வசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. ஆனாலும் சங். 91:5-8ஐ வாசித்தால் இப்படி இயற்கையால் வரும் வியாதிகள் நம்மை அணுகாதாமே! பின்னை ஏன் அணுகுகின்றது? தேவன் இவைகளிலிருந்து தப்புவிப்பாராமே! பின்னை ஏன் வியாதியில் விசுவாசி உழல்கிறான்? சங். 91-ஐ முழுவதுமாய் வாசித்தால், "சர்வ வல்லவருடைய நிழலில் தங்க வேண்டும். தேவனே அடைக்கலம், கோட்டை, தேவனே நம்பிக்கை என்று விசுவாசித்து அறிக்கையிட வேண்டும், அவருடைய வசனமாகிய செட்டைகளின் கீழே அடைக்கலம் புக வேண்டும். தேவனின் சத்திய வசனமே நமக்கு பரிசையும் கேடகமும் என்று விசுவாசித்து அறிக்கையிட்டு கிரியைகளிலே காட்ட வேண்டும்" என்று எழுதியிருக்கிறது. இதன்படி நடக்காத பட்சத்தில் இயற்கையினால் வரும் வியாதிகள் நம்மைத் தாக்க வாய்ப்பு உண்டு. ஆக, வசனப்படி நடக்காத பாவத்தைச் செய்வதால் தான் வியாதி வருகிறதே ஒழிய, வெறுமனே இயற்கையினால் வரும் வியாதி விசுவாசியைத் தொடவே தொடாது. இப்படியாய் ஆசீர்வாதத்திற்கான வார்த்தைகளை விசுவாசிக்காமல், பாவம் செய்ய வைப்பது ஏதேன் தோட்டத்தில் வந்த பிசாசின் செயல் என்பது அதிக நிச்சயமல்லவா! தேவன் ஞானத்தை கொடுத்திருப்பதால் (நீதி. 1:7) வேத வசனத்தால் பிறந்த ஞானத்தோடு இயற்கையின் ஊடே நடமாடுங்கள். பாவமும், சாபமும், சாத்தானும் உங்களை மேற்கொள்ளாது; வியாதியும் வராது (சங். 91:10)

எபி. 12:5-11ஐ சொல்லி, கர்த்தர் நம்மை நேசிக்கிறதால், அவர் வியாதியால் சிட்சிக்கிறார் என்று போதிக்கிறார்கள். அப்படியானால் தேவன் நம்மை நேசிக்காதபடிக்கு, நாம் அவரை மறுதலித்து விலகி, பிசாசின் பிள்ளையாகிவிட்டால் வியாதி வராதா? சிந்தியுங்கள். இவர்கள் போதனைப்படி, வியாதி என்பது தேவன் தரும் சிட்சை. வேதத்தின்படி தேவன் தரும் சிட்சை வேசிப் பிள்ளைகளுக்கு அதாவது, இரட்சிக்கப்படாதவர்களுக்கு இல்லை என்று எபி. 12:8 சொல்வதைப் பாருங்கள். அப்படியானால் இரட்சிக்கப்படாதவர்களுக்கு வியாதி இல்லையா? வராதா? சிந்தியுங்கள். சரீரத்தகப்பன் சரீரத்தில் சிட்சிப்பார், ஆவியின் தகப்பனாம் நம் ஆண்டவர் ஆவியில் சிட்சிப்பார் (எபி. 12:9) ஆவியிலே சிட்சை என்பது, மாம்சத்தில் வரும் வியாதியல்ல. எனவே, தேவன் நம்மை நேசிப்பதால் வியாதி நமக்கு வருவதில்லை என்பதை முதலில் அறிய வேண்டும்.

மேலும் யோ. 9:13; 11:3-45 போன்ற வசங்களை வைத்துக்கொண்டு தேவனுடைய மகிமைக்கேதுவாக, வியாதி வருகின்றது என்றும் போதிக்கிறார்கள். நன்கு சிந்தியுங்கள். எது தேவனுக்கு மகிமை? வியாதிப்படுவதா அல்லது வியாதியிலிருந்து விடுதலையாவதா? வியாதியிலிருந்து விடுதலையாக்கத்தானே. சிலுவையிலே காயங்களை ஏற்று மரித்தார்! அப்படியிருக்க, அதற்கு மாறாய் வியாதிப்படுவது எப்படி அவருக்கு மகிமையாகும்? பிறவிக் குருடனைப்பற்றி இயேசு சொல்லும்போது, "எந்தப் பாவத்தாலும் இவன் இப்படிப் பிறக்கவில்லை; தேவனுடைய கிரியைகள் மகிமை - வெளிப்படப்போகிறது" என்றார் (யோ. 9:3) மகிமை எப்போது வெளிப்படும்? குருடனாய் இருக்கும் போதா? இல்லையே! பிறவிக் குருடன் விடுதலையாகும் போதுதானே! "இப்படிப் பிறந்தான்" என்கிறார் இயேசு. யாரால் இப்படிப் பிறந்தான்? பெற்றோரின் பாவத்தாலல்லவாம்! அப்படியானால் யாரால்? பிசாசின் கிரியையால். பிசாசின் கிரியையால், குருடனாய் பிறந்தவனிடம் தேவனுடைய கிரியை வெளிப்படப்போகிறது என்று இயேசு சொல்கிறாரே ஒழிய, குருடனாய் பிறந்ததே தேவனுடைய மகிமைக்கேதுவாய் என்று அல்ல; தேவனுடைய மகிமை தீமைக்கேதுவானதல்ல, நன்மைக்கேதுவானது. பிசாசின் செயலை தேவனோடு ஒப்பிடலாமா? சிந்தியுங்கள், லாசருவின் வியாதி விஷயமும் இப்படித்தான். எப்போது தேவ மகிமை வெளிப்பட்டது? லாசருவின் சகோதரிகள் விசுவாசித்து கிரியையிலே காட்டும்போது (யோ. 11:40) லாசரு உயிரடைந்தான். தேவநாமம் மகிமைப்பட்டது; வியாதிப்பட்டபோது அல்ல. அல்லேலூயா! ஒவ்வொருவரிடத்திலும் தேவ மகிமை வெளிப்பட வேண்டி அவர்களுக்கு வியாதி வர தேவன் அனுமதிக்கிறார் என்றால், நம் தேவன் பிசாசின் கிரியைக்கு துணை நிற்கிறார் என்று பொருள், பிசாசின் கிரியைகளை அழிக்கவந்தார் என்ற வசனம் பொய்யாகிவிடும்.

எலிசா வியாதிப்பட்டு மரித்ததை வைத்து (2 ராஜா. 13) மரணத்திற்கேதுவாய் இந்த வியாதி அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்றும், நித்திய வாழ்விற்குள் வழி நடத்த வியாதியை ஒரு வழியாக தேவன் பயன்படுத்துகிறார் என்றும் போதிக்கிறார்கள். மரணத்திற்கு அதிபதி பிசாசு (எபி. 2:14; யோ. 10:10) என்பதை அறியாதிருக்கிறார்கள். இந்த அதிபதி, வியாதியாலும், விபத்துகளாலும், பாவத்தாலும், சாபத்தாலும் மரணத்தை கொண்டு வருவதை வாடிக்கையாக்கி இருக்கிறான். தேவனோ, கர்த்தருடைய பரிசுத்தவான்களுடைய மரணம் அவர் பார்வைக்கு அருமை என்கிறார் (சங். 116:15) துள்ளத்துடிக்க, வியாதி, Accident போன்றவற்றால் மரிப்பது

தேவனுடைய பார்வைக்கு அருமையாயிருக்குமோ? அகால மரணமா தேவசித்தம்? சங். 91:16 தானே தேவசித்தம். சங். 91:10ல் வாதை உன் கூடாரத்தை அணுகாது என்ற வார்த்தை பொய்யானால் தான், வியாதி மூலமாய் மரணத்தை தேவன் கொடுப்பார். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் அவர் வார்த்தை ஒழியாதே! அது ஜீவனுள்ள வார்த்தை அல்லவா! பிசாசின் கிரியையாகிய வியாதியாலோ, பாவம், சாபத்தால் வரும் வியாதியாலோ மரணம் நேரிடுவது தேவனுக்கு உகந்தது என்றால், வியாதியை தேவன் ஒழித்தார் என்பதுதான் பொய்; பிசாசுக்கு ஆதரவாயிருக்கிறார் என்பது தான் மெய்!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! வியாதி பிசாசின் கிரியை, அது தேவனுக்கு எதிரானது; வியாதிக்கு அணுசரணையாய் நம் தேவன் செயல்படமாட்டார். அவர் சிலுவையிலே வியாதியைச் சுமந்து தீர்த்தார். இவைகளை விசுவாசித்து, வேத வாக்கியங்களை தியானித்து, தேவசித்தத்தை குணாதிசயத்தை அறிந்து கொள்! வார்த்தைகளை வைத்து செய்யப்படும் மாயாஜாலங்களை கண்டு கொள்! பாவம், சாபம் பிசாசால் தான் வியாதி வருகிறது என்பதை உணர்ந்து அவைகளுக்கு எதிர்த்து நின்று ஜெயங்கொள்! இயேசு சீக்கிரம் வருகிறார்!

# II

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, முதலாம் முறை பூமிக்கு வந்த முக்கிய காரணங்களில் ஒன்று: "பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே" (1 யோ. 3:8). இயேசுகிறிஸ்து, எவைகளை எல்லாம் சுமந்து தீர்த்தாரோ, எவைகளை எல்லாம் அழித்தாரோ அவைகள் எல்லாம் பிசாசின் கிரியைகள்தான். பாவம், சாபம், அகால மரணம், வியாதி, வறுமை, சமாதானமின்மை, போன்ற எல்லாவற்றையும் சுமந்து தீர்த்து நமக்கு விடுதலை தந்திருக்கிறார். ஆனாலும் அவைகள் எல்லாமே பிசாசின் கிரியைகள் அல்ல என்று சில கிறிஸ்தவர்கள் வாதிடுகிறார்கள். "பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் சுற்றித்திரிந்தார்" (அப். 10:38) என்ற வசனத்தை எப்படி இவர்கள் நிதானிக்கிறார்களோ தெரியவில்லை. அவர்கள் சொல்வது: "வியாதிகள் பல காரணங்களால் வருகின்றன; எல்லாமே பிசாசால் அல்ல" என்பதாகும். அவர்கள் சொல்லும் காரணங்களைப் பார்ப்போம்.

(1) மோசமான சீதோஷ்ண நிலைகளால் வியாதி வருமாம். (2) அதிகப்படியான உஷ்ணமோ குளிர்ச்சியோ வியாதியை தருமாம். (3) தவறான - மோசமான - உணவு வகைகளை உட்கொள்வதால் வருமாம். (4) காற்றின் மாசுபடிந்த சூழலால் வியாதி வருமாம். (5) புகைபிடித்தல், மதுபானம், ஒழுக்கமில்லாத செயல்பாடுகள் போன்றவற்றில் வருமாம். (6) போதிய சத்துணவு இல்லாததால் அல்லது அதிக சத்துணவு இருப்பதால் வியாதி வருமாம். (7) பௌதிக மற்றும் சூழ்நிலைகளால் வருமாம். "இவைகளெல்லாம் பிசாசால் வந்தால், இப்படிப்பட்ட வியாதியஸ்தர்கள் ஏன் டாக்டரிடம் போக வேண்டும? டாக்டர்களுக்கு பிசாசின் ஆதிக்கத்தை மாற்ற கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறதா?" இதுவெல்லாம் அவர்கள் கேள்விகள். கேட்பதற்கு மிகவும் சரிபோலத் தோன்றும். இவர்கள் பிரச்சனைகளையே சிந்திப்பவர்கள்; பிரச்சனைக்கான காரண கர்த்தாவை சிந்திக்காதவர்கள்.

மேலும், யாக். 5:14-16ன்படி, பாவத்தினால் வியாதி வரலாம் என்றும், பாவ அறிக்கையும் ஜெபமுமே விடுதலை தரும் என்றும் சொல்லுகிறார்கள். அல்லாமலும், யாத். 4:11; உபா. 28:22 போன்ற வசனங்களின்படி தேவனே சில வியாதிகளைத் தருகிறார் என்றும் சொல்லுகிறார்கள். தீமோத்தேயுவுக்கு வயிற்றுப் பிரச்சனையிலிருந்து விடுதலைக்கு, பிசாசை விரட்டச் சொல்லி பவுல் எழுதாமல், திராட்சரசம் குடிக்கத்தானே சொன்னார் என்கிறார்கள் (1 தீமோ. 5:23). மத். 9:12ன்படி பிணியாளிகளுக்கு வைத்தியன்தான் தேவை என்று இயேசு சொன்னாரே ஒழிய, பிசாசைப் பற்றி அவர் சொல்லவில்லையாம்! ஓய்வில்லாமல் உழைத்ததால்தான் எப்பாப்பிராத்தீத்து போல் பலருக்கு வியாதி வருகிறதே அல்லாமல், பிசாசால் அல்லவாம்! (பிலி. 2:27, 30). எலிசா போன்றோர் வியாதியால் மரித்தார்களே அது பிசாசின் தாக்குதலால் அல்லவாம்! (2 ராஜா. 13:14). இப்படி ஏராளம் இவர்கள் சொல்லிக் கொண்டே போய், கூடுமானால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கிறார்கள். எது எப்படியோ வசனமே வெளிச்சம். இதுபற்றி வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

இவர்கள் சொல்வதுபோல், (1) இயற்கையால் வரும் வியாதிகள் (2) தேவன் அனுமதிக்கும் அல்லது தரும் வியாதிகள் (3) பாவத்தால் வரும் வியாதிகள் (4) பிசாசுகள் தரும் வியாதிகள் போன்ற பல தரப்பட்ட வியாதிகளில், எந்த வியாதிகளை இயேசு சிலுவையில் சுமந்து தீர்த்தார்? மத். 8:17; 1 பேதுரு 2:24ன்படி இயேசு எல்லா நோய்களையும் சுமந்து தீர்த்தார்; அவர் தீர்த்தவைகள் அத்தனையுமே பிசாசின் கிரியைகள்தான் என்று 1 யோ. 3:8 சொல்கின்றது. மேலும் "அவர் கொடுக்கிற வியாதி" என்கிறார்களே அதையும்

அவரே சுமந்து தீர்த்தாரா? கொடுப்பதும் அவரே; சுமந்து தீர்ப்பதும் அவரேயா? அப்படியானால் சிலுவை மரணத்திற்குப்பின் அவர் மறுபடியும் வியாதிகளை கொடுக்கமாட்டார்; அனுமதிக்கமாட்டார்; என்றாவது அவர்கள் அறுதியிட்டு சொல்ல வேண்டுமல்லவா! சிந்தியுங்கள். யோ. 10:10; யாக். 1:17; எபே. 2:10; அப். 10:38 போன்ற பல வசனங்களின்படி நம் தேவன் நன்மை செய்பவர் அல்லவா! வியாதி நல்லது என்று யாராவது சொல்ல முடியுமா? யோ. 10:10; யாக். 1:13ன்படி பொல்லாதவைகளைக் கொடுப்பவன் பிசாசுதானே! அப்படியானால் அந்த பொல்லாத வியாதி பிசாசால் தானே! சிந்தியுங்கள்.

வேதத்தின்படி உலகிலுள்ள அத்தனை தீமையான - பொல்லாத காரியங்களுக்கும் அடிப்படை, பாவம், சாபம், பிசாசுதான். யாக். 1:15ன்படி நாம் பிசாசோடு இணைந்து பாவம் செய்கின்றோம். பிசாசு இல்லையேல் நம்மால் பாவம் செய்யவே முடியாது. 1000 வருட ஆட்சியில் பிசாசை கட்டிப் போடுவது அதற்காகத்தானே! பாவத்தாலும் வியாதி வரலாம் (யாக். 5:15); உபா. 11:26 - 28; 30:15,19;28:15ன்படி சாபமான காரியங்கள் வசனத்திற்கு விரோதமான நமது பாவசெயலால்தானே! வசனத்திற்கு விரோதமாய் நம்மை நடக்க வைப்பது பிசாசின் ஆவிதானே! இந்த சாபத்தில் ஒன்றான வியாதிக்கும் பிசாசுதானே காரணம்! மட்டுமல்ல.. நம்மை பாவத்திற்கும் சாபத்திற்கும் உட்படுத்த முடியாத சமயத்தில், பிசாசே நேரிடையாய் தீமையை - வியாதியை - நம்மைத் தாக்க வைக்கும். அதனால் தான் "பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; வல்லமையைப் பெற்று பிசாசை வெல்லுங்கள்" என்று வேதம் சொல்கின்றது. ஆக, பொல்லாத வியாதிக்கு மூலகாரணம் பிசாசுதான்.

பொல்லாத இயற்கை சூழலால், உணவு வகைகளால், பழக்க வழக்கங்களால் வியாதி வரலாம் என்பது சரியே! அந்த பொல்லாத நிலையை கொண்டு வருபவன் பிசாசு தானே ஒழிய தேவனல்ல; "மழையிலே போ.. இந்த உணவை சாப்பிடு.. குடிப்பது உடல் வலியை மாற்றும்" என்றெல்லாம் நம்மோடிருந்து சொல்லிக் கொடுப்பது பிசாசுதானே! பிசாசுக்கு நம்மை அறியாமலே செவி கொடுக்கும் போது தானே தீமைகள் வருகின்றன. தீமைகளில் ஒன்று வியாதி தானே! மேலும் தேவனின் படைப்பெல்லாம் 6ம் நாளோடு முடிந்து விட்டது. படைத்ததெல்லாம் நன்றாகவே இருந்தது (ஆதி. 1:31). அவர் ஊமையனை, செவிடனை, குருடனை படைப்பதே இல்லை. பிள்ளைகளை உருவாக்குவது ஆணும் பெண்ணும்தான்; சுவாசம் தருபவர்தான் தேவன் (ஆதி. 1:26; சங். 104;29; யோபு 33:4). ஆசிரியரின் "கருக்கலான சதியம்" என்ற நூலில் உள்ள "வேத வார்த்தையும் தேவ சித்தமும்" என்ற செய்தியை வாசித்தால், வேதம் எழுதப்பட்ட முறையும்,

தேவசித்தம் இன்னது என்றும் முழுமையாகப் புரிந்து விடும். அப்படி புரிந்து விட்டால், யாத். 4:11; உபா. 28:22 போன்ற வசனங்களெல்லாம் விளங்கிவிடும். படைப்பின் இரகசியம் புரியாத வரைக்கும் இந்த நிலைமைதான் நீடிக்கும். (மேலும் இந்த நூலில் உள்ள, "குருடர்களை, செவிடர்களை தேவன் படைக்கிறாரா?" என்ற செய்தியையும் வாசியுங்கள்)

எலிசா, தீமோத்தேயு, எப்பாப்பிராத்தீத்து போன்றோருக்கு வியாதி வந்ததால் நமக்கும் வரவேண்டுமா? ஓய்வெடுக்காதபடி, திராட்சை ரசம் குடித்து பெலமடையாதபடி, நம்மையறியாமலே நம்மைக் கொடுப்பது பிசாசுதானே! (1 கொரி. 3:17) அதன் தந்திரம் நமக்கு தெரியவேண்டுமே (2 கொரி. 2:11). வியாதி வந்தவர்களைப் பார்த்து தேற்றிக்கொள்ளாதீர்! வியாதி இல்லாமலே வாழ்ந்த ஆபிரகாம். இயேசு, மோசே போன்றோரைப் பார்க்க வேண்டாமா? வியாதியானது சரீரத்திலும் வரும்; ஆவியிலும் வரும்; ஆத்மாவிலும் வரும். வியாதி என்றாலே Disease என்பதாகும்; சுகத்தை நன்மையை அறுபட வைப்பதாகும். சரீர வியாதிக்கு உலக மருந்துகள் உண்டு; அதில்கூட டாக்டர்களாலும் குணமாக்க முடியாத வியாதிகளும் உண்டு. எல்லா சரீர வியாதிகளும் இயேசுவின் தழும்புகளால் சுகமாகும். இந்த விசுவாசத்தோடு, எசேக்கியா ராஜா பிளவையில் அத்திப்பழ அடை போட்டது போல டாக்டரிடம் போகலாம்; தவறில்லை. தெய்வீக சுகமே நாம் பெறுவது. மற்றப்படி, நம் ஆவியிலே பிசாசின் ஆவி பிடித்து விட்டால், தேவ வல்லமையோடு அந்த பிசாசை விரட்ட வேண்டும் (மாற். 16:16; மத். 17:21). அதுதான் ஆடுவதாகும். திமிர்வாதக்காரன், (மாற். 2) இதற்கு உதாரணம். ஆத்மாவில் பிசாசு வரும் போதுதான் கள்ள உபதேசங்களும்பொல்லாத சிந்தனைகளும் பிறக்கின்றன. இவைகள் ஆத்ம நோய்கள். இதற்கு, மனம் மறுரூபமாக வேண்டும் (ரோ. 12:2; யாக். 1:21)

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! வியாதிகள் வரக் காரணம் பாவம், சாபம், சாத்தான் மட்டுமே. பாவமும் சாபமும் சாத்தானின் ஆளுகையால்தான். மற்றப்படி, சாத்தானால் அல்ல என்று பிசாசுக்கு வக்காலத்து வாங்குகிற கூட்டத்தோடு சேராதே! தெய்வீக சுகம், தெய்விக ஆரோக்கியம் நமக்கு வேண்டுமென்பது தான் தேவசித்தம். Thou Shall be prospereth & be in good health (3 யோ. 2).

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

- ★ கருகலான சத்தியம்
- ★ தெரிந்து கொள்ளுங்கள்
- ★ வியாதியா? மரணமா?
- ★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்
- ★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
- ★ கதைகள் அறுபது
- ★ சிறுவர் ஊழியம்
- ★ இஸ்லாமியரின் கேள்விகள்
- ★ உங்களுக்குத் தெரியுமா?

## பாடல் சி.டி

- ★ ஆடியோ : ரூ. 50; வீடியோ : ரூ. 75
- ★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

- ★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)
- ★ தானியேல் (3 சி.டி)

(ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 75/-)

- ★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்
- ★ குரான் சொல்லும் ஈசா தேவனா?
- ★ இயேசு ஏன் வரவில்லை?
- ★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?
- ★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்
- ★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்
- ★ மாறுபாடுள்ள சந்ததி எது?
- ★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?
- ★ குரானில் குளறுபடிகள் உண்டா?
- ★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?
- ★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

- ★ இயேசு வருவாரா?
- ★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?
- ★ எது தேவசித்தம்?
- ★ வியாதி தேவனின் சிட்சையா?
- ★ திரித்துவம் உண்டா?
- ★ அந்நிய பாஷை
- ★ எது ஆவிக்குரிய சபை?
- ★ படைப்பின் இரகசியம்
- ★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?
- ★ தெய்வீக சுகம்
- ★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?
- ★ இயேசுவின் இரத்தம்
- ★ பண்டிகைகள் தேவையா?
- ★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்
- ★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்
- ★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?
- ★ இயேசு சர்வவல்லமையுள்ள தேவனா?
- ★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்
- ★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?
- ★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்
- ★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?
- ★ யார் அந்த 1,44,000 பேர்?
- ★ 70 வார தீர்க்கதரிசனம்
- ★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

❖ ❖ ❖

**இயேசு சீக்கிரம் வருகிறார்!**

**ஆயத்தமாவோம்!!**

**ஆயத்தமாக்குவோம்!!!**



## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதப்பாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...
முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள்
ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம்
போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

# வேதப் பொன்மொழிகள்

- ★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!
- ★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!
- ★ விசுவாசம் வெற்றியைத் தரும்
- ★ Where there is vision there will be provision
- ★ போதக சிட்சையே ஜீவ வழி
- ★ பரிசுத்தமாக்குவது வசனமே
- ★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
- ★ Have positive confession
- ★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு
- ★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?
- ★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்
- ★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு
- ★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி
- ★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்
- ★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்
- ★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல
- ★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை

**Rev.Dr.A.சேவியர்**

**B.Sc.M.A.(Theo).D.D.**

( சுவிஷேசகர்.போதகர்.எழுத்தாளர் )




# ஆசிரியரைப்பற்றி....

1951 ஆம் ஆண்டு மே மாதம் 16ம் நாள். தமிழ்நாடு. திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்கு மகனாய் பிறந்தவர்தான் Rev.Dr.சேவியர்.
குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர்.பி.எஸ்.சி..(கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து. தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து. படிப்படியாய் பதவி உயர்ந்து. டிவிஷனல் இன்ஜினியர் ஆக ஆனார்.

கல்லூரியில் படிக்கும் போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகர பட்டிணத்தை சார்ந்த சி.எஸ்.ஐ சபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.06.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும். ஜெபத்தாலும் ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1981 ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை சம்பந்தமான நோயிலிருந்து 1985-ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி. 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்துவரானார்.
பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தார். செவன்த் டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து. அந்த சபையிலிருந்து வெளியேறி. ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு. ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமங்களில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ட்ஸ் ஊழியம். தெருப்பிரசங்கம். "எப்போதும் வசன விளக்கம்". போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். கடைசி கால விடுதலை முழக்கம் என்ற மாத இதழை ஆரம்பித்து அதன்பின் வசன முழக்கம் என்ற பத்திரிகையை நடத்தினார். விசுவாசம் வெற்றியை தரும் என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும். மாதந்தோறும். வருடந்தோறும் வீட்டிலும். சென்னையிலும். மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்துவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார்.
எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர்.
தேவனின் தரிசனப்படி. கஸ்தூரிபாய் ஆசிரமம். சேவியர் இறையியல் பயிலகம். விடுதலை கிறிஸ்துவின் சபை. விசுவாச கருத்தரங்குகள். ஊழியர் கருத்தரங்குகள். வெப்சைட் T.V,Face Book போன்ற பல ஊழியங்களில் இணைந்து பணி செய்து வருகிறார். தற்போது "விசுவாச முழக்கம்" என்ற மாத இதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப்புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவ ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.


**Folllow Us**

9444979822

endtimedeliveranceministry

youtube/endtimetrust

revdrxavier@gmail.com



Printed by

சத்யம் அச்சகம்

வில்லிவாக்கம், சென்னை 49.

+91 766 7777555